விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 16 செவ்வாய்க்கிழமை (31.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 012

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# தமிழர்களுக்கு தனி நாடு!

## உருவாக வேண்டும் என்கிறார் சிம்ரஞ்ஜித் சிங்



இனப்படுகொலை நடந்தேறிய பின்னர் தமிழர்கள் இலங்கைக்குள் ஒருங்கிணைந்து வாழ்வது இயலாத ஒன்று. வரலாற்றில் தமிழர்கள் பட்ட காயங்கள் ஆழமானவை என்பதால் நல்லிணக்கம் என்பது சாத்தியமில்லை. எனவே தமிழர்களுக்கான தனிநாடு உருவாக வேண்டும் என இந்திய சீக்கியர்களின் காலிஸ்தான் விடுதலை ஆதரவாளரும் சிரோன்மணி அகாலிதள் அம்ரிஸ்டர் கட்சியின் தலைவருமான சிம்ரஞ்ஜித் சிங் மாண் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க...)

## இந். மீனவர்கள் 18 பேர் கைது!

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்து கொண்டிருந்தவேளை யாழ். நெடுந்தீவு கடற்பகுதியில் வைத்து இந்திய மீனவர்கள் 18 பேர் நேற்று திங்கட்கிழமை அதிகாலை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் இராமநாதபுரம், பாம்பன் பகுதியிலிருந்து 3 நாட்டுப் படகுகளுடன் வந்த இந்திய மீனவர்கள் 18 பேரையே கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள 20-ம் பக்கம் பார்க்க

## இந்தியர்களுக்கு இலங்கையில் மரியாதை கிடைப்பதில்லை

### கருணாநிதி கவலை



(சென்னை)

இலங்கையில் இந்தியப் பிரஜைகளுக்கு மரியாதை கிடைப்பதில்லையென திமுக தலைவர் கருணாநிதி கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்.

தமிழக மீனவர் பிரதிநிதிகளை பிரதமரிடமும், வெளியுறவுத்துறை அமைச்சரிடமும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அழைத்துச் சென்று மீனவர்கள் தங்களின் குறைகளை அவர்களிடம் நேரில் எடுத்துச் சொல்லி, பிரதமரும் ஜனவரி மாதம் 20-ம் திகதி வாக்கில் இலங்கை மீனவர் பிரதிநிதிகளையும், தமிழக மீனவர் பிரதிநிதிகளையும் சென்னையிலே பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்த பின்னரும், மீனவர்கள் பலர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்கள் மற்றும் வலைகள், டீசல் ஆகியவற்றையும் பறித்துச் சென்றிருக்கிறார்கள்.

அண்மைக் காலத்தில் மட்டும் இதுவரை 227 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்து கடந்த மூன்று மாதங்களாக சிறையிலே வைத்துள்ளது. அவர்களுடைய 77 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பிரதமரும், வெளியுறவுத்துறை அமைச்சரிடம் பேசி மீனவர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுவ 19-ம் பக்கம் பார்க்க

## விக்னேஸ்வரன் விரைவில் பிரிட்டனுக்கு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபையின் முதலமைச்சரும் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன் பிரிட்டன் நாட்டுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அடுத்த மாதம் முற்பகுதியில் பிரிட்டனுக்கு செல்லும் வடக்கு முதலமைச்சர், பிரதமர் உள்ளிட்ட பல்வேறுதரப்பினருடன் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன கடந்த 02-ம் பக்கம் பார்க்க

## நாட்டை பிளவுபடுத்தும் அதிகாரத்தை வழங்கேன்

### ஜனாதிபதி இறுக்கம்

நாட்டை பிளவுபடுத்துவதற்கு முயற்சிக்கும் எந்தவொரு அதிகாரத்தையும் வழங்குவதற்கு தாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தயாரில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அனைவரும் ஒரே நாடென்ற ரீதியில் செயற்பட வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

தென்மாகாண சபை கட்டடத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கையளிப்ப 19-ம் பக்கம் பார்க்க

## எரிபொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்குமா?

### அமைச்சர் யாப்பா விளக்கம்

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கும் போது இலங்கையிலும் விலைகள் அதிகரிக்கும் என கனிய எண்ணெய் வள தொழிற்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் ஒக்டேன் 90 பெற்றோலுக்கு பதிலாக ஒக்டேன் 92 பெற்றோலை அறிமுகம் செய்வது தொடர்பில் கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை குறையும் போது இலங்கையிலும் அதன் விலைகள் குறைக்கப்படும்.

ஒக்டேன் 90க்குப் பதிலாக ஒக்டேன 92ஐ சந்தைக்கு அறிமுகப் படுத்த பெரும் தொகை பணம் செலவிடப்பட்டுள்ள போதிலும் அந்த செல வின் சுமைகள் மக்கள் மீது சுமத்தப்படமாட்டாது.

தற்பொழுது உள்ள விலையின் படி இந்த பெற்றோல் விற்பனை செய்யப்படும். அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எரிபொருள் விலைகளை அதிகரிக்கும் திட்டம் எதுவுமில்லை.

ஆனால் அதனை 20-ம் பக்கம் பார்க்க

## கைக்குண்டு வெடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஏழாலை வடக்குப் பகுதியில் கிணற்றிருந்து மீட்கப்பட்ட கைக்குண்டு வெடித்து சிதறியதால் அப்பகுதியில் நேற்று பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

குறித்த பகுதியிலுள்ள காணியிலுள்ள பாழடைந்த கிணற்றினை துப்புரவு செய்தபோது வெளிப்பட்ட குப்பைகளை வெளியில் போட்டு எரித்தபோது அதனுள்ளிருந்த மர்மப் பொருள் ஒன்று வெடித்துள்ளது.

இதன்பின்பே மேற்படி கிணற்றிருந்து கைக்குண்டு வெளிப்பட்டது தெரியவந்தது. இருப்பினும் இச்சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்று தெரிவித்த சுன்னாகம் பொலிஸார், இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (செ-6)

## த.தே. கூட்டமைப்பும் மு.காவும் இணைந்து பிரிவினையை ஏற்படுத்த முயற்சி

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரும் சர்வதேசத்துடன் இணைந்து இலங்கையில் பிரிவினையை ஏற்படுத்துவதற்கு துணை போகின்றனர். ஐ.நா. கூட்டத்தில் இலங்கைக்கெதிரான பிரேரணையை நிறைவேற்றுவதோடு சர்வதேச விசாரணையும் நிச்சயம் இடம்பெறும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்க அதிகாரிகள் மூலமாக போர் இழப்பீடுகள் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன இந்தப் புள்ளி விபரங்களில் உண்மைத் தன்மை இல்லை என்கின்றன. இதனை கடுமையாக எதிர்க்கின்றோம். கூட்டமைப்பினதும் முஸ்லிம் காங்கிரஸினதும் இம் முயற்சியானது இலங்கைக்கு எதிராக ஐ.நாவுக்கு உதவி செய்வதே ஆகும்.

அது மட்டுமல்லாது கூட்டமைப்பு வடக்கில் சாட்சியங்களை திரட்டி அறிக்கையொன்றை தயாரித்துள்ளது. இதில் அடங்கிய காணாமல் போனவர்கள் கொலைகள் தொடர்பான தகவல்களில் உண்மையில்லை. இவ்வாறு இலங்கைக்கு எதிராக தயாரிக்கும் அறிக்கையை கனடாவிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் ஊடாக மார்ச்சில் நடை பெறும் ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழு மாநாட்டில் சமர்ப்பிக்கப் போகின்றனர்.

இதற்கு அரசின் பங்காளிகளாக இருக்கும் முஸ்லிம் காங்கிரசும் துணை போகின்றது. இது தேச விரோத 20-ம் பக்கம் பார்க்க

ஈஸ்வரன் பயணிகள் போக்குவரத்துச் சேவை



அதி சொகுசு பஸ்
~~1300/-~~ - 1000/-
எமது ஆசனப் பதிவகங்களில் மட்டும் பதிவுகளை மேற்கொள்ளவும்.
எமக்கு இடைத்தரகர்களோ முகவர்களோ இல்லை
யாழ். : 0777 806 573
கொழும்பு : 0777 806 583
முறைப்பாடுகளுக்கு : 0777674119 0777806574
69,115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2018, டாம் வீதி, கொழும்பு - 12
(C-6024)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சாரதி நியமனம் தொடர்பில்

# வலம்புரியின் செய்திக்கு பிரதம செயலாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட சாரதிகளுக்கு நீதி கிடைக்காவிட்டால் நடவடிக்கை.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவமோகன் தெரிவிப்பு என நேற்றைய வலம்புரியின் 16ஆம் பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி விரிவான விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்த விளக்கம் அப்படியே இங்கு தரப்படுகின்றது.

வடமாகாணசபை பிரிக்கப்பட்ட காலகட்டத்தில் காணப்பட்ட சாரதி மற்றும் அலுவலகப் பணியாளர் வெற்றிடங்களுக்கு உடனடியாக போட்டிப் பரீட்சை நடத்த முடியாதநிலைகாணப்பட்டது.

எனினும் உடனடியாக இவ் ஊழியர்களுடைய சேவையின் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு மாற்று ஏற்பாடாக பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் ஊடாக உடன்படிக்கை செய்யப்பட்டு வெளிவாரி அடிப்படையில் தேவையான ஊழியர்கள்பெறப்பட்டனர்.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 20 / 2009இற்கமைவாக 2009.10.31ஆம் திகதிக்கு பின்னர் அமைய, ஒப்பந்த, பதிலீட்டு அடிப்படையில் எந்தவிதமான நியமனங்களும் மாகாண பொது நிர்வாக செயலகத்தினால் வழங்கப்படவில்லை.

மேலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் சகலபதவியணிகளும் மீள் செயலாக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் இத் திகதிக்குப் பின்னர் நடைபெறும அனைத்து ஆட்சேர்ப்புகளும் அனுமதிகப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு அமைவாகவே மேறகொள்ளப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதற்கமைவாக வடமாகாண இணைந்தசேவையைச் சேர்ந்த சாரதி சேவையின் வகுப்பு III க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக திறந்த போட்டிப் பரீட்சைக் குரிய விண்ணப்பங்கள் 19.03.2013ஆம் திகதிய விளம்பரப் படுத்தலினூடாக கோரப்பட்டதற்கு அமைவாக போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு செய்முறைப் பரீட்சையும் நடத்தப்பட்டது.

முகாமைத்துவ சேவைகள் திணைகளத்தின் அனுமதிக்கு அமைவாகவும் மாகாண சாரதி ஆட்சேர்ப்புத் திட்டதிற்கு அமைவாகவும் மாவட்டங்களின் வெற்றிடங்கள் அடிப்படையில் பரீட்சார்த்திகள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வெட்டுப்புள்ளிகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெட்டுப்புள்ளிகள் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டிருக்கிறது.

இதனடிப்படையில் 97 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக் கான நியமனங்கள் 2014.01.01 ஆம் திகதி முதல் கௌரவ ஆளு நரின் அனுமதிக்கு அமை வாக வழங்கப்பட விருக்கிறது.

விபரங்கள் வருமாறு.

| இல | மாவட்டம் | மாவட்ட அடிப்படையிலான வெட்டுப்புள்ளி | நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தோர் | செய்முறைப் பரீட்சையில் சித்தியடைந்தோர் |
|---|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணம் | 170 | 61 | 59 |
| 2. | கிளிநொச்சி | 165 | 15 | 13 |
| 3. | முல்லைத்தீவு | 170 | 09 | 08 |
| 4. | வவுனியா | 17 | 08 | 06 |
| 5. | மன்னார் | 179 | 11 | 11 |
| | மொத்தம் | | 104 | 97 |

வெளிவாரியாக, பல நோக்கு கூட்டுறவு சங்கங்களினூடாக சாரதியாக கடமை புரிவதற்கு தரப்பட்டிருந்த ஊழியர்களில் 09 பேர் மேற்படி தகைமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். பல நோக்கு கூட்டுறவு சங்கங்களுடனான உடன்படிக்கை 2009 ஆம் ஆண்டு முதல் தேவையைப்பொறுத்து காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் தற்போதைய உடன்படிக்கை 30.09.2013 இல் கௌரவ ஆளுநரினால் 2013.12.31 வரை செய்து கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந் நியமனங்கள் யாவும் மாகாண சாரதி சேவை ஆட்சேர்ப்பு, விதிகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம். இவ் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்குமாறாக ஏதாவது முறைகேடுகள் காணப்படுமிடத்து எங்களது கவனத்திற்கு கொண்டுவருவது சாலச் சிறந்ததாகும்எனவும் அதில தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## விக்னே...

மாதம்15 ஆம்திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது விடுத்த வேண்டு கோளையடுத்து முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன அந்நாட்டுக்கு பயணம செய்யவுள்ளார்.

இதேவேளை இந்தியப்பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் விடுத்த வேண்டு கோளுக்கு அமைவாக அந்நாட்டுக்கும முதலமைச்சர்செல்லவுள்ளார். இதன்போது இந்திய இலங்கை மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர பிலும் பேச்சு நடத்தவுள்ளார் என்று தெரிய வந்துள்ளது. (செ-6)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**29-வது பொதுப் பட்டமளிப்பு**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 29ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா 10.01.2014, 11.01.2014 ஆகிய இருதினங்களும் நடைபெற இருப்பதால் இதுவரையிலும் பட்டமளிப்பு விழாவிற்கு விண்ணப்பிக்காத கலைப்பீட மாணவர்கள் 03.01.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அதற்குரிய விண்ணப்பத்தைப் உரியமுறையில் பூர்த்தி செய்து உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** என்ற முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

பதிவாளர்

(C-6018)



CAMBRIDGE ENGLISH
Language Assessment
Part of the University of Cambridge

**PET** PRELIMINARY ENGLISH TEST (PET)

August மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞானமுகாமைத்துவம் போன்ற பாட நெறிகளை பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக் கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமுமின்றி விவுரைகளைக் கேட்கவும், ஒப்படைகளை எழதவும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள அரிய சந்தர்ப்பம்.

உடனடியாக : BRITISH Council இன் ஆதரவுடன் 01.01.2014 ல் ஆரம்பிக்கவிருக்கும் Cambridge - Prelimnary English Test (PET)வகுப்பில் சேருங்கள்.

* இது ஒர் Intermediate B1, Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன
* நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும் PET=B1
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாட நெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்



Exam Fee : Rs.8300/=
Exam Date: 15-03-2014

Subjects : Reading, Writing, Listening, Speaking
நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழு வதும் எழத, வாசிக்க, பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

Course Schedule

| | Mon,Tuse,Wed,Thur | Saturday&Sunday |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.30-10.30; 10.30-12.30 | 2.00-5.00 |
| Exam fee | Rs.8300 | |

புதிய பிரிவுகள் 01-01-2014 இல் ஆரம்பமாகும்.

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna.
(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 075 543 5089 , 077 880 3887

(C-6020)


# மரண அறிவித்தல்

## இராஜதுரை இலட்சுமி

**வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜதுரை இலட்சுமி அவர்கள் 30.12.2013 திங்கட்கிழமை காலமானார்.**



அன்னார், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் இராஜதுரையின் அன்பு மனைவியும், சுப்பிரமணியம் குஞ்சுப்பிள்ளை, சின்னக்குட்டி தங்கம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கெங்காதரன் (இத்தாலி), மனோகரன் (இத்தாலி), பிறேமகுமாரி (இத்தாலி), இராஜசுலோஜனா (சுவிஸ்), விஜயகுமாரி (சுவிஸ்), தர்சினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், தர்மகுலசிங்கம் (குலம்-இத்தாலி), தவம் (சுவிஸ்), யோகலிங்கம் (உத்தமன்-சுவிஸ்), வடிவேல் (சுவிஸ்), தர்சினி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மிதுனா, றதுனா, சாருஷன், டினோஜன், அனோஜன், ஜீவிதன், யோர்சா, அனோமி, விகாஸ், கவீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31.12.2013 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வரணி இயற்றாலை,
வரணி.

தகவல்
குடும்பத்தினர்
021 373 5693

(C-6023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனிதனும் நம்பிக்கையும்!

ஒரு பெரியவர் புகையிரதத்திலே பயணம் செய்து கொண்டிருந்தார். ஏதோ ஒரு புகையிரத நிலையத்தில் நீண்ட நேரம் தரித்து நின்றது. பிச்சைக்காரன் ஒருவன் யாசகம் செய்து கொண்டு ஜன்னல் ஓரமாக வந்து நின்றான். அந்தப் பெரியவரைப் பார்த்தான்.

''ஐயா... எனக்குப் பெரிய கஷ்டம்!'' என்று ஆரம்பித்தான். அதுக்குள்ளே இந்தப் பெரியவர் அவனைத் தடுத்தார்.

''இதோபார்... உன்னுடைய கஷ்டத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக் காதே... அதனாலே உன்னுடைய நேரமும் வீண். என்னுடைய நேரமும் வீண். நான் என்ன செய்ய முடியும். அதை மட்டும் சொல்!'' என்றார்.

அவனுக்கு சந்தேகம். ஒரு மாதிரியாக முழிக்க ஆரம்பித்தான். ஏனென்றால் அவனுக்குத் தெரியும்...

தன்னுடைய கஷ்டத்தைச் சொல்லி அழுதாத்தான் கேட்கிறவர்கள் நம்புவார்கள்... காசு போடுவார்கள். ஆனால் இவர் ஆரம்பத்திலேயே நான் என்ன செய்ய வேண்டும் என்கிறாரே... எவ்வளவு நம்பிக்கை நம்மில் உள்ளது என்று நினைத்தான். மெதுவாக துணிச்சலை வரவழைத்துக் கொண்டு ''ஒரு ரூபாய் கொடுங்கள்!'' என்றான்.

பெரியவர் கொடுத்தார். இவன் வாங்கிக் கொண்டு போய்விட்டான். போகும்போதே யோசித்தான்.

''இவர் நமது கதையை கேட்காமலே... நமக்கு கஷ்டம் தான் என நம்பி காசு கொடுத்து விட்டார். ஆனால் பல பேருக்கு நமது முழுக் கதையையும் கேட்டதற்கு பின்னரும் நம்மில் நம்பிக்கை வருவதில்லை! பொய் சொல்றோம் என்று நினைக்கிறார்கள். காசு கொடுக்க மாட்டேன் என்கிறார்கள்!''

அப்படி என்று நினைத்துக்கொண்டு போய்விட்டான்.

ஒரு ஐந்து நிமிடம் சென்ற பின்னர் அவனே திரும்பி வந்தான்... வேறொரு உருவத்திலே!

ஆமாம் இப்போது தலையிலே ஒரு குல்லா... முகத்திலே ஒரு மீசை... அவனா இவன்? என்று அடையாளம் தெரியாத அளவுக்கு மாறியிருந் தான்.

அதே பெரியவரிடம் வந்தான்...

''ஐயா... நான் ஒரு பெரிய கஷ்டத்திலே இருக்கிறேன்!'' என்று ஆரம்பித்தான். பெரியவர் தடுத்தார்.

''இதோபார்... உன்னுடைய கஷ்டத்தைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டாம்... நான் என்ன செய்ய வேண்டும்? அதை மட்டும் சொல்!'' என்றார்.

அவன் இவரை ஆச்சரியமாக பார்த்தான். இவர் என்ன பைத்தியமா என்று நினைத்தான். நம்மளை அடையாளம் தெரியவில்லையா அதுக்குள்ளே மறந்து விட்டாரா என்று குழப்பம்! இருந்தாலும் மறுபடியும் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, ''எனக்கு இரண்டு ரூபாய்'' என்றான்.

''இந்தா இரண்டு ரூபாய்!'' என்று கொடுத்தார்.

வாங்கிக்கிட்டு போய்விட்டான். சிறிது நேரம் கழித்து மறுபடியும் வந்தான்... வேறு ஒரு வேடத்திலே...! இப்போது ஒரு பழைய கோட் வேறு போட்டிருந்தான். மெதுவாகப் பெரியவர் முன்னால் வந்து நின்றான். அவனைப் பார்த்ததும் இந்தப் பெரியவரே ஆரம்பித்தார்...

''இதோ பார்... உன் கஷ்டத்தைப் பற்றி ஆரம்பிக்கவே வேண்டாம்!'' என்றார்.

அவன் ஆச்சரியமாக இவரைப் பார்த்தான்.

''என்ன பெரியவரே! உங்களை நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது! உங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா? நான் அதே மனிதன் தான்!'' என்றான்.

பெரியவர் சொன்னார்.

''இதோபார்! நீ அதே மனிதன்தான் என்பது எனக்குத் தெரிகிறது...! அதே மனிதன்தான் நீ என்பதும் உனக்குத்தான் தெரியவில்லை போலுள்ளது என்று நினைத்தேன்!'' என்றார்.

இவன் பார்த்தான். ''இதோ நீங்கள் கொடுத்த மூன்று ரூபாய்!'' என்று நீட்டினான்.

''வேண்டாம்... அதை நீயே வைத்துக்கொள்... அது நீ சம்பாதித்தது!'' என்றார்.

அவன் அதைக் கேட்காமல் ... மூன்று ரூபாயை ஜன்னலாலே வைத்து விட்டான். ''இதை நான் எடுக்க மாட்டேன்'' என்று கூறினான்.

''ஏன்... எடுத்துக்க மாட்டேன் என்கிறாய்?'' என்று கேட்டார்.

அவன் சொன்னான்.

''என்னை நம்புகின்ற ஒரு மனிதரை நான் ஏமாற்றக் கூடாது!'' என்று சொல்லிவிட்டு கூட்டத்தோடு கூட்டமாக கலந்து விட்டான்.

இது பெரியவருக்கு (ஒஷோ) ஏற்பட்ட ஓர் அனுபவம். மனித இயல்பு என்ன தெரியுமா?

ஒரு மனிதன் நம்மளை ஏமாற்றி விட்டான் என்றால் நாம் உடனே ஒரு முடிவுக்கு வருகிறோம். இனிமேல் வந்த மனிதனையும் நம்பக் கூடாது என்று.

இது ஒரு விவேகமான முடிவு இல்லை என்கிறது அந்தப் பெரியவர் சொல்கின்ற கருத்து.

இன்றைக்கு நம்மை ஏமாற்றியவன் நாளைக்கும் நம்மை ஏமாற்றுவான் என்கின்ற அவசியமில்லை.

ஒரு மனிதன் செய்கின்ற தவறுக்கு ஒட்டுமொத்தமாக மனித வர்க்கம் மீதே நம்பிக்கை இழந்து விடக்கூடாது. நடந்து போறோம். ஒரு இடத்திலே கால் இடறுகிறது... உடனே உலகம் பூரா இடறிவிடும் என்று முடிவு கட்டலாமா? இதுதான் அவர் கேள்வி!

இப்படியெல்லாம் யோசிக்காததால்தான் இன்றைக்குப் பலபேர் வாழ்க்கையை அவநம்பிக்கையோடவே கழித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தக் காலத்து கதையெல்லாம் எப்படி இருக்கிறது தெரியுமா?

ஒரு பெரியவரைத் தேடி ஒருத்தன் வந்தான்.

''ஐயா... என்னை ஞாபகம் இருக்கிறதா?'' என்றான்.

''இல்லையே!'' என்றார்.

''ஒரு 10 வருடத்துக்கு முன்னால்... நான் வாழ்க்கையிலே ரொம்ப கஷ்டப்பட்டு உங்களிடம் வந்தேன். நீங்கள்தான் அப்போது ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்து என் வாழ்க்கையிலே விளக்கேற்றி வைத்தீர்கள்!'' என்றான்.

''அது பரவாயில்லை... அதுக்காக எல்லாம் இப்படி வந்து நன்றி சொல்ல வேண்டும் என்று அவசியமில்லை!'' என்றார் இவர்.

''நான் அதற்காக வரவில்லை ஐயா! அதே மாதிரி இன்னொரு தடவை என் வாழ்க்கையிலே விளக்கேற்றி வைக்க முடியுமா? என்று கேட்பதற்காக வந்தேன்!'' என்றான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# இந்தியாவில் பட்டங்களை தொடர்வோர் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசினூடாக இளமாணி, முதுமாணி மற்றும் கலா நிதிப் பட்டங்களை இந்தியாவில் தொடர்வதற்கு கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவையின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 180 புலமைப் பரிசுகளை அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் **நேரு ஞாபகார்த்த புலமைப் பரிசில்** திட்டத்தின் கீழ் மருத்துவம் தவிர்ந்த ஏனைய இளமாணிக் கற்கைகளான பொறியியல், விஞ்ஞானம், வியாபாரம், பொருளியல் மனிதப் பண்பியல் மற்றும் கலைகள் உள்ளிட்ட பாடங்களுக்கு 100 இடங்களும் **மௌலானா ஆசாத் புலமைப் பரிசில்** திட்டத்தின் கீழ் முதுமாணிக் கற்கைக்காக பொறியியல், விஞ்ஞானம், வர்த்தகம், வியாபாரம், பொருளியல் மனிதப் பண்பியல் மற்றும் கலைகள் உள்ளிட்ட பாடங்களுக்கு 50 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எனினும் பொறியியல், விஞ்ஞானம் மற்றும் விவசாய கற்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுதேச வைத்தியம் உள்ளிட்ட மருத்துவக் கற்கைகள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

மேலும் **ராஜீவ் காந்தி புலமைப் பரிசில்** திட்டத்தின் கீழ் தகவல் தொழில்நுட்பத்துறையில் பொறியியல் இளமாணிப் பட்டம் ஆகிய இளமாணிப் பட்டங்களுக்கு 25 இடங்களும் **பொதுநலவாய புலமைப் பரிசில்** திட்டத்தின் கீழ் மருத்துவம் தவிர்ந்த ஏனைய பாடங்களில் முதுமாணி மற்றும் கலா நிதிப்பட்ட ஆய்வுக்கு 5 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசானது இப்புலமைப் பரிசில்களுக்கு இலங்கைப் பிரஜைகளை திறமை அடிப்படையில் தெரிவு செய்யவுள்ளது. இந்தியாவின் மிக உயர்ந்த ஒரு சில பல்கலைக்கழகங்களில் ஆய்வு உள்ளிட்ட உயர் கல்வி கற்பதற்காக இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சினுடைய ஆலோசனைகளின்படி புலமைப்பரிசில் பெறுநபர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

அத்தோடு அனைத்துப் புலமைப்பரிசில்களும் கல்விக் காலம் முழுமைக்குமான முழுமையான கல்விக் கட்டணத்துடன் மாதாந்த செலவுப் படிகளை உள்ளடக்கியிருப்பதுடன் மேலும் தங்குமிடக் கொடுப்பனவுடன் புத்தகம் மற்றும் காகிதாதிக்கான ஒரு வருடாந்தக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது. இவை தவிர இந்தியாவிலுள்ள கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவையின் அனைத்துப் புலமையாளருக்கும் சிறுசிறு உதிரி நன்மைகளுக்கு மேலாக முழுமையான சுகாதார வசதிகள், இந்தியாவில் மிகக் கிட்டிய விமானநிலையத்திற்கான விமானப் பயணச் சீட்டு கட்டணம், நாட்டின் பல பாகங்களுக்கான கல்விச் சுற்றுலாவுக்கான வருடாந்தக் கொடுப்பனவு என் பன வழங்கப்படும்.

இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சின் ஊடாகவே பயனாளர் தெரிவுகள் இடம் பெறும். இலங்கை அரசின் உயர் கல்வி அமைச்சு தகுதி வாய்ந்தவர்களிட மிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது. உயர்கல்வி அமைச்சின் இணையத்தளமான www.mohe.gov.lk எனும் முகவரியிலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட மேற்படி நான்கு வகைப் புலமைப் பரிசில்களுக்குமான விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும்.

தெரிவு செய்யப்படக் கூடிய தகைமை வாய்ந்தவர்கள் தெரிவு நடைமுறை மற்றும் தகைமை நிபந்தனைகள் பற்றி அறிய இலங்கை அரசின் உயர்கல்வி அமைச்சை அணுகவும். விருப்பமுள்ளவர்கள் புலமைப் பரிசில் பற்றிய மேலதிக விபரங்களை பெறுவதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகத்தை அணுகலாம்.

அத்துடன் தூதரக இணைய தளத்திலும் (www.cgijaffna.org) பார்வையிடலாம் என குறிப்பிடப் பட்டுள்ளது. (அ-9)

# இராசி பலன்

31.12.2013
(மார்கழி 16, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
சதுர்தசி முன்னிரவு 7.50 மணிவரை
கேட்டை பிற்பகல் 1.16 மணிவரை
இராகுகாலம் 3.29-4.59 மணிவரை
சுபநேரம்- 10.59-12.29 மணிவரை
போதாயன அமாவாசை

**மேடம்** காலையில் சல சலப்பும், மாலையில் கல கலப்புமாக இருக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், குடும்பத்தில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை.

**மிதுனம்** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், நண்பர்கள் சந்திப்பால் பரவசம் அடைவீர்கள், விரும்பிய பொருள் ஒன்றைவாங்கும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, பகை விலகி பாசம் கூடும் நாள், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**சிங்கம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், இல்லத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும், வாகன சுகமுண்டு, சுபசெலவுகள் கூடும்.

**துலாம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தில் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், சுபகாரியப் பேச்சுகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** மனக்கிலேசங்கள் கூடும், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சிக்கனத்தை கடைபிடிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, பயணங்களால் வழக்கமான பணிகளில் தாமதம் ஏற்படலாம்.

**கும்பம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள்.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், நம்பிக்கைகள் நடைபெறும் நாள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 70 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 120 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 90 | 80 | 100 |
| தக்காளி | 40 | 60 | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 |
| கோவா | 15 | 20 | 40 | 40 |
| கரட் | 35 | 30 | 60 | 80 |
| பூசணி | 25 | 25 | 25 | 40 |
| புடோல் | 35 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 120-180 | 160 | 160 | 150 |
| பெரிய வெங்காயம் | 60-100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 120 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 30 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 40 | 50 |
| பயற்றங்காய் | 60 | 60 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 70 | 80 | 100 |
| பீற்றூட் | 70 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 | 130 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 400 | - | — |
| போஞ்சி | 70 | 60 | 80 | 70 |
| கத்தரி தம்புள்ள | 50 | - | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 | 35 |
| தேசிக்காய் | 60 | 50 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 30 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 120 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி பொதுச் சந்தைக்கு நிதியொதுக்க தீர்மானம்

(கரணவாய்)

உடுப்பிட்டி சந்தை திருத்த வேலைகளுக்காக சபையின் 2014ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தினூடாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு கரவெட்டி பிரதேச சபையினர் தீர்மானித்துள்ளனர்.

உடுப்பிட்டி சந்தையின் பின்பக்கமாகவுள்ள பாதை திறந்திருப்பதால் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக சபையில் முன்வைக்கப்பட்டது.

இதையடுத்து, அப்பாதைக்கு கேற் அமைத்துக்கொடுப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானித்தது.

அத்தோடு, சந்தை கடைத்தொகுதிகளும் இராஜகிராமம் கடைத்தொகுதிகளும் தொடர்ந்து பூட்டப்பட்டிருப்பதனால் கடைகளைத் திறப்பதற்கு அறிவித்தல் வழங்குவது எனவும் தவறும் பட்சத்தில் கடைகளை சபை பொறுப்பேற்கும் எனவும் தீர்மானித்துள்ளது.

(அ-9-60)







நன்றி:-மிரர்

# மீனவர்களின் பிரச்சினை குறித்த பேச்சுக்களில் வடக்கு மீனவர்களும் இடம்பெற வேண்டும்

## எமிலியாம்பிள்ளை தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்திய-இலங்கை மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு வடபகுதி மீனவர்கள் அழைக்கப்படாவிட்டால் சுமுகமான தீர்வு எட்டப்படமாட்டாது என யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கிற்கும் மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பையடுத்து இருநாட்டு மீனவர்களுடைய பிரச்சினைகள் குறித்து எதிர்வரும் 20 ஆம் திகதி பேச்சுவார்த்தை இடம் பெறவுள்ளதாகவும் இதன்போது சுமுகமான தீர்வு எட்டப்படும் என்று நம்பிக்கை வெளியிட்டார் எனவும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

மீனவர் பிரச்சினை தொடர்பில் இரு நாடுகளும் பேசுவதனால் சுமுகமான தீர்வு எட்டப்படமாட்டாது. மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து மீனவர்கள் தான் பேச வேண்டும்.

எனவே எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள பேச்சு வார்த்தைக்கு இலங்கையின் வடபகுதி மீனவர்களுக்கு அழைப்பு விடப்படவில்லையென்றால் சுமுகமான தீர்வு எட்டப்பட மாட்டாது.

மேலும் இந்தியப் பிரதமர் எதிர்வரும் 20 ஆம் திகதி பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக அறிவித்தும் கூட இலங்கை கடற் பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் அந்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து கச்சதீவுக்கு அருகே மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த இந்திய மீனவர்கள் 22 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்ததுடன் அவர்கள் பயணித்த 6 ரோலர் படகுகளையும் கடற்படையினர் பறிமுதல் செய்தனர்.

இந்த 22 மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இக் கைது நடவடிக்கைகள் இரண்டு தரப்பாலும் மாறிமாறி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் இரண்டு நாட்டு மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளும் பாதிக்கப்படுவதோடு பல இலட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களும் சேதமாக்கப்படுகின்றன.

இந்த நிலையில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் சுமுகமானதொரு தீர்வு எட்டப்பட வேண்டும்.

அதனை எட்டுவதற்கு வட பகுதி மீனவர்களுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும்.

அழைப்பு விடுத்தால் தாம் செல்லத் தயாராகவிருப்பதாகவும் எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

மேலும் இந்திய மீனவர்கள் கடல் எல்லை தெரியாமல் தான் வருகின்றனர் என்று கூறப்படுவதில் எந்தவிதமான உண்மையும் இல்லை.

போரினால் அதிகளவு பாதிக்கப்பட்ட மாகாணமாக வட பகுதி காணப்படுகின்ற நிலையில் பொருளாதார ரீதியில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தென்னிந்திய மீனவர்களின் வருகை அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# கால்நடைகளுக்கு கால்வாய் நோய்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள தெல்லிப்பழை, கோப்பாய், சுழிபுரம் போன்ற பிரதேசங்களிலுள்ள மாடுகளில் கால்வாய் நோய் அறிகுறிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதால் மக்களை விழிப்புணர்வுடன் செயற்படுமாறு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

மாடு, ஆடுகளில் குளம்பு, வாய்ப் பகுதிகளில் புண்கள் காணப்பட்டால் உடனடியாக கால்நடை வைத்தியர்களுடன் தொடர்பு கொண்டு சிகிச்சை பெற்றுக் கொள்வதோடு கால் நடைகளுக்கு தடுப்பூசி போடாதவர்கள் கால்நடை வைத்திய நிலையங்களுடன் தொடர்பு கொண்டு போட்டுக் கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (அ-9)

## வடமராட்சி கிழக்கிற்கான

# மின்விநியோகம் இதுவரை முழுமை பெறவில்லை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கு வழங்கப்பட்டுள்ள மின்சாரத்தை அனைவரும் பெற முடியாத நிலை காணப்படுவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.


மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரைக்கும் வடக்கின் வசந்தம் கிராமிய மின்னெழுச்சித் திட்டத்தின் கீழ் இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆயினும் இச் சேவை அனைத்து மக்களுக்கும் கிடைக்கவில்லையென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறாக மின்சாரம் கிடைக்காத மக்கள் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்களைப் பூர்த்தி செய்து பிரதேச மின்சார சபையினருக்கு அனுப்பி வைத்து சுமார் ஏழு மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதையடுத்து வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தனிடம் பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சபை உறுப்பினர் வடமராட்சி பிரதேச மின் அத்தியட்சகரிடம் இம்மாதம் முதற்பகுதியில் இது தொடர்பில் கேட்ட போது கடந்த 24 ஆம் திகதி மின்சாரம் வழங்கப்படுமென உறுதியளித்திருந்த நிலையில் இன்னும் மின்சாரம் முழுமையாக விநியோகிக்கப்படவில்லையென மக்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கிற்கு முதன்முறையாக மின்சாரம் விநியோகிக்கும் நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டு ஒருவருடம் கடந்துள்ள நிலையில் அதனை அனைவருக்கும் ஏன் வழங்கவில்லையென பாதிக்கப்பட்டவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (அ-9-64)





வலி.மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வு நேற்று சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் சித்தன்கேணி சிவன்கோயில் சபா.வாசுதேவக் குருக்கள் மங்கல விளக்கேற்றுவதையும் கலைஞர் ஒருவரை வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை துணைவேந்தர் பதவி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள்/ பெயர்மொழிவுகளுக்காக அழைப்பு விடுகின்றது. பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி/பெயர் மொழியப்பட்டவர் நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அதுவரை பதவி வகிப்பார்.

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி ,புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னத நிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்நோக்காகும். உயர்கல்வியின் தரநிலையை உயர்த்துவதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்திவரக் கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல்கலைக்கழகம் ஏழு பீடங்களையும் வவுனியாவில் அமைந்த வளாகத்துடன் அமைந்த இரு பீடங்களையும் கொண்டமைந்து ஏறத்தாழ ஐயாயிரம் பட்டதாரி மாணவர்களையும் 600 உயர் பட்டதாரி மாணவர்களையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கிவருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக்கைகளுக்கு வலுவூட்டித்துணை புரியுமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் தனது அறிவுசார் வல்லமை மற்றும் மேலாண்மை என்பவற்றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழத்தின் உயர்நோக்கு மற்றும் அதன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர் நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங் காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மேம்பாடு உள்ளடங்கலாக கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்களைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவர் கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற்திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப் படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல், ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக்கொண்ட காரியத்தின் தன்மையைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர்நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 10% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

விண்ணப்பங்கள்/ பெயர் மொழிவுகளுடன் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.

1.பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல்.

2.விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவர் பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம். தற்போது பதவி வகிப்பவர் விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவராயின் அவர் தான் தன்னுடைய (முதலாவது) பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர்காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையில் அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.

3.பெயர் மொழிவுகளாயின் பெயர் மொழியப்பட்டவரின் இணக்கக் கடிதம்.

4.விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவர் அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள்,நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள் பெயர் மொழிவுகள் பேரவைச் செயலாளர், பதிவாளர் செயலகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு மூடிய கடித உறையில் 12.02.2014 அன்று பி.ப 3.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துணைவேந்தர் பதவி' எனக் குறித்திருக்க வேண்டும்.

**முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படா.**

பதிவாளர் செயலகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
30.12.2013

விசுவநாதன் காண்டீபன்
பதிவாளரும் பேரவையின் செயலாளரும்

(கு-6018)

# தனது குடியுரிமை குறித்து பரீட்சிக்க தேர்தல் களத்தில் சரத் பொன்சேகா

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, மேல் மாகாண சபைத் தேர்தலில் வேட்புமனுவை தாக்கல் செய்து தனது குடியுரிமை தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பை பெற எதிர்ப்பார்த்துள்ளதாக தெரியவரு கிறது.

பொன்சேகாவின் குடியுரிமை பறிககப்பட்டுள்ளதால் அவர் தேர்தலகளில் போட்டியிட முடியாது என ஜனநாயகக கட்சியை சேர்ந்த அவருக்கு நெருக்கமான உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

எனினும் பொன்சேகா தேர்தலில் போட்டியிட வேட்பு மனுவை தாக்கல் செய்தால் அதனை நிராகரிக்கும் அதிகாரம் தனக்கு இல்லை எனவும எவராவது அதனை சவாலுக்கு உட்படுத்தினால் நீதி மனறத்தை நாடி தீர்ப்பு ஒன்றை பெற வேண்டும் என தேரதல் ஆணையாளர், பொன் சேகாவின் அதிகாரிகளுக்கு அறி வித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிட பொன் சேகாவுக்கு அனுமதி யில்லை என நீதிமன்றம் தீர்பபு வழங்கினாலும் வேடபு மனுவில் இருக்கும் ஏனைய வேட்பாளர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது எனவும் இதனால் வேட்பு மனு நிராகரிக்கப்பட மாட்டாது என தேர்தல் ஆணையாளர் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தநிலையில் பொன்சே கா வன்மனைவி அனோமாபொன் சேகா ஜனநாயகக்கட்சியின் சார்பில் மேல் மாகாணசபை தேர தலில் போட்டியிட போவதாக வதந்திகள் பரவியிருந்தன.

எனினும் எதிர்வரும் மேல மாகாணசபைத்தேர்தலில்போட்டியிடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டால்மட்டுமே தான்போட்டியிட போவதாக அனோமா பொன்சேகா கூறியுள்ளார்.

மேல்மாகாணசபையின்முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடு மாறு சரத்பொன்சேகாவோ கட்சியினரோ தம்மிடம் இது வரை கோரிக்கை விடுக்க வில்லை என் றும் அனோமா குறிப்பிட்டுள்ளார். (அ)


## விற்பனைக்கு

500, பூவசரங் கதியால்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 021 205 4809

(5187)


## சாயி நிலையத்தில் புத்தாண்டு நிகழ்வு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு முன்பாக இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை புதன்கிழமை காலை 6 மணி முதல் 7.15 மணி வரை புத்தாண்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதில் பஜனை, நாம ஜெபம், விசேட சொற்பொழிவு என் பன இடம்பெற வுள்ளன.

வட பிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுவின் தலைவர் வைத்திய கலா நிதி ஆர். கணேசமூர்த்தி புத்தாண்டுக்கான சாயி சிந்தனைகள் எனும் பொருளில் விசேட சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (அ)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
03.11.1948



மறைவு
28.12.2013

அமரர் இராசையா நித்தியானந்தன்
(கிராம அலுவலர் J/141)

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
கருணையின் இருப்பிடமாய் ஏழைகளின் நண்பனாய்
இரக்கத்தில் விருட்சமாய் வாழ்ந்து
அகவை 65 இல் பிரிவு உபசாரத்தின் போது மேடையில்
வீற்றிருந்த விழா நாயகனே பிரிய மனமின்றி உமது கூட்டை
விட்டு விட்டு இறைவன் திருப்பாதம் சென்றதேனோ? உங்கள்
ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

தலைவர் :- பரிபாலன சபையினர், அரசடி
சித்தி விநாயகர் ஆலயம், சண்டிலிப்பாய்.

(5192)



## ஆறவியலாத 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



சின்ன வயதில் குடும்பச்
சுமை சுமந்தாய்
அன்பாக அனைவரையும்
அரவணைக்கும் ஆருயிரே
சொன்ன சொல் தவறாது
துணிவு கொண்டவனே
என்றும் உன் நினைவில்
ஏங்கித் தவிக்கின்றோம்

இரகுபதி திருமால்

தாய் மடியில்
29.03.1979

தாய் மண் மடியில்
31.12.2008

இல.37/1 சிவநகர்.
உருத்திரபுரம்.

பிரிவால் துயருறும்,
-குடும்பத்தினர்

(சி-6017)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடும் சேவை

வவுனியா பிரதேச செயலகமும் Child First நிறுவனமும் இணைந்து பூவரசங் குளம் மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பூவரசங்குளம் மற்றும வேலங்குளம் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளுக்கு நடமாடும் சேவையொன்றை நடத்தியிருந்தது

மேற்படி ஒழுங்கு செய்யப்பட்ட நடமாடும் சேவையில் திருமணப்பதிவுகள் பிறப்பு , இறப்பு பதிவுகள் மற்றும் பிரதிகள் வழங்கல், காணி சம்பநதமான சேவைகள், முதியோர் மேம்பாடு, சம்பந்தமான சேவைகள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல் போன்றவையும் பிரதேச செயலகங்களால் வழங்கப்படுகிறை அனைத்து சேவைகளும் வழங்கப் பட்டிருந்தது: இச்சேவைக்கு பெருமளவான மக் கள் கலந்துகொண்டு பயன்பெற்றது குறிப்பிடத் தக்கதாகும். (அ-9-250)

வன்னி வலம்

# எமது மக்களுக்கு நிம்மதியான வாழ்வை ஏற்படுத்துவதே உண்மையான தேசியம்

## சந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

(மலையாளபுரம்)

**கிராமங்களை மேம்படுத்தி அங்கு எமது மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை உருவாக்கி எமது மக்களின் இருப்பை நிலை நிறுத்துவதே உண்மையான தேசியம். அந்த தேசியத்தை இன்று நாமே உருவாக்கி வருகின்றோம் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மலையாளபுரத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்தில் மக்களின்



மனங்களில் எதிர்காலம் தொடர்பான ஏக்கமும், பிரதேசங்கள் அழிவுகளுக்கு உள்ளாகி சுடுகாடுகளைப் போன்ற தோற்றத்திலுமே காணப்பட்டன. ஆயினுமை இன்று இந்த நிலைமைகளில பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள் ளன. அன்று மக்களின் மனங்களில் தென்பட்ட சோகமும் எதிர்காலம் தொடர்பான ஏக்கமும் இன்றில்லை. பிரதேசங்களின் அபிவிருத்தியிலும் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் கடந்தகால துன்ப துயரங்களிலிருந்து விடுபட்டு மகிழ்வான வாழ்வியல் சூழலில் மக்கள் வாழ்கின்றனர்.

எமது கலை, கலாசார, பாரம்பரியங்களைப பேணி எமது பொருளாதார நிலைமையினை நாமே நிர்ணயிக்கக்கூடிய எமது தாய்மொழி, வாழ்விடம் இவற்றைப் பாதுகாக்கக்கூடிய சூழலில் வாழ்கின்றபோதுதான் எமது இனம் தேசிய அடையாளத்தையும், இருப்பையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். அந்த சூழல் இப்போது உருவாகியுள்ளது.

எனவே இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாம் எமது தேசியத்திற்கான கட்டுமானங்களை நிறுவிக்கொள்ள வேண்டும். ஆனால் உணர்வு பூர்வமான தேசியம் பற்றி பேசுபவர்கள் எமது தேசங்களுக்கு அப்பால் தேசியத்தை தேடுகின்றார்கள். இடம்பெயர்ந்து வாழ்ந்து தேசத்திற்கு அப்பால் குடியிருந்து தேசியத்தை பாதுகாக்க முடியாது.

எமது கிராமங்களை மேம்படுத்தி அங்கு எமதுமக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை உருவாக்கி மக்களின் இருப்பை நிலை நிறுத்துவதே உண்மையான தேசியம். அந்த தேசியத்தை இன்று நாமே உருவாக்கி வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-9)

# ஹிஜ்ராபுரம் பள்ளியில் மழை வேண்டி தொழுகை

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை ஹிஜ்ராபுரம் ஜூம்மா பள்ளிவாசல் ஏற்பாடு செய்த "ஸலாதுல் இஸ்திஹார்" மழை வேண்டி தொழுகை கடந்த வெள்ளிக்கிழமை அஸர் தொழுகையின் பின்னர் ஹிஜ்ராபுரம் ஜூம்மாபள்ளிவாசல் மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது "ஸலாதுல் இஸ்திஹார்" மழை வேண்டி தொழுகை நிறைவேற்றப் பட்டதுடன், குத்பா பிரசங்கம் மற்றும் விசேட துஆப் பிரார்த்தனைகள் என்பனவும் இடம் பெற்றன.

இந்த தொழுகையில் வடமாகாண சபை உறுப்பினர் யாஸின் ஜவாஹிர் (ஜனோபர்) மற்றும் ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று ஆகிய ஜூம்மா பள்ளிவாசலின் பிரதம இமாம்களும், ஊர்மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த சில மாதங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மழை இல்லாமையால் கடும் வரட்சி காணப்படுவதுடன், முறிப்பு, தண்ணிமுறிப்பு ஆகிய குளங்களிலும் நீர் மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

இதனால் இப்பகுதியிலுள்ள விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-250)

## வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றம்

(மல்லாவி)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கீழுள்ள மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஆளும், எதிர்க்கட்சிகளின் பூரண ஒத்துழைப்புடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக தவிசாளர் அ.தனிநாயகம் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சபையின் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் பின்னரே இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-9-15)

# தர்மபுரம் வைத்தியசாலையை அமைப்பதில் தாமதம் ஏன்?

### மக்கள் கேள்வி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் இதுவரை நிவர்த்தி செய்யப்படவில்லையென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையை கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 15 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மக்களும் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட விசுவமடு, றெட்பானா ஆகிய கிராமங்களிலுள்ள மக்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

யுத்தகாலத்திற்கு முன்னர் ஆண், பெண் நோயாளர்களுக்கான தங்குமிட வசதிகளும் பிரேத அறை என்பன உள்ளடங்கலாக இப் பிரதேச வைத்தியசாலை இயங்கி வந்தது.

ஆயினும் யுத்தத்திற்குப் பின்னர் சேதமடைந்த நிலையில் மீண்டும் வைத்தியசாலை கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் இயங்க ஆரம்பித்துள்ளபோதிலும் நோயாளர்களுக்கான விடுதிகள் இன்மையால் வெளிநோயாளர் பிரிவு மாத்திரமே இயங்கி வருகின்றது.

வைத்தியசாலையை விஸ்தரிப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான காணியில் தனியார் குடும்பங்கள் வசித்து வருவதனால் விடுதிகளை அமைக்க முடியாதுள்ளது.

இதனால் பல ஆயிரக்கணக்கான நோயாளர்கள் அன்றாடம் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே, குறித்த வைத்தியசாலையை விஸ்தரிக்கவும் ஏனைய அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுக்கவும் சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-263)

# மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு எம்.பி.க்கள் நிதியொதுக்கீடு

(மல்லாவி)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், விநோநோதராதலிங்கம் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியினூடாக மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பொதுவேலைத்திட்டங்களுக்கு நிதியொதுக்கீடு செய்துள்ளதாக பிரதேசசபை தவிசாளர் அ. தனிநாயகம் தெரிவித்துள்ளார்.

மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்களில் செல்வம் அடைக்கலநாதனால் ஒதுக்கப்பட்ட நிதியூடாக கொல்லவிளாங்குளம் கிராமத்தில் பயணிகளுக்கான பேருந்து தரிப்பிடக் கட்டடமும் பாலிநகர் கிராமத்திலுள்ள பொதுச் சந்தையில் மலசலகூடம் ஒன்றும் செல்வபுரம் கிராமத்தில் சியார் பாலர் முன்பள்ளி கட்டடத்திற்கு சுற்றுவேலியும் அமைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு விநோநோதராதலிங்கத்தின் நிதியொதுக்கீட்டின் மூலம் பாண்டியன்குளம் கிராமத்திலுள்ள பொதுச்சந்தைக்கு மலசலகூடமொன்றும் நெட்டாங்கண்டல் கிராமத்திலுள்ள அம்மன் ஆலயத்திற்கு மலசலகூடமும் மற்றும் பாண்டியன் குளம் இருதயநாதர் முன்பள்ளி கட்டடத்தில் சுற்றுவேலிகளும் அமைக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் தெரிவித்துள்ளார். (அ-9-15)



பூநகரியில் 28 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் நேற்று முன்தினம் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பங்கு கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அலுவலகத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பும் குழந்தைகளும் இன்றைய ஏரோதுகளும்



கிறிஸ்து பிறந்த போது இறைவார்த்தை வழிகாட்டும் விண்மீனாக வானில் தோன்றியது. அந்த விண்மீனை பின்பற்றி கீழ்த்திசையிலிருந்து வானவியல் ஞானிகள் சிலர் கிறிஸ்துவை வணங்க இஸ்ரயேல் நாட்டிற்கு வந்தனர். இடையில் விண்மீன் வழிகாட்டலிலிருந்து தவறினர. இதனால் யூதர்களிடம் விசாரித்து கடைசியில் ஏரோது மன்னனிடம் விசாரித்தனர்: பைபிளின்படி எருசலேமிலிருந்த மன்னன் ஏரோது அரண்மனைக்கு மூன்று கீழ்த்திசை ஞானிகள் சென்று, "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம் என்றாரகள்". இதைக் கேட்டதும் ஏரோது அரசன் பிறந்திருக்கும் கிறிஸ்துவால் தனது அரியணைக்கு அச்சுறுத்தல் வந்துவிட்டதாகக் கலங்கிப் போனான். அராஜகத்தோடு அரசைக் கைப்பற்றிய ஏரோது கிறிஸ்துமெசியா வருகையைப் பற்றிக் கேள்வியுற்று நடுங்குகிறான். குழப்பம் அடைகின்றான்.

ஆயினும் கிறிஸ்துவின் பிறப்பை உறுதி செய்த பின் தந்திரமாக "நீங்கள் சென்று குழந்தையைக் குறித்துத் திட்டவட்டமாய்க் கேட்டு எனக்கு அறிவியுங்கள். அப்பொழுது நானும் சென்று அக்குழந்தையை வணங்குவேன்." என்று கூறி ஞானிகளை பெத்லகேமுக்கு அனுப்பினான். மீண்டும் விண்மீன் வழிகாட்ட ஞானிகள் போய்க் குழந்தை இயேசுவை தாய் மரியா வைததிருப்பதைக் கண்டார்கள். நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள் தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் சோளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். எனினும் ஏரோதிடம் திரும்பிப் போக வேண்டாம் என்று கனவில் ஞானிகளுக்கு எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாகத் அவர்கள் தங்கள் நாடு திரும்பினார்கள். அந்த ஞானிகள் தன்னிடம் திரும்பி வராததால் ஏரோது கோபமடைந்தான். அவன் அவர்களிடம் கருத்தாய்க் கேட்டறிந்ததற்கேற்பக் காலத்தைக் கணக்கிட்டுப் இயேசு குழந்தையைக் கொல்லத்திட்டமிட்டு பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் இரண்டுவயதுக்குக் கீழ்ப்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்று குவித்தான்.

அப்பொழுது "ராமாவிலே ஒரு குரல் கேட்கிறது. ஒரே புலம்பலும் பேரழுகையுமாய் இருக்கிறது. இராகேல் தன் குழந்தைகளுக்காக அழுது கொண்டிருக்கிறார். ஆறுதல் பெற அவர் மறுக்கிறார். ஏனெனில் அவர் குழந்தைகள் அவரோடு இல்லை" என்று இறைவாக்கினர் எரேமியா உரைத்தது இங்கு நிறைவேறியது. ஏரோதின் இந்தத் தீய அணுகுமுறையால் பல நிரபராதிக் குழந்தைகள் பலியானார்கள். இதையே மாசில்லாத குழந்தைகள் விழாவாகத் திருச்சபை கொண்டாடுகிறது.

இச்சமயத்தில் ஏரோது 14 ஆயிரம் குழந்தைகளை கொன்றான் எனக் கிரேக்க திருவழிபாடு கூறுகிறது. ஆனால், சிரியா நாட்டினரின் நம்பிக்கையின்படி இவ்வாறு கொல்லப்பட்ட குழந்தைகள் 64 ஆயிரம் எனவும், மத்திய கால எழுத்தாளர்களின் கூற்றுப்படி இவ்வாறு கொல்லப்பட்ட குழந்தைகள் ஒரு இலட்சத்து 44 ஆயிரம் எனவும் சொல்லப்படுகின்றது. இருந்தபோதிலும், நவீன எழுத்தாளர்கள் இந்த எண்ணிக்கையைக் குறைத்தே சொல்கின்றனர். அன்று பெத்லகேம் ஏறக்குறைய ஆயிரம் பேரைக் கொண்ட சிறிய நகரம் தான். அதனால் அச்சமயத்தில் ஏறக்குறைய இருபது பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் சொல்கின்றனர். எனினும் ஒரு குற்றமும் செய்யாத குழந்தைகளைக் கொலை செய்தது சகித்துக்கொள்ள முடியாத படுபாதகச் செயல்தான். ஏரோது இயேசுவை தனது அரச அரியணைக்கு அச்சுறுத்தலாகப் பார்த்தான். அதனால் இயேசு அந்தப் பகுதியில் பிறந்து அங்கு இருந்த அவரின் பிரசன்ன ஒளியில் தனது இருள்வாழ்வைக் களைவதற்கு மறுத்துவிட்டான்.



இன்று உலகில் இலட்சக்கணக்கான குழந்தைகள் பலவிதமான துன்பங்களுக்கு உள்ளாகின்றன. கருவில் வளரும் குழந்தைகள் அழிக்கப்படுகின்றார்கள். குழந்தைத் தொழிலாளர்கள், அகதிச்சிறார், மனித வியாபாரத்துக்கும் பாலியல் வன்கொடுமைக்கும் உட்படும் குழந்தைகள், போரில் பயன்படுத்தப்படுவோர் எனப்பலவழிகளில் பல இன்றைய ஏரோதுக்களால் துன்புறுத்தப்படுகின்றனர். "பெண் குழந்தைகளையும், பிற குழந்தைகளையும் கருவிலேயே அழிப்பவர்களை இன்றைய காலத்தில் வாழும் ஏரோது என்று ஒப்புமைப்படுத்தி 2011 ஆம் ஆண்டு மாசில்லாக் குழந்தைகள் திருநாளையொட்டி, தன் கருத்துக்களை வெளியிட்ட மும்பைப் பேராயரும், இந்திய ஆயர் பேரவையின் தலைவரும், ஆசிய ஆயர் பேரவையின் பொதுச் செயலுருமான கர்தினால் ஆஸ்வல்ட் கிரேசியஸ் கூறினார். அவர் மேலும் மாசில்லாக் குழந்தைகளைக் கொன்று குவித்த ஏரோதைப் போலவே தற்காலத்திலும் அப்பாவி உயிர்களைப் போக்கும் பலர் நம் மத்தியில் இருப்பது வேதனையைத் தருகிறது என்றும் கூறினார். ஏரோதைப் போலவே தங்கள் செல்வத்தையும் சுகத்தையும் தெய்வங்களாக வழிபடும் மக்களே கருக்கலைப்பு மற்றும் பிற மனித உரிமை மீறல்கள் போன்ற குற்றங்களை இவ்வுலகில் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றனர் என்று அவர் சுட்டிக் காட்டினார் என்பதை இந்த இடத்தில் கூறித்தான் ஆகவேண்டும்

"தங்கள் பெற்றோர்களாலேயே கருவிலே கொல்லப்படும் ஆயிரக்கணக்கான சிசுக்கள் வடிவில், 2013 ஆண்டுகளாக நம் கிறிஸ்து தினமும் கொலை செய்யப்பட்டு வருகிறார் எனவும், குடும்ப நெருக்கடி, கைவிடப்பட்டல், வறுமை ஆகியவற்றை அனுபவிக்கும் சிறார் வடிவில் கிறிஸ்து கேலிக்கு உள்ளாகி வருகிறார் எனவும் இஸ்தான்புல் Ecumenical முதுபெரும் தந்தை முதலாம் பர்த்தலோமேயோ 2013 கிறிஸ்து பிறப்பு செய்தியில் கூறியுள்ளார். 2013 ஆண்டுகள் கடந்துவிட்டாலும், சமகாலத்து ஏரோதுகளால், மனிதஉரு எடுத்த நம் கிறிஸ்து இன்றும் சிரியாவிலும் மற்றும் பிற பகுதிகளிலும் துன்புறுத்தப்பட்டு வருகிறார் என்றும் எகிதில்மட்டுமல்ல, லெபனான், ஐரோப்பா, அமெரிக்கா மற்றும்பிற பகுதிகளிலிருந்து கிறிஸ்து அகதியாக வெளியேறுகிறார்" என்றும் அவர் கூறியுள்ளதை இங்கு சுட்டிக்காட்டுவது சாலப்பொருத்தம்

"கருவில் வளரும் உயிர்களைக் காப்பாற்றும் வகையில், கருவுறும் ஒவ்வொரு தாயும் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்று Chile நாட்டு ஆயர்கள் 2010 ஆண்டு மாசில்லாக் குழந்தைகள் திருவிழாவில் அழைப்பு விடுத்துள்ளனர். தென் அமெரிக்காவில் உள்ள Chile ஆயர்கள் "மாசில்லா உயிர்களுக்கான கண்ணீர்" என்ற தலைப்பில் 12 அம்சங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். இதல் கருவில் வளரும் உயிர்கள் குறித்த திருச்சபையின் கோட்பாடுகளை மக்களும், அரசியல் தலைவர்களும் உணர வேண்டுமென்று ஆயர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். Chile நாட்டின் மனசாட்சியைத் தட்டி எழுப்பும் வகையில் இந்த அறிக்கை 2010கிறிஸ்மஸ் காலத்தில வெளியிடப்பட்டுள்ளது" குறிப்பிட த்தக்கது. இது இன்று Chile நாட்டின்மனசாட்சியைத்மட்டுமல்லாமல் எமது நாட்டினதும் குறிப்பாக எமது பிரதேசங்களினதும் மனசாட்சியைத் தட்டி எழுப்ப வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகிறது.

கிறிஸ்து குழந்தையாக பிறப்பு எடுத்ததென்பது உலகிற்கு மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும், மீட்பையும் வழங்குவது என்பதுடன கடவுள் என்றென்றும் நம்மோடு இருக்கிறார் என்பதையும் உணர்த்தும் விழாவாக அமைந்துள்ளது. கிறிஸ்து குழந்தையாக பிறந்ததன் வழியாக, குடும்பங்கள் சரியான வழியில் தங்கள் குழந்தைகளை வளர்க்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகிறார். மனுக்குல மீட்புக்காக இறைமகன் நம்மிடையே ஒரு குழந்தையாக பிறந்தார். அப்போது குழந்தைப் பருவத்திலேயே, குழந்தை இயேசுவைக் காணாதிருந்தும் குழந்தை இயேசுவுக்காக இரத்தம் சிந்திய முதல் மறைசாட்சிகள் மாசில்லா குழந்தைகள். அராஜக மன்னன் ஏரோதின் கொடுங்கோலாட்சியில் இயேசுவுக்காகப் பலியாடுகளானவர்கள். இவர்கள் இயேசுவுக்காக மட்டுமல்ல, இயேசுவிற்கு பதிலாய் தங்கள் உயிரை ஈந்தவர்கள். இன்று நம்மிடையே புறக்கணிக்கப்படும் குழந்தைகளை இந்நாளில் சிறப்பாக நினைவில் கொளதல் அவசியமாகும். புதிய வடிவங்களில் குழந்தைகளுக்கெதிரான நிகழ்வுகள் தொடர்ந்தும நடைபெற்று வருவது வருந்தத்தக்கதாகும்.

எனவே உத்தரவிடும் மனோபாவத்தை நீக்கி குழந்தைகளுக்கு உற்ற நண்பனாக வழிகாட்டியாக இருப்பதே இன்றைய காலகட்டத்தில் அவசியமாகும். குழந்தைகள் பிறப்பென்பது மிகவும் முக்கியமானது, மதிப்புமிக்கது. நம்பிக்கையூட்டுவது என்பதை நாம் உணர்ந்து இந்த கிறிஸ்து பிறப்பு விழாவை நம் வீட்டுக் குழந்தையின் பிறப்பு விழாவாக, மனுக்குலத்தின் மகத்தான விழாவாகக் கொண்டாடுவோம். இவ்வருடத்தின் இயேசு பிறப்பு விழா எம்மாசற்ற குழந்தைகளுக்கு உண்மையான விடுதலையைப் பெற்று தரட்டும்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

# அரசாங்கம் மனித உரிமை நிலைமைகளில் முன்னேற்றம் காணவில்லை - ஜே.வி.பி

எதிரவரும் மார்ச் மாதம் ஜெனவாவில் அமைநதுள்ள ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பாக மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப்படும் ஆபத்து உள்ளது. இந்நிலையில் அரசாங்கமோ யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களை ஆற்றாமல் மேலும் காயங்களை உருவாக்கவே முயற்சித்துவருகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடர் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு வருகின்றது என்பதனை அரசாங்கம் எதிர்வரும மார்ச் மாதத்துக்கு முன்னராவது செயலில் காட்டவேண்டும். அத்துடன் மனித உரிமை மீறலகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடர் எதிர் வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் மனித உரிமைப் பேரவைக கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக புதிய யோசனை வரலாம் என்ற அனர்த்தம் காணப்படுகின்றது. அமெரிக்கத் தரப்பில் இவ்வாறு அனரத்தம் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வாறான நிலைமை ஒன்றை அரசாங்கமே உருவாக்கிக்கொண்டு வருகின்றது.

நாட்டில் மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தி யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தால் சர்வதேச அழுத்தங்களை தடுத்திருக்கலாம்.

ஆனால் அரசாங்கம் மனித உரிமை நிலைமையை மேம்படுத்துவதிலோ காயங்களை ஆற்றுவதிலோ முன்னேற்றத்தை காட்டவில்லை. மாறாக யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு பதிலாக புதிதாக காயங்களை உருவாக் கிக்கொண்டுவருகின்றது.

அந்தவகையில் பார்க்கும்போது இவ்வாறானதொரு நிலைமையை அரசாங்கமே உருவாக்கிக்கொண்டுள்ளது என்று கூறலாம். நாட்டில ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை.


மனித உரிமை மீறல்கள் விடயத்தில் முன்னேற்றம் ஏற்படுத்தப்படவில்லை. எனவே சர்வதேச அழுத்தங்கள்வருவதற்கான அனர்த்தம் அதிகமாகவே காணப்படுகின்றது.

எப்படியிருப்பினும் எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் நாட்டின் மனித உரிமை நிலைமையில் முன்னேற்றத்தை வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்தால் சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பிக்க முடியும். ஆனால் அரசாங்கம் அவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தீய செயல் ஆகாது!



ஒரு வீட்டில் நாய்க்குட்டியொன்றை எடுத்து வளர்த்து வந்தார்கள். அந்த நாய்க்குட்டி காகத்துடன் நட்பாக இருந்தது. ஒரு நாள் காகம் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தது.

இதைக்கண்ட நாய்க்குட்டி காகத்திடம் சென்று.

என்ன காக்கையாரே! ஏன் ஒன்றும் பேசாமல் வருத்தமாக இருக்கிறீர்? என்று கேட்டது. அதற்கு காகம், மனிதர்கள் மற்றப் பறவைகளை அன்புடன் வளர்க்கின்றார்கள். அவைகளின் செயல்களைப் பாராட்டுகின்றார்கள் ஆனால், என்னை வெறுத்து. கல்லால் எறிந்து துரத்துகிறார்களே ஏன்? என்று கேட்டது காகம்.

இதற்குக் காரணம் உங்கள் தீய குணங்கள்தான். இதை நீங்கள் இல்லாது செய்தால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள், என்றது நாய்க் குட்டி

எங்களிடம் அப்படியென்ன தீய குணங்கள் உள்ளன? கடமை, சுத்தம், இப்படிப் பல நல்ல குணங்களில் நாங்கள்தான் சிறந்தவர்கள்! என்று சொன்னது காகம்.

உண்மைதான்! என்றது நாய்க் குட்டி

பகிர்ந்துண்ணும் பண்பைக் கற்றுத்தந்ததும் நாங்கள்தான்! என்று பெருமையோடு சொன்னது காகம்.

ஆமாம் அதுவும் உண்மைதான்! என்று மறுபடியும் சொன்னது நாய்க்குட்டி.

இப்படி நல்ல குணங்கள் எம்மிடம் இருந்தும், மற்றப் பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே ஏன்?

குயில் கூவும்போது அதன் இனிமையை இரசிக்கிறார்கள். மயிலாடும்போது அதை இரசித்துப் பாராட்டுகிறார்கள். கிளியை வீட்டில் வளர்த்து பேசக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தும் எம்மினத்தைக் கண்டாலே துரத்துகிறார்களே ஏன்? என்று மீண்டும் கேட்டது காகம்.

ஏன் என்று நான் சொல்லுகிறேன். உங்களிடம் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும். உங்களிடம் இருக்கும் சில தீய குணங்களால் தான் மனிதர்கள் உங்களை வெறுக்கிறார்கள், என்று கூறியது நாய்க்குட்டி

அப்படி என்ன தீய குணங்கள்? என்று கேட்டது காகம்.

திருடுதல், ஏமாற்றுதல், என்று சொன்னது நாய்க்குட்டி. காகம் தலை குனிந்தது.


ஒருவரிடம் எவ்வளவு நல்ல பண்புகள் இருந்தாலும். அவரின் ஒரு சிறு தீயசெயல் அவரை, அவரின் அத்தனை நல்ல பண்புகளில் இருந்தும் மறைத்து அந்தத் தீய செயலே முன்னிற்கும்.

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

# ஓட்டம் பிடித்த முயல்!

அன்று காடு முழுதும் ஒரே ஆனந்தமாய் இருந்தது. காட்டு விலங்குகள், பறவைகள் அனைத்தும் மைதானத்தில் ஒன்றாக கூடியிருந்தன. அனைத்தும் காட்டின் தலைவர் சிங்கத்தின் வருகையை எதிர்நோக்கி பரபரப்புடன் காத்திருந்தன. இந்த பரபரப்புக்குக் காரணம் சில நாட்களுக்கு முன்னர் தலைவர் சிங்கம் செய்த அறிவிப்பே!

"முயலுக்கும் ஆமைக்கும் மீண்டும் பந்தயம் நடத்தப்படும். அனைவரும் வந்து போட்டியைக் கண்டு மகிழுங்கள்" என்று அறிவித்தது. அதற்குத்தான் அனைத்து விலங்குகளும் கூடி இருந்தன.



அறிவிப்பு வெளியான நாளில் இருந்து முயல் கர்வத்துடன் இருந்தது. "சென்ற போட்டியின்போது தூக்கத்தால் வெற்றியைக் கோட்டைவிட்டேன். ஆமை வென்றது. இம்முறை அப்படி நடக்காது. போட்டி ஆரம்பித்ததும் சில நிமிடங்களிலேயே எளிதாக வென்றுவிடுகிறேன்" என்று சொல்லித் திரிந்தது.

ஆமைக்கோ பயம் அதிகரித்துவிட்டது. "சென்ற முறைபோட்டியில் வென்றது போல் இப்போது வெல்ல முடியாது. அதற்காக சிங்க ராஜாவின் கட்டளையை மீறவும் முடியாது. போட்டியில் கலந்து கொள்ளத்தான் வேண்டும். என்ன செய்வது" என யோசித்தபடி இருந்தது.

ஆனாலும், "பயந்துகொண்டே இருந்தால் பிரச்னை தீராது. எதுவாக இருந்தாலும் ஒரு கை பார்ப்போம" என்று தைரியத்தை வரவைத்துக்கொண்டு, போட்டி நடக்கும் இடத்துக்கு வந்தது. அதைப் பார்த்து முயல் கிண்டலாய்ச் சிரித்தது.

சற்று நேரத்தில் சிங்கம் மேடையில் வந்து அமர்ந்தது. விலங்குகள் அனைத்தும் தலைவரைப் பார்த்து கரவொலி எழுப்பின. தலைவரைப் பாராட்டி மந்திரி நரியார் பேசியது. குயில் அண்ணன் பாடியது. யானைகள் ஆர்ப்பரித்தன. போட்டியாளர்களான முயலுக்தும் ஆமைக்கும் மேடையில் உரிய மரியாதை செய்யப்பட்டது. அணில் தம்பி, அவர்களை உற்சாகப்படுத்தியது.

தலைவர் சிங்கம், கையில் மைக்குடன் எழுந்து கூட்டத்தினைப் பார்த்து, "சென்றமுறை போட்டியை முயலுக்குச் சாதகமாக தரையில் நடத்தினோம். எனவே, இம்முறை ஆமைக்குச் சாதகமாக தண்ணீரில் நடத்துவோம். இரண்டும் ஆற்றின் இந்த கரையில் குதித்து அடுத்த கரையைஅடைய வேண்டும்." என அறிவித்தது.

அவ்வளவுதான்! அதுவரை அலட்சியமாக நின்றிருந்த முயலார் பயந்து போய்... மேடையை விட்டு எடுத்தது ஓட்டம்.

ஆமை மகிழ்வுடன் வீடு நோக்கி கம்பீர நடைப் போட்டது. ✡✡✡✡✡✡✡




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ➢1492-சிசிலியில் இருந்து ஒரு லட்சம் யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.
- ➢1857-விக்டோரியா மகாராணி கனடாவின் தலைநகராக ஒட்டாவாவைத் தேர்ந்தெடுத்தார்.
- ➢1862-அமெரிக்கப் புரட்சிப் போர்: மேற்கு வேர்ஜீனியாவை கூட்டணியில் இணைப்பதற்கான சட்டமூலத்தில் ஆபிரகாம் லிங்கன் கையெழுத்திட்டதில் வேர்ஜீனியா இரண்டாகப் பிரிந்தது.
- ➢1879-வெள்ளொளிர்வு விளக்கு முதற்தடவையாக தொமஸ் எடிசனால் காட்சிப்படுத்தப்பட்டது.
- ➢1881-இலங்கை முழுவதும் கடுமையான நிலநடுக்கம் உணரப்பட்டது.
- ➢1909 - மான்ஹட்டன் பாலம் திறக்கப்பட்டது.
- ➢1923 - லண்டனின் பிக் பென் மணிக்கூண்டின் மணியொலி மணிக்கொரு தடவை பிபிசியில் ஒலிபரப்பு செய்ய ஆரம்பிக்கப்பட்டது.
- ➢1944 - இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- ➢1946 - அமெரிக்க அதிபர் ஹரி ட்ரூமன் இரண்டாம் உலகப் போரில் ஐக்கிய அமெரிக்காவின் பங்கு முடிவுக்கு வந்ததாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.
- ➢1847 - ஆறுமுக நாவலர் தனது முதலாவது பிரசங்கத்தை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஆரம்பித்தார்.
- ➢1963 - மத்திய ஆப்பிரிக்கக் கூட்டமைப்பு சாம்பியா, மலாவி, ரொடீசியா என மூன்று நாடுகளாகப் பிளவுற்றது.
- ➢1984 - ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமரானார்.
- ➢1999-போரிஸ் யெல்ட்சின் ரஷ்யாவின் அதிபர் பதவியிலிருந்து விலகினார்.
- ➢1999-1977 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய, ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயின் அதிகாரத்தை பனாமாவிடம் ஒப்படைத்தது.
- ➢2004 - உலகின் மிக உயரமான வானளாவியான தாய்வானின் 509 மீட்டர் உயர தாய்ப்பே 101 அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.
- ➢2006-ஐக்கிய அமெரிக்காவிடம் இரண்டாம் உலகப போரின் போது பெற்ற கடன்களை ஐக்கிய இராச்சியம் முழுவதுமாக கட்டி முடித்தது.


### பிறப்புகள்

- ➢1491 - ஜாக் கார்ட்டியே, பிரெஞ்சு நாடுகாண் பயணி (இ. 1557)
- ➢1880 - ஜோர்ஜ் மார்ஷல், நோபல் விருதுபெற்ற அமெரிக்கர் (இ. 1959)
- ➢1937 - அவ்ராம் ஹேர்ஷ்கோ, நோபல் பரிசு பெற்ற ஷ்ரேலியர்

### இறப்புகள்

- ➢1905- அலெக்சாண்டர் பப்போவ், ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1859)
- ➢2001 - தொ.மு.சிதம்பரரகுநாதன், தமிழக எழுத்தாளர் (பி. 1923)

## தோமஸ் அல்வா எடிசன்



தோமஸ் அல்வா எடிசன் 1847 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி ஓஹையோவில் உள்ள மிலான் என்னும் ஊரில் பிறந்தார். இவர் ஒரு அமெரிக்கக் கண்டுபிடிப்பாளரும், அறிவியலாரும், விஞ்ஞானியும், தொழிலதிபருமாவார். இவர் ஒளி விளக்கு, ஒலிவரைவி, திரைப்படக் கருவி உள்ளிட்ட பல கருவிகளை உருவாக்கினார். எடிசனின் பெற்றோர் நடுத்தர வகுப்பை சேர்ந்தவர்கள். தாமஸ் எடிசனுக்கு, சிறுவயதிலேயே காது கேட்கும் திறன் பாதிக்கப்பட்டிருந்தது. அப்பிறவிப் பெருங்குறை அவரது பிற்கால நடையுடைப் பழக்கங்களை மிகவும் பாதித்ததோடு அநேகப் புதுப்படைப்புக்களுக்கும் காரணமாகவும் இருந் தது.

அவரின் தாயார் பள்ளியிலிருந்து தோமசை விலக்கிவிட்டுத் தானே அவருக்கு பாடங்கள் சொல்லிக் கொடுத்தார். பள்ளிக்கூட ஆசிரியரான தாயிடம் வீட்டிலேயே எடிசன் கல்வி கற்றார். படித்தல், எழுதுதல் மற்றும் எண்கணிதப் பயிற்சியோடு பைபிளையும் பழங்கதைகளையும் பயின்றார். திரள் உற்பத்தி, ஒன்றுபட்ட பெரிய குழுப்பணி ஆகிய கோட்பாடுகளைப் பயன்படுத்திய முதல் கண்டுபிடிப்பாளர்களுள் ஒருவர். 1880ல் எடிசன் அறிவியல் சார்ந்த இதழ் ஒன்றைத் தொடங்கியவர். இது 1990 ஆம் ஆண்டில் அறிவியல் முன்னேற்றத்துக்கான அமெரிக்கக் கழகத்தின் இதழானது.

ஆக்க மேதை எடிசன் தன் 84 ஆம் வயதில் 1931 ஒக்டோபர் 18 ஆம் திகதி நியூஜெர்சியில் உள்ள வெஸ்ட் ஆரஞ்ச் நகரில் காலமானார்.

அமெரிக்க ஜனாதிபதி ஹெர்பர்ட் ஹூவர் எடிசனின் உடல் அடக்கத்தின் போது அமெரிக்காவெங்கும் மின்விளக்குகளை ஒருநிமிடம் அணைக்கும்படி ஆணையிட்டிருந்தார். சிகாகோ, டென்வர் போன்ற முக்கிய இடங்களில் விளக்குகள் அணைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உடலில் உயிர் நுழையும் இரகசியம்!



ஆன்மீகம் 79

கேள்வி:- எனக்கு உச்சந்தலையில் ஒரு அழுத்தம். மேல்நோக்கி இழுப்பதுபோல் உணர்கிறேன். அது யோகா சம்பந்தமானதா? அல்லது உடல் கோளாறா?

சத்குரு:- விழிப்புணர்வுடன் உடலின் எந்தப் பகுதி வழியாக வெளியேறினாலும் அது நல்லதே. ஆனால், பிரம்மரந்திரா வழியாக வெளியேறுவது மிகச் சிறந்தது. இந்த பெரிய வாய்ப்பைப்பற்றி நிறைய பேர் பேசியிருப்பதாலும் நிறைய புத்தகங்கள் இதைப் பற்றி சொல்லியிருப்பதாலும் மக்கள் தங்கள் உச்சந்தலையிலும் நெற்றியிலும் ஏதாவது கற்பனை செய்து கொள்கிறார்கள். ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எங்கே உங்கள் மனதைக் குவிக்கிறீர்களோ, அங்கே சிறிது அரிப்பு உணர்வு தோன்றும். இப்போது வேண்டுமானால் முயற்சி செய்து பாருங்கள். உங்கள் வலது சுண்டுவிரலை இப்படி வையுங்கள். அதன் முனையில் உங்கள் மனதை குவியுங்கள். சில நிமிடங்களில் அங்கே ஒரு அரிப்பு உணர்வு தோன்றும். ஏன்? உடலின் எந்தப் பகுதியில் மனதைக் குவித்தாலும் அங்கே சிறிது அரிப்பு உணர்வு தோன்றும். அதை வைத்து உங்களுக்குள் ஏதோ பெரிய செயற்முறை நடந்துகொண்டிருக்கிறது என்று நீங்கள் முடிவு செய்யக்கூடாது. அல்லது உடலிலேயே சிலமுறை அங்கங்கே அரிப்புக்கள் உணரலாம். எப்போதாவது உங்களுக்கு இப்படி நடக்கும். நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அப்போது உங்கள் உடலில் அங்கங்கே அரிப்பு உணர்வு தோன்றலாம். குறிப்பாக நீங்கள் மிகவும் பதட்டமாக இருக்கும்போது அப்படி அடிக்கடி நடக்கும். நீங்கள் தளர்வாக இருக்கும்போது அப்படி நடக்காது. நீங்கள் பதட்டமாக இருக்கும்போது அங்கங்கே அரிப்பு உணர்வு தோன்றுவதால் அதை நீங்கள் வேறுவிதமாக முடிவு செய்துவிடக் கூடாது.



நான் இதை சொல்லலாமா என்று தெரியவில்லை. ஏனெனில் சொல்லி விட்டால் பிறகு நீங்கள் நிறைய கற்பனை செய்ய ஆரம்பித்துவிடுவீர்கள். நீங்கள் தியானம் செய்பவராக இருந்தால், நீங்க்ள சாம்பவி பயிற்சியை செய்வதால், இப்போதுகூட நீங்கள் நீங்கள் அதை பரிசோதித்துப் பார்க்கலாம். நான் எப்போதும் இது போன்ற விடயங்களை தவிர்த்தே வந்திருக்கிறேன். ஏனெனில், மக்கள் பிறகு அதுபோன்ற விடயங்களில் மிகவும் கற்பனை செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். இதை நீங்கள் செய்து பார்க்க வேண்டாம். அது தேவையில்லாதது. நான் எனது பிரம்மரந்திராவின் மேல் கை வைத்தால், நான் அடிக்கும் மேல் வைத்தால் கூட கைபோன்ற. அமைப்பில் இருப்பதை உணர முடிகிறது. சக்தி நிலைகளை ஒரு குறிப்பிட்ட நிலையில் வைக்கும்போது எப்போதும் அப்படி நடக்கிறது. இப்படி ஒவ்வொருவருக்கும் நடக்க முடியும். ஆனால், அது உள்ளுக்குள் நடக்கிறது. ஏன் அப்படி நடக்கிறது என்றால் நம்மில் உள்ள 114 சக்கரங்களில் 2 சக்கரங்கள் உடலுக்கு வெளியே இருக்கிறது. பொருள் தன்மைக்கும் அப்பால் உள்ள பரிமாணம் நிலையான செயற்முறையாக மாறினால் சில ஹணங்களுக்கு உங்களையும் தாண்டிய சில விடயங்கள் நடப்பதை உணர முடியும்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# கழுத்துக்கு மேலே தொங்கும் கத்தியிலிருந்து தப்பித்துக் கொள்ளவே பேச்சுக்கு அழைப்பு!

'போர் புரிபவனுக்குத் தைரியம், உடல் பலம் போதும், சமாதானம் செய்பவனுக்கு அறிவு மட்டுமல்ல போர் புரியவும் தெரிந்திருக்க வேண்டும்' என்பது இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் சிமோன் பெரஸ் உதிர்த்த அனுபவ வார்த்தைகள். இதனைத் தமிழர்களும் குறிப்பாக விடுதலைப் புலிகள் அனுபவ ரீதியாக அறிந்துகொண்டிருந்தனர். இதனால்தான் பலமாக இருக்கும்போதே பேச்சுக்களில் ஈடுபட விடுதலைப் புலிகள் எப்போதும் விரும்பினார்கள். அவ்வாறு பலமான நிலையில் இருந்துகொண்டே அவர்கள் இலங்கைடன் நேரடியாகவும் சரி, மூன்றாம் தரப்பின் மத்தியத்துவத்துட னும் சரி பேச்சுக்களை நடத்தினார்கள். பலமில்லாத நிலையில் பேச்சுக்களில் ஈடுபடுவது வீண் என்பதையும்விட, ஆபத்தானதும்கூட. கேட்டதைப் பெறுவதைவிட, அவர்களை தருவதைப் பெறவேண்டிய நிலைக்கும் தள்ளப்படலாம் என்பதற்கும் அப்பால், 'பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு கடைசியில் கட்டியிருந்த கோவணமும் பறிபோன நிலைக்கே' இதுகொண்டுசெல்லும்.



கடந்த வாரம் சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பேச்சுக்கான தூதுகளை தமிழர்களுக்கு மீண்டும் அனுப்பியுள்ளார். 'நாட்டின் தேசிய நல்லிணக்கம், சமாதானம் மற்றும் அபிவிருத்தியை நிலை நாட்டும் வகையில் எமது நாட்டுக்கே உரிய தனிதுவமான தீர்வொன்றை பெற்றுக்கொள்ள ஒத்துழைக்குமாறு' தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பை விடுத்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, 'எமது நாட்டின் பிரச்சினைக்கு வெளிநாடுகளில் தீர்வு காண்பதை விடுத்து, ஏனைய நாடுகளுக்கு முன் மாதிரியாக பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஒன்றிணைந்து செயற்பட வருமாறு' கூறியிருக்கின்றார். 'இரா.சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்றக் குழுவும், சீ.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான வடமாகாண சபை உறுப்பினர்களும் இதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனவும்' ஜனாதிபதி மகிந்தராஜபக்ச கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

மகிந்த அரசின் இந்த அழைப்பு தமிழர்கள் மீதான கரிசனையால் வருவதல்ல என்பதற்கு விளக்கம் தேவையில்லை. தனது தலைக்கு மேலே இனப்படுகொலைக் கத்தி தொங்கிக்கொண்டிருக்கும் நிலையில், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கே தமிழர் தரப்பை பேச்சுக்களுக்கு வருமாறு அவர் அழைப்பு விடுக்கின்றார் என்பது வெள்ளிடைமலை.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் மகிந்த கூட்டம் என்றுமில்லாத நெருக்கடிகளை எதிர்கொள்ளப் போகின்றது. மேற்குலக நாடுகள் மகிந்த அரசின் சர்வாதிகார ஆட்சியை அகற்றவேண்டும் என்பதில் கங்கணம் கட்டிநிற்கின்றன. எனவே, இந்தக் கூட்டத்தொடரை மட்டும் கடந்துவிட்டால்போதும் என்பதுதான் இப்போதைய அரசின் சிந்தனை.

இந்த நெருக்கடிக்குள் இருந்து எவ்வாறு மீண்டெழுவது என்பதில் சிங்களப் பேரினவாதம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து ஆராய்ந்து வருகின்றது. 'ஐக்கிய தேசியக் கட்சியைச் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அழிக்க முயல்கின்றது' என்று சொல்லும், ரணில் மற்றும் சரத்பொன்சேகா போன்றவர்கள் இதனைத் தமது இனத்திற்கு நேரப்போகும் அவலமாகக் கருத்திற்கொணடு மகிந்த ஆட்சியாளர்களைக் காப்பாற்றுவதில் உறுதியாக இருக்கின்றார்கள்.

அத்துடன், பௌத்த மதவாத சக்திகள் அனைத்தும் சிங்களப் பேரினவாதத்தை பாதுகாப்பதில் உறுதிபூண்டு நிற்கின்றன. இதேவேளை, இனஅழிப்பு நடந்துகொண்டிருந்தபோது அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக வாயே திறக்காத கத்தோலிக்க திருச்சபை பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, 'இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசம் தலையிட முடியாது' என்றும் 'கத்தோலிக்க திருச்சபை அதனை முழுமையாக எதிர்க்கும்' என்றும் எச்சரிக்கை மணியடிக்கின்றார்.

எதிர்க்கட்சிகள், மதவாத சக்திகள் என அனைத்துத் தரப்பும் மகிந்தவிற்கு தோள் கொடுக்கத் தயாராகவிருக்கும் நிலையில், அவர்களுடன் தமிழர் தரப்பையும் இணைத்து ஒரு நடவடிக்கையை மேற்கொண்டுவிட்டால் சர்வதேசத்தை ஏமாற்றிவிடலாம் என்று மகிந்த ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். அதனடிப்படையில்தான் மார்ச்சுக்கு முன்னதாக புதிய நடவடிக்கை ஒன்றையும் மகிந்த அரசு மேற்கொள்ள முயன்றிருக்கின்றது.

'இலங்கைத் தீவில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன' என்பதை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும், சர்வதேச நாடுகளுக்கும் காண்பிக்கும் நோக்கில் மாநாடொன்றை ஏற்பாடு செய்துள்ளது. 'தேசிய மக்கள் மாநாடு' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த மாநாட்டில், தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவதாகக் கூறப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துக் கட்சிகளையும் இழுத்துவிட்டால், மார்ச் மாதக கண்டத்தில் இருந்து தப்பித்துவிடலாம் என்று கணக்குப்போட்டிருக்கின்றது. ஜெனீவாவில் இம்முறை ஏற்படும் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கான ஒரு பொறி முறையே இந்த மாநாடு என்றும் இப்போதே பரவலாக விமர்சனங்கள் எழத்தொடங்கிவிட்டன.

ஆனாலும், இந்த மாநாட்டு ஏற்பாடுகளை முன்னெடுக்கும் பொறுப்பு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு வாசுதேவ நாணயக்காரவிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது. அனைத்துக் கட்சிகளையும் குறிப்பாக கூட்டமைப்பினரை இந்த மாநாட்டிற்குள் இழுத்தெடுக்கும் பொறுப்பு இவரின் கையில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள தமிழ் புத்திஜீவிகள், அறிவுஜீவிகள் என்று கூறிக்கொள்பவர்களையும் இதற்குள் இழுத்தெடுக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு காரியங்கள் நடந்து வருகின்றன.

அனைத்துக் கட்சிக் கூட்டமைப்பை ஏற்படுத்த முயன்று அதில் தோற்றுப்போன ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, இன ஐக்கியத்திற்காக என்ற பெயருடன் அனைத்துக் கட்சிகளையும் இந்த மாநாட்டிற்குள் ஒருங்கிணைத்துவிட முடியும் என்று எதிர் பார்க்கின்றார். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் துணைபோய்விடுமோ என்ற அச்சமே இப்போது எழுந்துள்ளது. மகிந்த அரசுடன் பேசித்தான் தீர்வு காணவேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அடிக்கடி தெரிவித்து வருகின்றார். 'கடிவாளம் இல்லாத குதிரையாக' அவர்கள் ஏற்பாடு செய்யும் விழாக்களில் எல்லாம் பங்கேற்று மகிழ்ச்சியைப் பரிமாறியும் வருகின்றார். இதுவே தமிழர்களின் அதிகரித்த அச்சத்திற்கு காரணமாக உள்ளது.

காலம் காலமாகத் தமிழர்களை சிங்களப் பேரினவாத அரசு ஏமாற்றியே வருகின்றது. இதனாலேயே இலங்கை அரசுடனான நேரடிப் பேச்சுக்களைத் தவிர்த்து, மூன்றாம் தரப்பின் ஊடாக விடுதலைப் புலிகள் பேச்சுக்களில் ஈடுபட்டார்கள். மூன்றாம் தரப்புடன், பலமான நிலையில் இருந்து கொண்டு பேசியபோதும், விடுதலைப் புலிகளை ஏமாற்றுவதிலேயே சிங்கள ஆட்சியாளர்கள் கவனமாக இருந்தார்கள்.

எனவே, பலமற்ற நிலையில் சிங்கள ஆட்சியாளர்களுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதென்பதோ, அவர்கள் கூட்டுகின்ற இன ஐக்கிய மாநாடுகளில் பங்கேற்பதென்பதோ மகிந்த ஆட்சியாளர்களைப் பாதுகாப்பதாக அமையுமேயழிய, தமிழர்களுக்கு எந்த நலனையும் ஏற்படுத்தாது, மேலும் அழிவுக்கே இட்டுச்செல்லும். தமிழர்களின் நலனைக் கருத்திற் கொண்டு மட்டுமே கூட்டமைப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண ண்டும்.

ஈழமுரசு ஆசிரியர் தலையங்கத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேறாத கொள்கைகளுக்காக த.தே.கூட்டமைப்பு போராடக் கூடாது

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

**வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தயாராகவேயுள்ளார். ஆனால், சம்பந்தனின் பிடிவாதமே விக்னேஸ்வரனை தடுக்கின்றது என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**


இளைஞர் பாராளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வு நேற்று முன்தினம் மகரகம இளைஞர் மன்றத்தில் இடம்பெற்றது. இதில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இன்று அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஜனநாயக ஆட்சிக்கான அடித்தளத்தினை இட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ், மலையக கட்சிகள் மற்றும் வடக்கில் முக்கிய தலைவர்களையும் அரசாங்கத்தில் இணைத்து நாட்டின் அனைத்து இனத்தவர்களுக்கான ஆட்சியியையும் நடத்தி வருகின்றது. ஆனால், இன்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மட்டுமே தமது பிடிவாதத்தில் பிரிவினைக்கான உரிமைகளை கோரி நிற்கின்றனர்.

வடமாகாண சபை முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் அரசாங்கத்துடன் இணங்கி வடமாகாண செயற்பாடுகளை நடத்தவும் வடக்கிற்கான அபிவிருத்திகளையும் தமிழ் மக்களின் உரிமைகளை பெற்று அமைதியாக ஆட்சி நடத்த வேண்டுமென்றே விரும்புகின்றார்.



எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் பிடிவாதமும் அரசாங்கத்துடன் முரண்படுவதன் காரணத்தினாலேயே விக்னேஸ்வரன் எம்முடன் இணைந்து செயற்பட முடியாதுள்ளது.

இன்று அரசாங்கத்திற்கு இருக்கும் பெரிய சிக்கல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஆகும். அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை என்பதே உண்மை. சர்வதேசத்தையும் தமிழ் மக்களையும் தூண்டிவிட்டு தனி தமிழ் ஈழத்தை உருவாக்கவே சம்பந்தன் நினைக்கின்றார்.

அதேபோல் ஜனாதிபதிக்கு இருக்கும் மிகக் கடினமான விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசாங்கத்துடன் இணைப்பதேயாகும். பிரிவினைவாதக் கொள்கையில் எதற்கும் பிடிகொடுக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசாங்கத்தின் கொள்கைகளுக்குள் கொண்டு வந்தால் அதுவே ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கும் நாட்டின் ஜனநாயக முன்னேற்றத்திற்கும் கிடைக்கும் மிகப் பெரிய வெற்றியாகும்.

அத்தோடு சம்பந்தன் ஜனாதிபதியோடு பேச்சுவார்த்தைகளுக்கு இணங்கி அரசுடன் இணைந்து செயற்பட விரும்பினால் சர்வதேச பிரச்சினைகளுக்கும் இலங்கையின் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும்.

அன்று பிரித்தானிய ஆதிக்கத்தின் கீழ் இலங்கை அடக்கப்பட்டாலும் இலங்கைக்குள் பிரிவினைவாதமென்ற ஒன்று காணப்படவில்லை. கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி இராச்சியங்களென தனித்து காணப்பட்ட போதும் அனைத்து மக்களும் விடுதலையென்ற ஓர் கொள்கையில் போராடினர். ஆனால் இன்று வெள்ளையரிடமிருந்து சுதந்திரம் கிடைத்தும் எமது இனங்களுக்கிடையே பிரிவினை யுத்தம் ஏற்பட்டு விட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் யதார்த்தமானவை அல்ல. தனி இராச்சியத்தை கோரி சுய ஆட்சிக்கான அடித்தளத்தையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புகின்றது. இதனை எந்த அரசாங்கம் வந்தாலும் நிறைவேற்ற முடியாதென்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் ஏனையவர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

எந்த இனத்தவரும் யாருக்கும் அடிமைகளில்லை என்புதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டதனாலேயே வடமாகாண சபைத் தேர்தலை நடத்தினார். வடக்குத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றி பெறுமென்பது அரசாங்கத்திற்கு நன்றாகவே தெரியும்.

எனினும் தெற்கைப் போன்று சுதந்திரமாக செயற்படக்கூடிய மாகாணமாக வடக்கும் இருக்க வேண்டும். வடக்கு மக்களுக்கென சுதந்திரமாக செயற்படவும் தமது விருப்பங்களை நிறைவேற்றும் உறுப்பினர்கள் வடக்கில் இருக்க வேண்டும் என்பதற்காகவே வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது.

எனவே, நிறைவேறாத கொள்கைகளுக்காக கூட்டமைப்பு போராடுவதை விடவும் அரசாங்கத்துடன் இணைந்து தமிழர்களின் உரிமைகளை வென்றெடுத்து ஜனநாயக ரீதியிலான ஆட்சியை நடத்த இணங்க வேண்டும். அதுவே இன்றையகால சூழ் நிலையின் தேவையாக உள்ளது என்றார். (அ-9)

# குற்றம் நிரூபிக்கப்பட்டால் பிரதமர் பதவிவிலக வேண்டும்

ஹெரோயின் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் பிரதமர் பதவியில் இருந்து விலகுமாறு டி.எம். ஜயரட்னவை கோருவதற்கு பின்நிற்கப் போவதில்லை என்று பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றம் நிரூபிக்கப்பட்டு பிரதமர் பதவியில் இருந்து விலக மறுத்தால் அதற்கு எதிராக வீதிப் போராட்டங்கள் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ள தேரர், பாராளுமன்றத்தில் போதைப்பொருள் கடத்தும் செயற்பாட்டில் பலர் அங்கம் வகிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார். (அ-9)

# போதைப்பொருள் வர்த்தகரிடம் இலங்கையரின் இலக்கங்கள்

பாகிஸ்தான் போதைப்பொருள் வர்த்தகரின் தொலைபேசியில் 20 இலங்கையர்களின் இலக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை விசாரணைகளின்மூலம்தெரியவந்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் கொழும்பு சுங்கப் பிரிவினரால் மீட்கப்பட்ட பாரியளவிலான ஹெரோயின் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி பிரதான சந்தேக நபரான சர்தாரியின் தொலைபேசியில் இருபது இலங்கையர்களின் இலக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

இந்த இலக்கங்கள் பற்றிய விபரங்களை பாகிஸ்தான் அதிகாரிகள், இலங்கை போதைப் பொருள தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வழங்கப்பட்ட 20 இலக்கங்களில் பத்து இலக்கங்கள் ஏற்கனவே செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொலைபேசி இலக்கங்களின் ஊடாக இலங்கையில் போதைப் பொருள் வர்த்தகருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் பற்றிய விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்தார் இலங்கைக்கு போதைப் பொருள் அனுப்பி வைப்பதற்கு முன்னதாக குவைத் நாட்டிற்கு இரண்டு கொள்கலன்களை அனுப்பி வைத்திருந்தார். இவற்றிலும் போதைப் பொருள் இருந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்தல் தொடர்பில் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட சிலரிடம் ஏற்கனவே வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (அ-9)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இந்நாள் ஜனாதிபதிக்கு சவாலானவர் அல்லர்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எந்த வகையிலும் சவாலானவர் அல்லர் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

எமது நாட்டு மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடனேயே உள்ளனர். அவரின் வேலைத்திட்டங்களை எதிர்பார்த்துள்ளனர். மக்களை பொறுத்தவரை கதாபாத்திரங்கள் என்பது முக்கியமல்ல. மாறாக யார் என்ன கொள்கையில் உள்ளனர் என்பதே முக்கியமாகும்.

எனவே, அந்த கோணத்தில் நோக்குகையில் ஜனாதிபதி மஹிந்தவின் கொள்கைகளை மக்கள் முழுமையாக ஏற்றுள்ளனர் என்பதே அர்த்தம் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை பொது வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகள் மட்டத்தில் ஆராயப்பட்டதாக வெளிவரும் தகவல்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு முயற்சிக்கப்படு வதாக தகவல்கள் வந்துள்ளன. ஆனால், அவை குறித்து மேலதிகமாக எந்த விடயமும் தெரியவில்லை.

ஆனால், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எந்த வகையிலும் சவாலானவர் அல்லர் என்பதை உறுதியாக கூற முடியும்.

மக்களை பொறுத்தவரை கதாபாத்திரங்கள் என்பது முக்கியமல்ல. மாறாக முன்வைக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களும் கொள்கைகளுமே அவர்களுக்கு முக்கியமானவையாகும்.

அந்தவகையில் பார்க்கும் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேலைத்திட்டங்களையும் கொள்கைகளையும் நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர். அவரின் வேலைத்திட்டங்களை மக்கள் எதிர்பார்த்து அவற்றுக்காக காத்துக் கொண்டிருக்கின்னர். அந்த வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மக்கள் முழுமையாக விரும்புகின்றனர் என்றார். (அ-9)



வல்வை இந்து மயானத்தின் சிரமதான வேலை கரவெட்டி பிரதேச சபையினராலும் மயானத்தின் நிர்வாகிகளாலும் முன்னெடுக்கப்பட்ட போது... (படம்: - கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மையான உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## கட்சியிடம் கோருகிறார் சுரேஷ் எம்.பி

**வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டங்களைத் தோற்கடிக்கும் மற்றும் மன்றத்தின் செயற்பாடுகளுக்கு ஊறுவிளைவிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என கூட்டமைப்பின் உயர்மட்டம் தீர்மானித்துள்ள நிலையில் தீர்மானத்தை மதிக்காமல் உறுப்பினர்கள் சிலர் நடந்து கொள்கின்றனர்.**

ஒழுக்கமான, செம்மையான உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவதற்காக கட்சியின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த கூட்டமைப்பின் பங்காளி கட்சிகள் தமிழரசு கட்சியின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராசாவிடம் வலியுறுத்தவுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், கட்சியின் ஊடகப்பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உயர்மட்ட மாநாட்டில் கட்சியின் ஆட்சியின் கீழுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் வரவுசெலவு திட்டத்தை தோற்கடிக்கும் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது.

எனினும் அண்மையில் வல்வெட்டித்துறை நகரசபை, வலி. கிழக்கு பிரதேசசபை ஆகியவற்றின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளபோதும் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கிடையிலேயே கடுமையான முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் விடயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் குறிப்பிடுகையில்,

மேற்படி இரு உள்ளூராட்சி சபைகளிலும் ஒரே கட்சியின் உறுப்பினர்களுக்கிடையில் கடுமையான முறுகல் நிலை ஏற்பட்டிருந்தமையை நாம் அறிந் திருக்கின்றோம்.

ஆனால், கடந்த 24ஆம் திகதி இடம்பெற்ற கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டத்தில் மாகாணசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அனைவரும் இணைந்து ஏகமனதாக மேற்படி தீர்மானத்தை எடுத்திருந்தோம்.

ஆனால், சட்டபூர்வமான முடிவுகளையும், தீர்மானங்களையும் எடுக்கும் பொறுப்பு தமிழரசு கட்சிக்கும், கட்சியின் செயலாளர் நாயகம் மாவை சேனாதிராசாவுக்கும் உரியது.

எனவே, ஒழுக்கமானதும், செம்மையானதுமான உள்ளூராட்சி சபைகள் உருவாக்குவதற்கு கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவற்றில் மாகாணசபை உறுப்பினர்கள் சிலர் முக்கியமான வகிபாகத்தை கொண்டிருப்பதாக மக்கள் குற்றம் சாட்டியிருக்கின்றார்கள்.

எனவே, மேற்படி விடயம் தொடரபில் நாம் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவுடன் நிச்சயமாக பேசுவதுடன், உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம் என்றார். (அ-2)

# மனித புதைகுழி தோண்டும் பணிகள் இடைநிறுத்தம்

மன்னார் திருக்கேதீஸ்வரப் பகுதியில் பாரிய மனித புதைகுழி தோண்டும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தக்குழியில் தொடர்ந்தும் மனித எச்சங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதால் அகழ்வராய்ச்சியாளர்களின் உதவி தேவைப்படுவதனால் அவர்கள் உதவி கிடைக்கும் வரை எதிர்வரும் ஜனவரி மாதம் மூன்றாம் திகதி வரையில் தோண்டும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் இதுவரை மீட்கப்பட்ட எச்சங்கள் என்பு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இதன்மூலம் இந்த எச்சங்கள் எத்தனை காலத்துக்கு முற்பட்டவை என்பதை அறிந்துகொள்ள முடியும் என்று இலங்கை நீதித்துறை மருத்துவ அதிகாரி தனஞ்செய வைத்யரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதி 15 வருட காலமாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. எனவே, படையினரின் எச்சங்களாக இருக்கலாம் என்று இலங்கை இராணுவம் கூறுகிறது.

எனினும் இவை 2009 ஆம் ஆண்டு படையினரால் பிடித்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்ட தமிழ் மக்களின் எச்சங்களாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. (அ-9)



பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் இளைஞர்களினால் விசேடமாக வடிவமைக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரத்தினை படத்தில் காணலாம்.

# தெரிவுக்குழுவை யார் எதிர்த்தாலும் அதை கருத்தில் எடுக்க மாட்டோம்

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கெதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அறிவிப்புக்களை விடுப்பது வழக்கமான செயற்பாடாயிற்று. இவை குறித்து அரசாங்கம் ஒருபோதும் அலட்டிக்கொள்ள மாட்டாது என பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பினர் மட்டுமன்றி எந்தவொரு அரசியல் கட்சி பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கெதிராக கருத்து தெரிவித்தாலும் அதனை பொருட்படுத்தாது திட்டமிட்டவகையில் எமது பணிகள் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை, சுயாதீனமான குழு என்ற வகையில் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட மாட்டாது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அரசாங்கத்தின் உறுப்பினர்களை மாத்திரம் கொண்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவில் நம்பகத் தன்மையில்லையெனவும் இதற்கு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, கருத்துக்களை கூறுவது அவரவர் உரிமை. எனினும் தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை முடக்கும் வகையிலான கருத்துக்களுக்கும் அறிவிப்புகளுக்கும் அஞ்சி அரசாங்கம் ஒருபோதும் அதன் செயற்பாடுகளிலிருந்து பின்வாங்க மாட்டாது எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற தெரிவுக் குழுவின் சாட்சியாளர்களால் முன்வைக்கப்படும் கருத்துக்களும், ஆலோசனைகளும் சிபாரிசுக்கு உட்படுத்தப்படும் எனக் கூறிய அமைச்சர், அதன் நிகழ்ச்சி நிரல் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் குறித்து தகவல்கள் வெளியிடப்பட மாட்டாது எனவும் தெரிவித்தார். (அ-2)

# நாட்டின் அரசியல்வாதிகள் சீர்கெட்டுப் போயுள்ளனர்

இலங்கையில் குறையாக இருபது கசினோ மட்டுமே என்பதால் அதனையும் கொண்டுவர முயற்சிக்கப்படுவதாக பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அரசியல்வாதிகளின் பெரும்பாலானோர் மிகவும் சீர்கெட்டுப் போயுள்ளனர். இவர்களின் ஊழல் மோசடிகள், குற்றச் செயல்கள் பற்றி தினமும் ஊடகங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

அரசியல்வாதிகளிடம் இருந்து பிள்ளைகள் முன்னுதாரணங்களை பெறுவதில்லை. இதனால் அறநெறி பாடசாலைகளிலேயே பிள்ளைகளை சிறந்தவர்களாக வளர்க்க வேண்டியுள்ளது.

நாட்டில் குறையாக இருந்தது கசினோ மட்டுமே. தற்போது அதனையும் கொண்டுவர முயற்சித்து வருகின்றனர் என்றார். (அ-2)

# பிரதமர் குற்றமிழைத்தாலும் தூக்கிலிட வேண்டியது அவசியம்

## பிரதமர் தெரிவிப்பு

பிரதமர் என்றாலும் குற்றம் செய்திருந்தால் தூக்கிலிட வேண்டுமென பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

மாத்தளை விஹாரை ஒன்றின் அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நல்லதை விடவும் கெட்டதே எங்கள் கண்களுக்கு தெரியும். மனிதன் என்பவன் நிறைய குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றவன். சிறிய சிறிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. 29 ஆயிரம் சிரேஷ்ட பௌத்த பிக்குள் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.

காவி உடை போர்த்திய குற்றவாளிகள் சிலரும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான நபர்களின் செயற்பாடுகளினால் பௌத்த தர்மத்தின நன்மதிப்பு சீர்குலைக்கப்படுகின்றது.

வாழைத்தோட்டத்திற்கு அருகாமையில் ஒருவன் செல்வதனால் அவனை வழைப்பழத் திருடன் என குறிப்பிட முடியாது.

இலங்கையை போதைப் பொருள விற்பனை செய்யும் மத்திய நிலையமாக மாற்றுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# போராட்டத்திற்கு தயாராகும் வர்த்தக வலய ஊழியர்கள்

(கொழும்பு)

இலங்கை முதலீட்டுச் சபை சம்பளத்தை அதிகரிக்காது போனால் அடுத்த வருடம் சம்பள அதிகரிப்பை கோரி போராட்டங்களை நடத்த போவதாக சுதந்திர வர்த்தக வலய பொது ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை பரிந்துரைத்த அரசாங்கம் தனியார் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அந்த சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதனால் இலங்கை முதலீட்டுச் சபை சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க வேண்டும் என பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 2014- மார்ச்சின் பின்னாவது, பேச்சுக்கள் சாத்தியமாகுமா?



இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டு அரசியலமைப்பு திருத்தத்திற்காக அரசாங்கம் நியமித்துள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவையும், இறுதி யுத்தம் இடம்பெற்றபோது நிகழ்ந்த உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதம் ஆகியவற்றை கண்டறிவதற்கான குடிசன மதிப்பீட்டையும் நிராகரிப்பதென தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் அண்மையில் நடைபெற்ற அக்கட்சியின் தலைவர்களின் கூட்டத்தை அடுத்து தெரிவித்துள்ளனர்.

இதில், நீர்ப்பாசன அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் தலைமையிலான தெரிவுக் குழுவை நிராகரிப்பதென்ற முடிவு புதியதல்ல. அக்குழு நியமிக்கப்படும் முன்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை நிராகரித்திருந்தது. குடிசன மதிப்பீட்டை நிராகரிப்பதற்கான முடிவுதான் இவற்றில் புதிய முடிவாகும்.

இனப்பிரச்சினை தொடர்பான தெரிவுக்குழுவை நிராகரித்தாலும், பேச்வுவார்த்தைக்கு வருமாறு கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விடுத்த அழைப்பை கூட்டமைப்பு நிராகரிக்கவில்லை. வரவு-செலவு திட்டத்தின் மீதான விவாதத்தின் இறுதி நாள் நிகழ்ச்சிகளில், கலந்து கொண்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி, கூட்டமைப்பின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்றால், தாம் பேச்சுவார்த்தைகளை நிராகரிக்கவில்லை, என்றே இதற்குப் பதிலளித்த கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியிருந்தார்.

தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நட நடத்துவதற்கு எதுவும் இல்லை என்றும் அவர்கள், அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஏற்பதைத் தவிர தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வில்லை என்றும் ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்தர முன்னணி போன்ற அரசாங்கத்தில் உள்ள கட்சிகள் கூறி வருகின்றன. இந்த நிலையில் தான், ஜனாதிபதி தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறார்.

சம்பிக்க ரணவக்க மற்றும் விமல் வீரவன்ச போன்ற தமது அமைச்சர்கள், எதைக் கூறினாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சனைகள் இருப்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருப்பதனாலேயே, அவர், பேச்சுவார்த்தை நடத்த வருமாறு கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கிறார். தெரிவுக்குழுவை நியமித்ததன் மூலமும் பேச்சுவார்த்தைக்கான அவசியத்தை அரசாங்கம் உலகத்தார் முன்னிலையில் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழ்த் தரப்பினரும் பிரச்சினைகளை முன்வைத்தவண்ணமே தான் இருக்கிறார்கள். அதிகாரப் பரவலாக்கல், காணிப் பிரச்சினை, பெண்களின் பாதுகாப்பு, காணமாற் போனோர்களின் பிரச்சினைகள் என்று பலவற்றை அவர்கள் முன்வைக்கிறார்கள். இவற்றையும் தீர்த்துக்கொள்ள பேச்சுவார்த்தையை தவிர வேறு வழியில்லை. அரசாங்கமும் தமிழ்த் தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றே சர்வதேச சமூகமும் அடிக்கடி வலியுறுத்திவருகிறது. ஆனால், ஜனாதிபதியின் அழைப்பின் நோக்கத்தை எதிர்க்கட்சிகள் சந்தேகிக்கின்றன. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டத்தை இலக்காக வைத்தே ஜனாதிபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறார், என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல கூறியிருந்தார்.

கடந்தவருடம் மார்ச் மாதமும் இவ்வருட மார்ச் மாதமும் ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு பாதகமான இரண்டு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. அதிகாரப் பரவலாக்கலை முறைப்படுத்த வேண்டும் என்ற கருத்தும் அந்தப் பிரேரணைகளில் இருந்தது.

எனவே, தாம் அந்த விடயத்தில் நடவடிக்கை எடுத்துள்ளதாக மனித உரிமை பேரவைக்கு எடுத்துக்காட்ட அரசாங்கத்திற்கு ஏதாவது ஆதாரம் அவசியமாக இருக்கிறது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தால் அதனை ஆதாரமாக எடுத்துக்காட்டலாம். அதைத்தான் கிரியல்ல கூறுகிறார்.

இதற்கு முன்னரும் அரசாங்கம் இவ்வாறு நடந்துகொண்டுள்ளமையும் அவர் அவ்வாறு கூறுவதற்கு காரணமாக இருந்திருக்கலாம். போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில், தாம் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வரும் நிலையிலேயே விடுதலைப்புலிகள் போராடுகிறார்கள் என்று உலகத்தார் முன் எடுத்துக்கூற அரசாங்கம் முயற்சித்தது.

அதற்காக அக்காலத்தில் ஜனாதிபதி சர்வகட்சி மாநாடொன்றை கூட்டினார். பின்னர் அந்த மாநாடு சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவொன்றை நியமித்தது. அக்குழு ஒரு வருடத்திற்கு மேலாக கூட்டங்களை நடத்தி போர் முடிந்த உடன் அதாவது, 2010 ஆம் ஆண்டு, அதன் அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தது. அவ்வளவுதான். அந்த அறிக்கை, காணாமற்போய்விட்டது.

பின்னர், ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீ மூன் இலங்கை விடயத்தில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக மர்சூகி தருஸ்மான் தலைமையில் குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுத்தபோது, இலங்கை அரசாங்கம் 2010 ஆம் ஆண்டு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ற பெயரில் ஆணைக்குழுவொன்றை நியமித்தது. அக்குழு 2011 ஆம் ஆண்டு தமது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தது. அவர், அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அவ்வறிக்கையை சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொண்டது. எனவே, அரசாங்கமும் அந்த அறிக்கையை காட்சிப் பொருளாக்கிக் கொண்டது.

ஆனால், தாம் நியமித்த அந்த ஆணைக்குழுவின் சிபார்சுகளை நிறைவேற்ற அரசாங்கம் தயங்கி வருகிறது. கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்கள், சனல் 4 வீடியோ, போன்ற பல விடயங்கள் தொடர்பாக அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அரசாங்கம் அவற்றைப்பற்றி நடவடிக்கை எடுக்க தயங்கி வருகிறது.

தெரிவுக்குழுவை நியமிக்கு முன்னரும் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்தது. அந்த காலத்திலும் அரசாங்கம், அப்பேச்சுவார்த்தைகளையும் உலகுக்கு காட்டி இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக தாம் நடவடிக்கை எடுத்து வருவதாக கூறிவந்தது.

இதனிடையேதான் அரசாங்கம் திடீரென தெரிவுக் குழுவை நியமிக்கும் ஆலோசனையை முன்வைத்தது. அந்த நிலையில் தாம், அரசாங்கத்துடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளின் முடிவை தெரிவுக் குழுவின் அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என தாம் கூறியதாகவும் அரசாங்கம் அதற்கு இணங்கியதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்போது கூறியது.

ஆனால், தாம் அதற்கு இணங்கவில்லை என பின்னர் அரச பிரதிநிதிகள் கூறினர். இதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவை நிராகரித்தது. அதற்காக ஆளும் கட்சியிலிருந்து 19 பேர் நியமிக்கப்பட்டனர்.

ஆனால், ஏனைய கட்சிகள் தமது பிரதிநிதிகளை நியமிக்கவில்லை. எனவே, தெரிவுக்குழு கூடாமலே அதன் தொழிற்படும் காலம் கடந்துவிட்டது.

எனவே, தான் சில தினங்களுக்கு முன்னர் அரசாங்கம் அதன் காலத்தை நீடித்தது. அவ்வாறு தெரிவுக்குழுவின் காலம் நீடிக்கப்பட்டதன் பின்னர் தான், ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்கு வருமாறு த.தே.கூ. தலைவர் இரா.சம்பந்தனையும் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனையும் அழைத்திருக்கிறார். அந்த பேச்சுவார்த்தை விடயத்தில் அரசாங்கத்தின் நோக்கமும் சந்தேகமாக இருக்கிறது தான். அதே வேளை, இலங்கையின் சமாதான பேச்சுவார்த்தை வரலாறும் ஒருபோதும் திருப்திப்படும் வகையில் அமைந்ததில்லை; மோசமானதாவே காணப்பட்டது. ஆனால், பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேறு என்ன வழி இருக்கிறது என்பதும் எண்ணிப் பார்க்கவேண்டிய கேள்வியாகும்.

பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக காலங்காலமாக உலகம் ஏற்றுக்கொண்ட நாகரிகமான ஒரேவழி பேச்சுவார்த்தையே. பேச்சுவார்த்தைகளின்போது சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஒருவருக்கொருவர் சிக்கலை ஏற்படுத்தினாலும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதென்பது தவிர்க்க முடியாதது.

எனவே, 2014 மார்ச்சுக்குப் பிற்பாடு இருதரப்பும் பேச்சில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு உருவாகலாமா? என பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.


-எம்.எஸ்.எம் ஐயூப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 புதுவருட பலன்கள்

## இடபம்





**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

**இராகு-கேது மாற்றத்தால் நல்ல மாற்றம் வந்து சேரும்!**

**தான் மட்டுமல்லாமல் அருகில் இருப்பவர்களும் ஆனந்தமாக வாழ விரும்பும் இடப இராசிநேயர்களே!**

## வெற்றித் தேவதை வீடுதேடி வந்து வரம் தரும் நேரம்!

புது வருடம் பிறக்கப்போகிறது. பொன்னான காலம் வரப்போகிறது. ஞானகாரகன் கேதுவின் ஆதிக்கத்தில் இந்த ஆண்டு பிறக்கிறது. வானளாவிய புகழை வழங்கும் சனி உச்சம் பெற்றிருக்கிறார். வக்ர கதியில் வியாழனும், சுக்ரனும் சஞ்சரிக்கிறார்கள்.

தக்க விதத்தில் பலன் கூறும் தனாதிபதி புதனோ வலிமையிழந்து அஷ்டமத்தில் மறைந்திருக்கிறார். ராகு-கேதுக்கள் 6 இலும், 12 இலும் இருக்கிறார்கள். இத்தனைக்கும் மத்தியில் இந்தப் புது வருடம் எப்படிப்பட்ட பலன்களை உங்களுக்கு வழங்கப்போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

பொதுவாகவே நீங்கள் மற்றவர்களை உற்சாகமூட்டப் பிறந்தவர்கள். இராசிநாதன் சுக்ரனாக இருப்பதால் வசீகர சக்தி

**சிவல்புரி சிங்காரம்**

உங்களுக்கு உண்டு. உங்களிடம் ஒரு செயலை ஒப்படைத்தால் எப்பாடுபட்டாவது முடித்துவிடுவீர்கள். உங்கள் பேச்சில் நகைச்சுவையும் நிறைந்திருக்கும். இடையிடையே பகைச் சுவையும் கலந்திருக்கும். வீரத்தைக் காட்டிலும் விவேகம் கூடுதலாகவே உங்களிடம் குடியிருக்கும்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட உங்களுக்கு சுயஜாதகத்தில் உள்ள கட்டங்களையும் 2014 ஆம் ஆண்டு புதுவருட கட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

2014 ஆம் ஆண்டு கேதுவிற்குரிய 7 எண் ஆதிக்கத்தில் வருவதால் உங்கள் சுயஜாதகத்தில் கேதுவின் பாதசார பலம் மற்றும் இராசிநாதன் சுக்ரன், தனாதிபதி புதன் ஆகியவற்றின் பலமறிந்து பாக்யாதிபதி அம்சத்திலிருக்கும் நிலையறிந்து அதற்குரிய ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து யோக பலம்பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் தேகநலம் சிறப்பாக இருக்கும். உங்கள் பெயர் எண் ஆதிக்கமும் தொழில் நிலையத்தின் பெயரும் அதிர்ஷ்ட எண் ஆதிக்கத்தில் நீங்கள் அமைத்துக்கொண்டால் வெற்றித் தேவதை வீடு தேடி வந்து வரம் தரும்.

01.01.2014முதல் 12.06.2014வரை

வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரன் வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். சுக்ரன் 6 ஆம் இடத்திற்கு அதிபதியாவதால் கொடுக்கல்- வாங்கல்களில் பற்றாக்குறை ஏற்படும். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் உங்களுக்கு விரிவடைந்திருப்பதால் தேவைகள் உடனுக்குடன் மாற்றம் ஏற்படும். கூட்டு முயற்சியில் உங்களுக்கு ஒத்துழைப்பு செய்தவர் விலகலாம். குடியிருக்கும் வீட்டாலும் உடனிருப்பவராலும் பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும் [illegible] கொள்வது [illegible] உங்களுக்கு கெடுதல் செய்தவர்கள் விலகிச் செல்வர். மங்கலகரமான புதுவருடத்தில் இந்த ராகு-கேதுப்பெயர்ச்சி மனக்கசப்புக்களை மாற்றும். பணப்புழக்கத்தை அதிக [illegible] இருப்பினும் ராகு-கேதுக்கள் முறையான

பூர்த்தியாகும்.

தனாதிபதி புதனும், அஷ்டம லாபாதிபதியான குருவும் பரிவர்த்தனை பெற்று வருடம் தொடங்குவதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி வரும். மதிப்பையும், மரியாதையையும் தக்க வைத்துக்கொள்வீர்கள். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு சிலருக்கு கூடுதல் பணம் தேவைப்படலாம்.

உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் அனுசரிப்பு திருப்திகரமாகயிருக்கும். புத-ஆதித்ய யோகம் செயற்படுவதால் பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். ராகு பலத்தால் அரசு வேலைக்காக விண்ணப்பித்தவர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் அது கிடைக்கலாம்.

விரய ஸ்தானத்தில் கேது வீற்றிருப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களை விற்று, கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்துகொள்ளலாமா என்று சிந்திப்பீர்கள். நேர்மையான வழியில் செல்லும் உங்களுக்கு நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாவதில் தாமதம் ஏற்பட்டாலும் நண்பர்களின் ஒத்துழைப்புடன் கடைசி நேரத்தில் காரியங்கள் கூடுவிடும்.

**எப்படி இருக்கும் சனிப்பெயர்ச்சி!**

இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் உச்சம்பெற்று விளங்குகிறார். இந்த ஆண்டு கடைசியில் சனிப்பெயர்ச்சி நிகழவிருக்கிறது. 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து கண்டக சனி என்ற பெயரோடு உங்கள் இராசியில் பார்வை பதிக்கப்போகிறது.

உங்கள் இராசியைப் பொறுத்த வரை சனி நற்பலன்களைக் கொடுப்பவர். எனவே, பயப்படத் தேவையில்லை. வீண் விவகாரங்களில் தலையிட வேண்டாம். வீட்டுப் பிரச்சினைகளை மற்றவர்களிடம் எடுத்துரைக்க வேண்டாம். நாட்டுப்பற்று மிக்க அரசியல்வாதிகளுக்கு பொறுப்புக்களில்

வழைத்துக்கொள்ள இயலும்.

**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

குருவின் வக்ர காலம் உங்களுக்கு கொடுக்கல்- வாங்கல்களில் திருப்தியைக் கொடுக்கும். நண்பர்கள் நல்ல காரியம் செய்ய உறுதுணை புரிவர். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும். மக்கட் செல்வங்களால் உதிரி வருமானங்கள் கிடைக்கும். அதே நேரத்தில் சனியின் வக்ர காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. குடும்பச் சுமை கூடும். பொறுமை அவசியம்.

**இடப இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்த புதுவருடம் உங்களுக்கு பூமி யோகம் முதல் புனித யாத்திரைகளை அமைத்துக்கொடுக்கும் யோகம்வரை நல்ல வாய்ப்புக்களை வழங்கப்போகிறது. வருடத் தொடக்கத்திலேயே வரவு திருப்திகரமாக இருக்கும். கணவன்- மனைவிக்குள் இருந்த பிணக்குகள் அகலும்.

குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புக்கள் கைகூடும். சிலருக்கு வேலையும் கிடைக்கும். விரும்பியபடியே மணமாலை சூடிக்கொள்ளும் வாய்ப்பும் உருவாகும். ராகு-கேது பெயர்ச்சிக்குப் பின்னால் தொழில் தொடங்கும் முயற்சிக்கு பச்சைக்கொடி காட்டுவர். ஆபரண சேர்க்கை உண்டு. சனிப்பெயர்ச்சிக்குப் பின்னால் கவனம் தேவை. சர்ப்ப சாந்தியும், அனுமன் வழிபாடும் சஞ்சலம் தீர்க்கும்.

**நலம் தரும் இராகு-கேது பெயர்ச்சி!**

இதுவரை துலாம் இராசியில் ராகுவும், விரய ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரித்து வந்தார்கள். இந்த புதுவருடத்தில் ஜூன் 21 ஆம் திகதி பின்னோக்கிச் சென்று கன்னி இராசியில் ராகுவும், மீன இராசியில் கேதுவுமாக சஞ்சரிக்கப்போகிறார்கள். பஞ்சம ஸ்தான இராகு உங்கள் பணத்தேவைகளை பூர்த்தியாக்கும். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பிரச்சினைகள், சகோதரர்கள் வழி கருத்துவேறுபாடுகள் தீரும். இல்லம் கட்டிக் குடியேறும் வாய்ப்பு கிடைக்கும்.

கேதுவின் பலத்தால் ஆடம்பர சாதனங்களை வாங்கும் சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு, உத்தியோக உயர்வு மற்றும் எதிர்பார்த்த சலுகைகள் அனைத்தும் கிடைக்கும். உங்களோடு பணிபுரிந்து கொண்டே நற்பலன்களை முன்னேற்றம் தரும் விதத்தில் வழங்க சர்ப்ப சாந்தி பரிகாரங்களை நீங்கள் செய்து கொள்வது நல்லது. சுயஜாதகத்தில் ராகு-கேதுக்களின் பலமறிந்து அதற்குரிய ஸ்தலங்களுக்கு யோகம் பலம் பெற்ற நாளில் சென்று பரிகாரம் செய்வதே நல்லது.

**சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு!**

புதுவருடத்தில் குருப்பெயர்ச்சி நிகழவிருக்கிறது. குருவின் ஆதிக்கம் உங்கள் இராசிநாதனுக்குப் பகைவனாக இருப்பதால் அது பார்க்குமிடத்தைப் பலன்தரும் இடமாக மாற்றிக்காட்டி விடும். அந்த அடிப்படையில் ஜூன் 13 ஆம் திகதி நிகழவிருக்கும் பெயர்ச்சியால் 7,9,11 ஆகிய மூன்று இடங்களும் புனிதமடைகின்றது. எனவே திருமண வாய்ப்புக்கள் கைகூடவில்லை என்று ஏங்கியவர்களுக்கு மறுமலர்ச்சி ஏற்படும் விதத்தில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். திருமணம் முடிந்து ஒற்றுமையில்லாமல் பிரிந்து இருந்த தம்பதியர்கள் மீண்டும் இணைந்து மகிழ்ச்சிக் கடலில் மிதப்பீர்கள்.

அந்நிய தேசத்திலிருந்து வரும் தகவல் அனுகூலம் தரும். புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வரவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். கண்ணியமிக்க மனிதர்கள் உங்கள் காரிய வெற்றிக்கும், கவலை தீருவதற்கும் உறுதுணையாக இருப்பார்கள். பெற்றோர் வழிப் பிரச்சினைகள் பெரிதாகிவிட்டதே என்று கவலைப்பட்டவர்களும், உற்றார், உறவினர்களும், உடன்பங்காளிகளும் உறுதுணையில்லா



மல் போய்விட்டார்களே என்று நினைத்தவர்களும் மட்டற்ற மகிழ்ச்சி காணும் விதம் நல்ல மாற்றங்கள் வந்து சேரப்போகிறது. விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்துசேரும். வருமானம் திருப்தி தரும். விருந்தினர்களின் வருகை அதிகரிக்கும்.

பெண் குழந்தைகளின் சுப சடங்குகள், பூப்புனித நீராட்டுவிழாக்கள் போன்றவற்றை நடத்தி மகிழ்வீர்கள். உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உருவாகும்.

ஒரு காலத்தில் பணத் தேவைகள் பூர்த்தியாகாமல் தடுமாறிய நீங்கள் இப்பொழுது பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு இதைச் செய்வோமா? அதைச் செய்வோமா? என்று யோசிக்கப் போகிறீர்கள். வாகனங்கள் வாங்கும் போது அதிர்ஷ்ட எண்களின் ஆதிக்கத்தில் வாங்கினால் அதை ஓட்டிச் செல்லும் இடங்களில் உன்னத பலன் கிடைக்கும். முறையான குருவழிபாடு முன்னேற்றம் வழங்கும்.

**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு!**

ராசிநாதன் சுக்ரன் என்பதால் வெள்ளிக்கிழமை தோறும் உள்ளூர் கோவில்களுக்குச்சென்று அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பிறந்த திகதியின் அடிப்படையில் சிறப்பு வழிபாடும், யோகபலம் பெற்ற நாளில் நந்தீஸ்வரர் வழிபாடும் செய்தால் நினைத்த காரியம்நினைத்தபடி நிறைவேறும்.

**நாளை மிதுனம்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசியல் வலுவுடைய உள்ளூராட்சி எனும் அத்திவாரம் பலமாக்கப்படவேண்டும்

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

இலங்கையின் தேசிய அரசியல் உள்ளூராட்சி அரசியலுடன் கட்டியெழுப்பட்டுள்ளது. தேசிய அரசயல் வலுவாக இருக்க வேண்டுமாயின் உள்ளூராட்சி என்ற அத்திவாரம பலமானதாக இருக்க வேண்டும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தேசிய அரசியலில் உள்ளவர்களை விட உள்ளூராட்சி அரசியலில இருப்பவர்களுக்கே உள்ளூராட்சி அரசியலை வலுப்படுத்தும் பொறுப்புள்ளது.

தற்போதைய சமூக முறையில் பணம் தொடர்பில் நம்பிக்கை கொண்டவர்களில் சிலர் அரசியலுக்கு வந்து, தமது அரசியல் பலததை வணிக வர்த்தக பலமாக பயன்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

இதன் மூலம் ஏற்படும் சீர்கேடு காரணமாக அரசியல்வாதி என்ற பெயர் பாதிக்கப்படும். அரசியல்வாதிகளே தமது பெயர்களை கெடுத்து கொள்கின்றனர்.

உள்ளூராட்சி சபைகளில் அண்மையில் ஏற்பட்ட வரவு செலவுத் திட்டங்களின் தோல்வியானது பலம் மற்றும் பணத்தை அடிப்படையாக கொண்டதாகவே நான் காண்கின்றேன். அரசியல் பலத்துடன் தமது பொருளாதாரத்தை எப்படி அதிக ரித்து கொள்ளலாம் என சிந்தித்து வேலை செய்யும் போது இப்படியான பிரச்சினைகள் ஏற்படுவதோடு ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

பலம் மற்றும் பணம் மீது நம்பிக்கை வைக்காது அரசியலில் ஈடு படும நபர்கள் மனிதாபிமானம் மற்றும கொள்கையில் பற்று கொண்ட அரசியலில் ஈடுபடுவார்கள் என்றார். (அ-2)

# தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி; இறக்குமதி செய்ய முடிவு

ஆசியாவில் அதிக தேங்காயை உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றான இலங்கையில் இப்போது தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி அடைந்து இருப்பதாகவும் தென்னந்தோட்டங்கள் பிரித்து விற்கப்படுவதே இதற்கான காரணம் என்றும் கூறப்படுகிறது.

தேங்காய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் பிஸ்கட் உற்பத்தியாளர்களுக்கும் உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்வோருக்கும் உதவும் முகமாக அரசாங்கம் கொப்பறாவை இறக்குமதி செய்ய முடிவெடுத்துள்ளது.

அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் வரை நோய்த்தாக்கம் அற்றதாக உறுதிப்படுத்தப்பட்ட 30 ஆயிரம் தொன் கொப்பறா இறக்குமதி செய்யப்படும்.

இவற்றை இறக்குமதி செய்பவரகள செஸ்வரி, வற்வரி உட்பட துறைமுக விமான நிலைய கட்டணங்களையும் செலுத்த வேண்டும்.

கமநல சேவைத்திணைக்களம், தெங்கு அபிவிருத்தி அதிகார சபை ஆகிய இரண்டும் ஒன்றிணைந்து தேவை ஏற்படும் போது கொப்பறாவை இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கவுள்ளன. கொப்பறா உற்பத்தியின் மூலம் உள்ளூர் கைத்தொழில் பாதிக்காத வகையில் இதனை செயற்படுத்து வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சிறையிலுள்ள தமிழக மீனவர்கள் தமிழக முதலமைச்சருக்கு கடிதம்

(திருகோணமலை)

சிறைக் கைதிகள் பரிமாற்றம் செய்யும் நடவடிக்கையின் கீழ் தமது விடுதலை தொடர்பில் தலையீடுகளை மேற்கொள்ளுமாறுகோரி திருகோணமலை சிறையில் உளள இந்திய மீனவர்கள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழகத்தை சேர்ந்த 142 மீனவர்கள் திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களின் கையெழுத்திட்டு எழுதப் பட்டுள்ள இந்த கடிதம் திருகோணமலை சிறைச்சாலை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமது விடுதலை தொடர்பில் இந்திய அதிகாரிகள் தலையீடுகளை மேற்கொள்ளாது போனால் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க போவதாக மீனவர்கள் தமது கடித்தில் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள இந்திய மீனவர்களுக்கு மருத்துவம் உட்பட தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நூறுக்கும் மேற்பட்ட இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# போதைப்பொருள் வியாபாரத்தின் பின்னணியில் அரசாங்கமேயுள்ளது

## பொதுபல சேனா குற்றச்சாட்டு

போதைப்பொருள் வியாபாரத்தின் கேந்திர நிலையமாக இலங்கை மாறி விட்டது. இதன் பின்னணியில் அரசாங்க தரப்பினரே உள்ளனர் என பொதுபலசேனா பௌத்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

பௌத்த நாட்டில் போதைப் பொருள் வியாபாரத்தை மேற்கொள்வது யாராக இருப்பினும் அவர்களை தண்டிக்க வேண்டும் மற்றும் காலம் கடந்தால் குற்றத்தை கண்டுபிடிக்க முடியாதெனவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொதுபலசேனா பௌத்த அமைப்பின்பொதுச்செயலாளர கலபொட அத்தே ஞானசார தேரர் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஆசியாவின் போதைப்பொருள வியாபாரத்தின் முக்கிய இடமாக இலங்கை மாறி விட்டது. தினமும் அதிக தொகையிலான போதைப் பொருள் கைப்பற்றப்படுகின்றது. குறைந்த அளவிலான மக்கள் தொகையினைக் கொண்டுள்ள எமது நாட்டில் டொன் நிறைகளில் போதைப் பொருள் பரிமாறப்படுகின றமையானது எமது மக்களிடையே பெரிய பாதிப்பினை ஏற்படுத்தும்.


அரசாங்கம் கடுமையான சட்ட திட்ங களையும் பாதுகாப்புக்களையும் நடைமுறைப்படுத்தியும் இவ்வாறு போதைப்பொருட்கள் கடத்தப்படுகின்றதென்றால் இதன் பின்னணியில அரசாங்கத்தின்தலையீடுகள்இருநதாக வேண்டும். இல்லையென்றால் இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையில் ஏற்பட வாய்ப்பில்லை. நிச்சயமாக 4அல்லது 5 அமைச்சர்கள் இதில் தொடர்புபட்டுள்ளனர். ஜனாதிபதி இதற்கான சரியான விதத்தில் நடவடிக்கை எடுக்கவில்லையாயின் வெகு விரைவில் இலங்கையும் முஸ்லிம் நாடுகளைப் போல் மாற்றம பெறலாம். பௌத்த நாடென்ற பயத்தினையும் மதிப்பினையும் அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

எமது நாட்டிலும் குற்றத்திற்கான தண்டனைகளை அதிகரிக்க வேண்டும. சூதாட்டக்காரர்களுக்கு இலங்கையில் இடம்கொடுப்பதன்காரணததினாலேயே இன்று இலங்கை மோசமான நாடுகளின் பட்டியலில் இணைந்துள்ளது.

எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை குறை சொல்வதை விடுத்து சர்வதேச தலையீடுகளுக்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்.

இல்லையேல் காலத்தைக் கடத்திக கொண்டிருந்தால் குற்றவாளிகள் தப்பிக்கொண்டே இருப்பார்கள்" என தெரிவித்துள்ளார். (அ-2)

# மூலநோய் (Piles)




ஆசன வாயிலில் இரத்தக் குழாய்களின் புடைப்பே மூலநோய் எனப்படும்.

இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் படும்பாடு சொல்லில் அடங்காது. இதனாலேயே திடீரென அதிகமாக கோபப்படுபவர்களை பார்த்து மூலக் கொதியன் என்று நாட்டு வழக்கில் கதைப்பதை அறிவீர்கள். இது இரண்டு வகைப்படும்.

உள் மூலம் (Internal piles), வெளிமூலம் (External piles)

உள் மூலம் எனப்படும் போது ஆசன வாயிலின் மேல் பகுதியில் உள்ள இரத்தக் குழாய்களில் ஏற்படும் புடைப்பினால் உருவாகிறது. உள் மூலத்தினாலேயே அதிகளவு மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது பின்வரும் நிலைகளைக் கொண்டுள்ளது. முதலாவது நிலையில் இரத்தம் வெளியேறுவதால் அதாவது இரத்த நாளங்களை மலமானது கீறிச் செல்வதனால் இரத்தமானது வெளியேறுகிறது.

இரண்டாவது நிலையில் ஆசன வாயினூடாக மென்சவ்வும் வெளியே வரும். இது மீண்டும் உட்சென்று




விடும். மூன்றாம் நிலையில் வெளியில் வரும் மென்சவ்வானது மீண்டும் உட்செல்லாது வெளியிலேயே காணப்படும்.

முதலாவது நிலையில் கவனம் செலுத்தாதவர்களே 2 ஆம் 3ஆம் நிலைகளுக்குத் தள்ளப்படுவார்கள். முதலாவது நிலையில் வைத்திய ஆலோசனை பெறுவதுடன் உணவுப் பழக்கம் உடற்பயிற்சி போன்றனவும் இந்நோயிலிருந்து நிவாரணம் பெற முடியும். இரண்டாம் நிலையிலும் மருந்து ஓரளவு பலனைத் தந்தாலும் 3 ஆம் நிலை ஏற்படின் அறுவைச் சிகிச்சை மாத்திரமே தீர்வைத் தரும்.

*மூலநோய் ஏற்படுவதற்கான காரணங்கள்*

மலச்சிக்கல், நீண்ட நேரம் தொடர்ச்சியாக இருத்தல் /நிற்றல், அதிகளவு அசைவஉணவுஉட்கொள்ளல், இலைக் கறிவகைகள், பழங்கள், நீர் என்பவற்றை போதியளவு உட்கொள்ளாமை, புகை மற்றும் மதுப்பழக்கம், கர்ப்பவதிகள், பரம்பரை, வேறு நோய் நிலைகள். உதாரணம்:- மலக்குடலில் கோளாறு வயிற்றில் கட்டி, அதிக உடற்பருமன்


*இதன் அறிகுறிகள்*

ஆசன வாயில் அரிப்பு, எரிவு மலச்சிக்கல், இரத்தம் வெளியேறுதல், அடிக்கடி கோபம் ஏற்படல்/ சினம் கொள்ளல், மனம் தளரல்/குழப்பம்.

வெளிமூலம் எனப்படும்போது குதவாயிலில் சிறிய மூளை போன்ற தசை ஒன்றோ பலவோ காணப் படும். இதனால் பாரியளவு பாதிப்பு ஏற்பட்டாவிடினும் நீண்ட நேரம் இருத்தல், சைக்கிள் ஓடுதல் போன்ற நிலைகளில் உராய்வு ஏற்படுவதால் நோ, எரிச்சல் ஏற்படுகிறது.

*இந்நோயிலிருந்து விடுபடுவதற்கு சில அறிவுரைகள்*

மலச்சிக்கல் ஏற்படாது தடுப்பதற்காக நார்த்தன்மையான உணவுகள், கீரை வகைகள், பழவகைகள் தினமும் உட்கொள்ளல், உடற்பயிற்சி செய்தல், உடல்நிறை குறைத்தல், கோப்பி, தேநீர் அருந்துவதைக் குறைத்தல், அசைவ, காரமான, புளிப்பான உணவுகள், கிழங்கு வகைகள் உண்ணுவதைக் குறைத்தல்/தவிர்த்தல், அதிக நேரம் இருத்தல்/நடத்தலைக் குறை



த்து மாறி மாறி இச் செயல்களை மேற்கொள்ளல், மணித் தக்காளி, அம்மான் பச்சரிசி கீரை சாப்பாட்டில் அதிகளவில் சேர்த்தல், கருணைக் கிழங்கினை வாரத்தில் 3 தினங்கள் சாப்பாட்டில் சேர்த்தல்; மிளகுத் தூள், பெருஞ்சீரகத்தூள் என்பவற்றை தேனில் கலந்து 5 கிராம் காலை, மாலை உண்ணல்.

வில்வம் காய், இஞ்சி, சோம்பு என்பவற்றைச் சேர்த்து குடிநீரிட்டு குடித்தல், அத்திப் பிஞ்சு, பூண்டு, மிளகு, மஞ்சள், பருப்பு என்பவற்றைச் சமைத்து உண்ணல், வெங்காயச் சாறுடன் நெய்/ சக்கரை கலந்து பருகுதல், தயிரில் வெங்காயத்தை ஊறவைத்து தினம் 2 வேளை உபயோகித்தல், கடுக்காய்த் தோலை தூளாக்கி விளக்கெண்ணெயில் கலந்து ஒரு தேக்கரண்டி உட் கொள்ளல், வட்டத்துத்தி இலையினை வதக்கி/பருப்புடன் சேர்த்து சமையல் செய்து சாப்பிடல், மாங்கொட்டை பருப்பை சிறுதுண்டுகளாக நறுக்கி உலர்த்தி இடித்து தூளாக்கி தினமும் ஒரு தேக்கரண்டி மோரில் உட்கொள்ளல், பிரண்டை கொழுந்து சிறிது நெய் விட்டு வறுத்து அரைத்து கொட்டைப் பாக்களவு காலை, மாலை உண்ணல், துத்தி இலையை ஆமணக்கெண்ணெய் விட்டுவதக்கிஆறியபின்னர் ஆசன வாயில் வைத்துக்கட்டுதல், குளிர் நீரில் (ஐஸ்தண்ணீர்) 10-15 நிமிடங்கள் ஆசன வாசலில் வைத்திருப்பதால் இரத்தம் வெளியேறல் கட்டுப்படும், பாகல் இலையை விளக்கெண்ணெயில் வதக்கி ஆசனவாயில் கட்டி வர வெளி மூலம் தீரும், வலியுள்ள இடத்தில் முருங்கை இலை அரைத்து பூசுதல், வெண் குங்கிலியம், நல்லெண்ணெய் சம அளவு கலந்த நீரில் இட்டு மத்தால் கடைந்து வரும் களிம்பை மூலத்தில் பூச தீர்வு கிடைக்கும். இக் களிம்பானது நீரிலிட்டு பாதுகாப்பதுடன் 2 நாட்களுக்கு ஒரு முறை நீரை மாற்ற வேண்டும்.


இவற்றிற்கு முதலாம் நிலை மூல நோய்கள் கட்டுப்பாட்டிற்கு வரும், அவ்வாறு இல்லாவிடத்து வைத்தியரை அணுகி ஆலோசனைகளைப் பெற்று இந்நோயிலிருந்து விடுபட முடியும்.

நன்றி:- அருள் ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் தேர்த் திருவிழா சிறப்பு மலர்-31.12.2013 இணுவில், மருதனார்மடம், சுன்னாகம்





### அனுமன் அடியவர்களே!

ஈழத்திருநாட்டின் வடபாக யாழ்ப்பாணத்தின் பேரருளும் பேரெழிலும் நிறைந்து விளங்கும் இணுவில் மருதனார்மட ஆஞ்சநேயப்பெருமானுக்கு இன்று தேர்த் திருவிழா. பகையாற்றலை வெல்லும் வீர மும் பக்திக்கு அருளும் ஈரமும் கொண்ட எங்கள் ஆஞ்சநேயப் பெரு மான் உலகை நன்மைக்காய் அடியவர் உள்ளங்களை நல்வழி ப்படுத்தி பாவம் வென்று நல்லருள்புரியும் அற்புத கைங்கர்யமாய் சித்திரத் தேரேறி திருக்காட்சி தந்து வீதியுலா வரும் திருநிகழ்வு இன்று. கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாய் ராமநாமம் ஒலிக்கும் இட மெல்லாம் சூழநிற்கும் சூட்சும சக்தியாய் ஆழ நினைந்துருகும் அடியவர் நெஞ்சில் வாழும் வல்லமைச் சக்தியாய் விளங்கும் இந்த மாருதி இரதமேறும் அற்புத தருணத்தில் இன்றைய விழா உபயகாரர்களான திரு சி.கதிர்காமநாதன் குடும்பத்தினருக்கும் மற்றும் அனைத்து பக்த அடியார்களுக்கும் நாள்தோறும் ஆஞ்சநேயன் ஆலயத்தில் பக்தியோடு பணிந்து வணங்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எம்பெருமான் தனிப்பெருங்கருணையினால் எல்லாவரங்களும் சித்திக்கவும் அனைவரும் வந்து வடம்பிடித்து ஆஞ்சநேயன் அருள் பெற்றுய்யவும் பிரார்த்திக்கின்றேன்.

*மாருதியைப் பணிந்தால் மறையும் தீவினை.*

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக் கள் ஆதீனகர்த்தாவும்
சிவாச்சாரியா ரும் ஸ்ரீ சுந்தரஆஞ்சநேயர் கோயில்
மருதனார்மடம். சுன்னாகம். இலங்கை.



### வாழ்த்துச் செய்தி

மூவா இளமையும் காட்டி முதுமை அழகுங் காட்டி காலந்தோறும் சிறந்து நிற்கும் ஒப்பற்ற மதமாம் இந்து மதம் அந்த வகையில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் மருதனார்மடம் பதியில் வைண வச் சிறப்புமிகு வழிபாட்டின் சிகரமாக அமைந்த நற்பெரும்பதியில் சுந்தர ஆஞ்சநேயர் திருக்கோவில் அமைந்துள்ளது. கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பது முதுமொழி. மருதனார்மடம், இணுவில், உடுவில் திருவூர்களில் வாழ்கின்ற மக்களின் துயர் துடைக்கின்ற - அவர்கள் துன்பப்படும்போது அவர்களுக்கு அபயமளிக்கும் ஆபத்பாந்தவராக சுந்தர ஆஞ்சநேயர் விளங்குகின்றார்.

உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பாலயம் என்கிறார் திருமூலர். பிரம்மஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்களின் சிந்தையில் அமையப் பெற்ற சுந்தர ஆஞ்சநேயர் திருக்கோவிலை, இந்தப் பிரபஞ்ச மக்கள் அனைவரும் துன்பங்களற்று இன்புற்று வாழவேண்டும் என்பதற்காக சிறந்த கட்டட விற்பன்னர்களைக் கொண்டு யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற பெருநோக்கோடு திருக்கோவிலாக்கியுள்ளார்.

இதிகாச, புராண வரலாறுகள் இன்று எமது மக்கள் மத்தியில் அருகி வருகின்றது. இவற்றின் சிறப்புக்களை மக்களுக்குத் தெளிவுறுத்தும் வகையில் இவ்வாறான ஆலயங்கள் அமையப் பெறுவது இன்றியமையாதது. ஆலயங்களிலே புராணபடனம் ஓதுதல், இதிகாச, புராணங்களை ஓதி அவற்றின் பொருளை மக்களுக்குத் தெளிவுறுத்துகின்ற ஒரு சிறப்புமிகு ஆலயமாக இந்த சுந்தர ஆஞ்சநேயர் ஆலயம் அமைந்துள்ளது.

இன்றைய இந்த நன்னாளில் துஷ்ர நிக்கிரக சிஷ்ர பரிபாலனஞ் செய்வதற்காக அதாவது, நல்லோரைக் காத்து தீயோரை அழிப்பதற்காக தேரேறிவருகின்ற சுந்தர ஆஞ்சநேயர், மண்ணில் அனைவரும் நல்லவண்ணம் இன்புற்றுவாழ, தீமைகள் அகன்று நல்ல சமாதானக்காற்றைச் சுவாசிக்கின்ற இனிய வருடமாக பிறக்கின்ற இந்தப் புத்தாண்டு அமையப்பெற்று, அனைவர் மனதிலும் சாந்தமும் அமைதியும் சமாதானமும் நிலவ அருள்புரியவேண்டும் என்று மருதனார்மடம் பதியுறை சுந்தர ஆஞ்சநேயரைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க*

லயன் தெல்லியூர் சி.ஹரிகரன், (உறுப்பினர் - வலி.வடக்கு பிரதேச சபை)

## ஆலய வரலாறு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இணு வில் மருதனார் மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் 2001 தைத்திங்களில் குடமுழுக்கு நடைபெற்று ஆஞ்சநேயப் பெருமானின் அருளாலும் இறை அருள் பெற்ற வினாசித்தம்பி ஐயா அவர்களின் நல்லாசியும் ஆதீன கர்த்தாவின் அருள் நிறைந்த தவிப்பாலும் வளர்பிறையென ஆலயம் வளர்ச்சியுற்று மாடி மலைக் கோயிலின் முன்னால் கோபுரம் மலை என எழுந்து நிற்க சஞ்சீவி மடம் அருட்சிறப்பாய் அமைய பஞ்சமுக ஆஞ்சநேயர் தேடி வர வசந்த மண்டபம் சிறப்பாய் அமைய, வீதி சுற்றி வழிபட காணி சேர பஞ்சமுகர் வீதியுலா வர, சித்திரத்தேர் அமைய விஸ்பரூவ ஆஞ்சநேயர் சிறப்பாய் அமைய, சுற்று மதில்களோடு ஆலயம் சிறப்பாய் மிளிர 2013 இரண்டாவது குடமுழுக்கோடு நிறைவாக ஆலயம் அருட்சிறப்போடு விளங்கி வருகின்ற நேரத்தில் இலட்சார்ச்சனை நிறைவாகி 31.12.2013 இல் பஞ்சமுகர் தேரேறி வருகின்றார் என்றால் அனுமந்தன் பேரருளும் ஆசியுமே சான்றாகும். இத் தினத்தில் எம் பெருமானை வழிபட்டு உய்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

**லோகா சமஸ்தா சுஹினோ பவந்து**



### வாழ்த்துச் செய்தி

மருதனார் மடத்தினிலே இயற்கையின் எழில்மிகு ரம்மியமான தென்றல் வீசும் சூழலிலே எழுந்தருளியிருக்கும் அருள் சிறப்பும் திருவருள் பெருமையும் நிறைந்த ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் இரத பவனிவரும் திருநாள் குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

"ஆலயங்கள் எங்கள் ஆத்மாக்களை நல்வழிப்படுத்தும் புனித இடங்கள்" அந்த வகையில் அடியவர்கள் எல்லோரும் எதிர்நோக்கி கொண்டிருக்கும் பிரச்சினைகளிலிருந்து எதிர்நீச்சல் போடும் வல்லமையினைப் பெறவும் சமூக, கலாசார விழுமியங்களை கடைப்பிடித்து கல்வியிலும் உத்தியோகத்திலும் விவசாயத்திலும் உயர்வு பெற்றிடவும் நாட்டில் சாந்தி, சமாதானம், பொருளாதார வளர்ச்சி பெற்று மேலோங்கிடவும் இறைவன் அடியவர்களுக்கு நல்லருள் கிட்டவும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயரின் பாதாரவிந்தங்களை பணிந்து வேண்டிக் கொள்கின்றேன்!

"ஸ்ரீ ராம ஜெயம்"

M.Mahendraraj
Branch Manager
Allianz Life Insurance Lanka Ltd, Jaffna Branch


**அபிஷேக் மல்ரி ஸ்பொட்**
இராமநாதன் கல்லூரி முன்பாக, கே.கே.எஸ்.வீதி,
மருதனார்மடம்.
மலிவு விலையில் பாடசாலை உபகரணங்கள், விசேட விலைக்கழிவில் கொப்பிகள், உள்ளூர். வெளியூர் அழைப்புக்கள், போட்டோப் பிரதி, லெமினேற்றிங், கணனியில் தட்டெழுத்து, ஸ்கானிங், பிறின்டிங், இன்ரநெற், ஈமெயில்,ஸ்கைப் வசதிகள் குளிர்பான. சிற்றுண்டி வகைகள் அனைத்தையும் ஓரிடமாகப் பெற்றிட இன்றே நாடுங்கள்.

**ஹெல்த் கெயர் பார்மசி அன் குறோசறி**
இல. 29, கே.கே.எஸ்.வீதி,
மருதனார்மடம்.
T.P. 0777526066,
021 224 2424

மலரமைப்பு:-
சீ.ஞானேஸ்வரன்
Allianz Insurance
Jaffna Metro

**Sakana Work Shop**
Proprietor
T.Jeyachandran
No. 40, K.K.S. Road,
Maruthanarmadam.
T.P:-0779152673,
0771621971.

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 4353
கிளை
சுன்னாகம்
கே.கே.எஸ்.வீதி.
மதவடி முன்பாக
T.P. 021 2242022.
0714546956


**Thiveya Cellular Center**
No.382, K.K.S. Road,
Maruthanarmadam, Chunnakam
T.p. 021 3209851
Dealers in all kinds of cellular Phones Accessories etc...
Sales and Repairing.

புதிய இடத்தில் புதுப் பொலிவுடன் உங்கள் அபிமான
**வீ.எம்.கே.ஜுவல்லறி**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
இல. 80/8, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P:- 021 7201117,
0777849369.
கிளை. நியூ.வீ.எம்.கே. ஜுவல்லறி.
நவீன சந்தை. கண்டிவீதி. சாவகச்சேரி.
021 222 2515

**சரவணா ரெக்ஸ்**
இல. 770, 772,
தட்டாதெரு சந்தி,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

DHL EXPRESS வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவு!!!
11kg, 25Kg மேற்பட்ட பொதிகளுக்கு DHL இனால் வழங்கப்படும் விசேட விலைக்கழிவினை பெற்றுக்கொள்ளலாம்.
சகல நாடுகளுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

3 தொடக்கம் 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்
**திருமுருகன் கொம் நெற்**
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
TCN Express
DHL EXPRESS
இல. 5, திருநகர் வீதி, கிளிநொச்சியில் இருந்து தற்பொழுது இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது (திருமுருகன் கொம் நெற் இன் சகல சேவைகளும் புதிய முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது)
வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master
46, Adiyapathum Veethy,
Thirunalvely.

(சி/6021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் பேச்சுவார்த்தைக்கு தமிழக அரசு உதவ வேண்டும்

## நாச்சியப்பன் தெரிவிப்பு


(இராமநாதபுரம்)

தமிழகத்தில் காங்கிரஸ் தலைமையில் வலுவான கூட்டணி அமையும் என்று மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் கூறியுள்ளார்.

இராமநாதபுரத்தில் வர்த்தக சங்கம், தமிழ்ச் சங்கம் சார்பில் நடந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் சுதர்சனநாச்சியப்பன் கலந்துகொண்டார்.

பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

தமிழக மீனவர்கள் பிரச்சினையில் வழிமாறி எல்லை தாண்டுபவர்களை மீட்க கடற்படை, கடலோர காவறபடையினர் உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றனர். எல்லைதாண்டி செல்பவர்களை சட்ட ரீதியாக மீட்க தூதரகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



இலங்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களால் தேர்வு செய்யப்பட்ட ஆட்சி நடந்து வருகிறது. அந்தபகுதியை சேர்ந்த ஈழ மீனவர்கள் 35 ஆண்டுகளுக்கு பின்பு மீண்டும் தற்போது மீன்பிடி தொழிலை தொடங்கியுள்ளனர்.

அந்த பகுதிக்குள் இந்திய மீனவர்களும் செல்வதால் பிரச்சினை ஏற்படுகிறது. எனவே இருநாட்டு மீனவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண வேண்டும்.

ஏற்கனவே 2 முறை பேச்சுவார்த்தை நடந்துள்ளது. தற்போது 3 ஆவது சுற்று பேச்சுவார்த்தை ஜனவரி மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கு தமிழக அரசும் உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

தமிழக சிறையில் உள்ள இலங்கை மீனவர்களை அந்த நாட்டு தூதரக அதிகாரிகள் சந்திக்க தமிழக அரசு அனுமதிக்க வேண்டும். மீனவர்களின் பேச்சுவார்த்தைக்கு தமிழக அரசு உதவவேண்டும்.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி தனிமைப்படுத்தப்படவில்லை. விடுதலை பெற்றுள்ளதாக நினைக்கிறோம். காங்கிரஸ் தலைமையில் தமிழகத்தில் வலுவான கூட்டணி அமையும். அதற்காக தே.மு.தி.க. உட்பட சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம் என்றார். (2)

# சவுதி அரேபிய மன்னருக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம்



சவுதிஅரேபியஇளவரசருக்குகொலை வழக்கில் மரண தண்டனை நிறைவேற்றும் நிலை உருவாகியுள்ளது.

டுபாயில் சவுதி இளவரசர் தன்னுடன் தங்கியிருந்த சக சவுதி அரபியரை கொலை செய்துள்ளார்.

அந்நாட்டு வழக்கப்படி கொலையாளி சார்பில் கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்திற்கு பெருந்தொகை ஒன்றை கொடுத்து விட்டால மரண தண்டனையிலிருந்து தப்பித்து கொள்ளலாம்.

ஆனால், இந்த வழக்கில் இளவரசர் தரப்பில் தரக்கூடிய தொகையை பெற்றுக்கொண்டு, மன்னிப்பு வழங்க கொலை செய்யப்பட்டவர் குடும்பம் முன்வரவில்லை.

இதனால் சவுதி இளவரசருக்கு மரண தண்டனையை நிறைவேற்றும நிலை உருவாகியுள்ளது.

இது தொடர்பாக உள்துறை அமைச்சர் முகமது பின் நயீப்புக்கு பட்டத்து இளவரசர் சல்மான் அனுப்பியுள்ள தகவல் அறிக்கையில்,

சரியத் சட்டம் எந்தவித விதிவிலக்குமின்றி அனைவருக்கும் பொருந்தும். பெரியவர், சிறியவர், பணக்காரர், ஏழை என்று வித்தியாசம் எல்லாம் கிடையாது. நீதித்துறை தீர்ப்பில் தலையிடுவதற்கு யாருக்கும உரிமை கிடையாது. அதுதான் இந்த நாட்டின் பாரம்பரியம். சரியத் சட்டத்தை நாம் அனைவரும் பின்பற்றித்தான் ஆக வேண்டும் என கூறியுள்ளார்.

எனவே, சவுதி இளவரசருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் சவுதியில் இதுவரை மன்னர் குடும்பத்தில் யாருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டதில்லை.

வெகு அபூர்வமாகத்தான் இது நடக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# ரஷ்ய புகையிரத நிலையத்தில் தற்கொலைப்படை தாக்குதல்

## 18 பேர் பலி; 50 பேர் காயம்!

**(மொஸ்கோ)**

**ரஷ்யாவின் வோல்கோகிராட் புகையிரத நிலையத்தில் பெண் தீவிரவாதியொருவர் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 18 பேர் பலியாகினர். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.**

இச்சம்பவம் வடக்கு காகஸ்சஸ் பகுதியிலுள்ள வோல்கோகிராட் எனும் இடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இது தொடர்பாக தெரிய வருவதாவது,

வோல்கோகிராட் புகையிரத நிலையம் வழக்கம்போல் பரபரப்பாக இயங்கி கொண்டிருந்தது. நுழைவாயிலில் பொருத்தப்பட்டிருக்கும் வெடிகுண்டு சோதனைக் கருவியை கடந்து செல்வதற்காக ஏராளமான பயணிகள் வரிசையில் காத்து நின்றிருந்தனர். அப்போது அங்கு நின்ற பெண் ஒருவர் தன் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை திடீரென வெடிக்கச் செய்தார்.



பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதில் சிக்கி 18 பேர் உடல் சிதறி பலியாகினர்.

50 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இச்சம்பவத்தில் கட்டட ஜன்னல் கண்ணாடிகள் வெடித்து சிதறியதுடன் ஒரு பகுதி கடடடமும் இடிந்தது. புகையிரத நிலையத்திற்குள் கூட்டம் அலை மோதிய நேரத்தில் குண்டு வெடிப்பு நிகழ்ந்ததால் பயணிகள் அலறியடித்துக்கொண்டு ஓடியதில் பெரும் சேதம் ஏற்பட்டது.



தற்கொலைப் படை தாக்குதலில் புகையிரத நிலையத்தின் இரண்டு தளங்கள் பெரும் சேதமடைந்தன.

இச்சம்பவத்தை அடுத்து இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்பதற்காக பொலிஸாரும மீட்புக் குழுவினரும், நோயாளர் காவு வண்டிகளும் அங்கு குவிந்தன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் கருங்கடல்பகுதியில் உள்ள சோச்சியில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் இந்த தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது அந்த நாட்டினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (2)

# மீனவர்கள் பிரச்சினை குறித்து மத்தியரசு கவனமெடுக்க வேண்டும்

## கருணாநிதி தெரிவிப்பு


(சென்னை)

தமிழக மீனவர்கள் மீண்டும் சிறைபிடிக்கப்படுகின்றனர். இவற்றையெல்லாம் மத்திய அரசு உடனடியாக ஆழ்ந்த கவனத்திலே எடுத்துக்கொண்டு முறைப்படி இலங்கை அரசிற்கு கடும் எச்சரிக்கை விடுத்து எதிர்வினையில் ஈடுபட்டாலே தவிர, பிரச்சினை தீரப்போவதில்லை. மீனவர் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான தீவிர நேரடி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதாக தெரியவில்லை. இது நமக்கு தீராத வேதனையாகவுள்ளது என தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் அறிக்கையில் கூறி இருப்பதாவது,

தமிழக மீனவர் பிரதிநிதிகளை பிரதமரிடமும், வெளியுறவுத்துறை அமைச்சரிடமும் நாடாளுமன்ற கழகக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அழைத்துச சென்று மீனவர்கள் தங்களின் குறைகளை அவர்களிடம் நேரில் எடுத்துச் சொல்லி, பிரதமரும் எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதியளவில் இலங்கை மீன்வர் பிரதிநிதிகளையும், தமிழக மீனவர் பிரதிநிதிகளையும் சென்னையிலே பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதாக உறுதியளித்த பின்னரும், புதுக்கோட்டை மீனவர்கள் 22 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.



சிறைபிடிக்கப்பட்ட 22 மீனவர்களும், இலங்கை காங்கேசன்துறை முகத்தில் உள்ள கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் ஊர்காவற்றுரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படடு, ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரை அவர்களை காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள செய்தி வந்திருப்பது மிகவும் கொடுமையானது.

இது மீனவர்களின் பிரச்சினை என்றால், இலங்கையிலுள்ள கிளிநொச்சி பகுதியில் படம்பிடித்துக் கொண்டிருந்த தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர், தமிழ் பிரபாகரன் என்பவரையும் இலங்கை அரசு கைது செய்தது.

நானும் வேறு சில அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கண்டனம் தெரிவித்தவுடன், அந்தப் பத்திரிகையாளர் தமிழ் பிரபாகரன், இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டார்.

இலங்கையிலே இந்தியர் என்றால எந்த அளவிற்கு மரியாதை கிடைக்கிறது என்பதை பத்திரிகையாளரின் இந்தக் கைதிலிருந்தே இந்திய அரசு புரிந்து கொள்ளலாம்.

இதைவிடவா [illegible] மத்திய அரசு உடனடியாக ஆழ்ந்த கவனத்திலே எடுத்துக் கொண்டு முறைப்படி இலங்கை அரசுக்குக் கடும் எச்சரிக்கை செய்து எதிர்வினையில் ஈடுபட்டாலொழிய பிரச்சினைகள் தீரப்போவதில்லை.

தமிழகத்தின் சார்பாக மத்திய அரசு தொடர்ந்து கடிதங்களின் மூலம் வேண்டுகோள் விடுத்தும், கண்துடைப்பு காரியங்கள்தான் நடைபெறுகின்றனவே தவிர, ஆக்கப்பூர்வமாக மீனவர் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கான தீவிர நேரடி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை என்பது தான் நமக்குத் தீராத வேதனையாக உள்ளது என கருணாநிதி கூறியுள்ளார். (2)

# சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் அழிக்கும் பணி தாமதமாகும்

(நியூயோர்க்)

சிரியாவில் விதிக்கப்பட்ட திகதிக்குள் இரசாயன ஆயுதங்களை அழிப்பது கடினம் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இது குறித்து இரசாயன ஆயுதத் தடுப்பு அமைப்பின் (ஓ.பி.சி.டபிள்யூ) கூட்டுக் குழு கடந்த சனிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல்வேறு காரணங்களால் சிரியாவின் இரசாயன ஆயுதங்களை அழிக்கும் பணி பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, நிச்சயமற்ற பாதுகாப்பு சூழல் நிலவுவதால், திட்டமிட்டபடி இரசாயன ஆயுதங்களை எடுத்துச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இரசாயன ஆயுதங்களை பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடைபெற்று வந்தாலும், இன்றுடன் அந்தப் பணிகளை முடிப்பது கடினமான காரியம் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும்,சிரியாவின் இரசாயன ஆயுதங்களை அழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் திருப்தியளிப்பதாக உள்ளன என ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த வினையும், செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையமாட்டா.

– கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மழை பெய்வது பொதுநலம் குடை பிடிப்பது சுயநலம்

பொதுநலத்திற்கும் சுயநலத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? இப்படியொரு கேள்வியை கர்மவீரர் காமராஜரிடம் சிலர் கேட்டனர்.

அதற்கு காமராஜர் சிரித்தபடி மழை பெய்வது பொதுநலம்; குடை பிடிப்பது சுயநலம் என்று பதிலளித்தார்.

கர்மவீரர் காமராஜரின் இந்தப் பதில் மிகவும் பொருத்துடையது மட்டும் அல்ல; அது தொடர்பில் மனித சமூகம் ஆழமாகச் சிந்திப்பதும் அவசியமாகும் என்பதைச் சுட்டிக் காட்டவே பொதுநலம்–சுயநலம் என்ற விடயப் பொருளை இவ்விடத்தில் எடுத்துக் கொண்டோம்.

மழை பெய்வது பொதுநலம்– எனவே மழை பெய்வதை எவரும் தடுக்கக் கூடாது. அவ்வாறு தடுத்தால் அது மிகப் பெரும் பாவம்.

மழையின் நோக்கம், மக்களை மண்ணில் நல்லவண்ணம் வாழவைப்பது. மழை பெய்யவில்லையாயின் இந்த மண்ணில் பயிர்கள் விளைச்சல் தரமாட்டா. அதனால் மனித சமூகம் பஞ்சத்தால் வாடும். பஞ்சம் பசி பட்டினி என்பன தாண்டவம் ஆடினால், மனித வாழ்வு நரகமாகி விடும்.

பஞ்சம் தலைவிரித்து ஆடினால்; களவு, கொள்ளை உள்ளிட்ட தீய செயல்கள் மேலோங்கும். சில வேளைகளில் சண்டைகள் மலிவதும் உண்டு.

மகாபாரதப் போர் துரோணருக்கு ஏற்பட்ட பஞ்சத்தால் நிகழ்ந்ததாகும். பெற்ற பிள்ளை, அம்மா பசிக்குது என்று அழுகிறது.

பசி தீர்க்க வழி தெரியாத துரோணர், தன் பால்ய நண்பனாகிய பாஞ்சால நாட்டு மன்னனிடம் செல்கிறார். பாஞ்சாலனோ துரோணரை ஏளனம் செய்கின்றான்.

மன்னா! என் பிள்ளை பசி ஆறுவதன் பொருட்டு ஒரு பசுவையேனும் தந்தருளுக என்று துரோணர் கெஞ்சுகிறார். துரோணரின் பஞ்சத்தை பாஞ்சாலன் பரிகசிக்க,

பாஞ்சால தேசத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று துரோணர் சபதம் செய்கிறார். துரோணரின் சபதமே பாரதப் போருக்கு வழிவகுத்தது.

ஆக, நாட்டில் பஞ்சம் ஏற்பட்டால் அது போராக, நோயாக, பெருவினையாக மாறும். எனவே தான் மழை பொதுநலம் சார்ந்து பெய்கின்றது.

பயிர்கள் இயல்பாகவே முளைத்து விளைச்சல் தரவேண்டும். அதற்கு மழை அவசியம். இதனால் இறைவன் பொதுநலம் கருதி மழையைத் தருகின்றான். அதாவது மழை பொதுநலம் சார்ந்து பெய்கின்றது.

இவ்விதம் பொதுநலம் சார்ந்து பெய்யும் மழைக்கான ஊக்குவிப்புக்களை மனித சமூகம் தாம் வாழும் மண்ணில் செய்தாக வேண்டும்.

எனினும் மக்கள் சமூகம் பொதுநலம் என்பதை மறந்து சுயநலம் பற்றியே சிந்திக்கின்றது.

எமது தேவை முடிந்தால் போதும் என்ற மனநிலையில், மக்கள் வாழத்தலைப்பட்டு விட்டனர். இதனால் இயற்கை வளத்தை அழிப்பதில் அவர்கள் இம்மியும் கவலை கொள்வதில்லை.

இயற்கை வளம் ஒட்டுமொத்த மனித வாழ்வுக்கானது. அதை சுயநலத்துக்காக பயன்படுத்தும் போது பொதுநலம் பாதிக்கப்படுகின்றது. ஆக, காமராஜர் கூறியதுபோல, மழை பெய்யும் போது அதில் நனைந்து கொள்ளாமல் இருப்பதற்காக குடை பிடிப்பது மட்டுமே நாம் செய்யக் கூடிய சுயநலக் கடமை.

இதைவிடுத்து காடழிப்பது, நாட்டின் பாதுகாப்பு என்று கூறி பனைமரங்களைத் தறிப்பது, மாவிட்டபுரத்தில் கல்லெடுத்து கடல்வழி கொண்டு போவது என அனைத்து நாசகாரமும் சுயநலத்தால் செய்யப்படுகின்றது.

இஃது பொதுநலத்துடன் பெய்யும் மழைக்குப் பாதகமாகி விடுகின்றது என்பதுதான் உண்மை.

# தமிழில் தேசியகீதம் பாடுவதை யாரும் தடை செய்ய முடியாது

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

இனங்களுக்கிடையே ஒற்றுமையை பிரதிபலிக்கும் ஒரேயொரு விடயம் தேசியகீதம் மட்டுமே. எந்த மொழியில் தேசிய கீதத்தினை இசைத்தாலும் ஒரே அர்த்தத்தினையே வெளிப்படுத்துகின்றது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தல் இரண்டாவது இளைஞர் ஐந்தாவது அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

இலங்கை சிங்கள, பௌத்த நாடாக இருந்தாலும் தமிழ் மொழியிலான தேசிய கீதத்தினை தடை செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டார்.

இனங்களுக்கிடையில் பிரிவினைகளை தவிர்த்து அனைவரையும் ஒன்றுபடுத்தும் ஒரே வழிமுறை தேசியகீதம் மட்டுமே. ஒரு விழாவில் ஒரே சந்தர்ப்பத்தில் இரு மொழிகளில் தேசியகீதத்தினை இசைக்க முடியாது. ஆனால் மொழி பெயர்ப்பு செயற்றிட்டங்களை உபயோகிக்க முடியும். சிங்களத்தில் தேசியகீதத்தினை இசைப்பதில் தமிழ் மக்களுக்கு சிக்கல்தான் இருக்கின்றது.

அதனால்தான் தமிழில் பாடுகின்றனர். தேசியகீதத்தினை எந்த மொழியில் பாடினாலும் அது ஒரே அர்த்தத்தினை வெளிப்படுத்துகின்றது. இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் இலங்கை சிங்கள பௌத்த நாடென்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இங்கு பௌத்த கலாசாரங்களுக்கும் மதவிடயங்களுக்கும் முன்னுரிமை இருக்கின்றது. ஆனால் ஏனைய மதங்களும் இனத்தவர்களும் அடக்கப்பட வேண்டுமென எவரும் குறிப்பிட முடியாது.

இங்கு பௌத்த சிங்களவர்களுக்கு எந்தெந்த உரிமைகள் வழங்கப்படுகின்றதோ அவை அனைத்தும் தமிழ் முஸ்லிம் இனத்தவர்களுக்கும் வழங்கபடல்வேண்டும். இங்கு எப்போதும் அடக்குமுறை அரசியலுக்கு இடமில்லை.

பௌத்த நாடாக இருப்பதனால் தமிழ்மொழி மூலமான தேசியகீதம் இசைக்கக்கூடாதென்பதில்லை.

தமிழ் மொழியிலான தேசியகீதத்தினை இசைப்பதை எவராலும் தடை செய்ய முடியாது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இவ்வாறான மோசமான செயற்பாடுகள் இடம்பெறாது எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## மாணவர்களின் சீருடைக்கு 2500 மில். ரூபா ஒதுக்கீடு

ஜனாதிபதியின் பணிப்பிற்கிணங்க ஏழு இலட்சம் மாணவர்களுக்கு பாதணியும் மேலதிக சீருடைத் தொகுதியும் ஜனவரி மாதத்தில் வழங்கப்படுமென கல்விச் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு 2ஆயிரத்து 500 மில்லியன் ரூபா வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுவரை வெளிநாட்டிலிருந்து பாடசாலை சீருடை இறக்குமதி செய்யப்பட்டது. இவ்வருடத்திலிருந்து உள்ளூரில் அது உற்பத்தி செய்யப்படுமென அமைச்சர் கூறியுள்ளார்.

80 வீத சீருடை துணி உள்ளூரில் உற்பத்தியாகும். மிகுதியான 20 வீதம் துணியாக இறக்குமதி செய்யப்பட்டு வர்ணம் ஊட்டப்படுகிறது .

உள்ளூர் துணிக் கைத்தொழிலாளர்களை முன்னேற்றும் மஹிந்த சிந்தனை திட்டத்துக்கு ஏற்ப இது நடைமுறையாகும். பாதணிகள் உள்ளூர் தோலினால் உற்பத்தி செய்யப்படும். இதன் மூலம் உள்ளூர் பாதணி உற்பத்தியாளர் நன்மை பெறுவரென்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

## இணையத்தள பாவனையில் வட, கிழக்கு மக்கள் ஆர்வம்

இலங்கையில் 11.4 வீதமான வீடுகளில் இணையத்தள வசதிகள் இருப்பதாகவும் 9.2 வீதமானவர்கள் இணையத்தள வசதிகளை வழங்கும் நிலையங்களில் அவற்றை பயன்படுத்துவதாகவும் புதிய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

மக்கள் தொகை மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் புதிய ஆய்வறிக்கையின்படி கொழும்பு மாவட்டத்தில் அதிகளவில் இணையத்தளம் பயன்படுத்தப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்தில் 26.9 வீதமான வீடுகளில் இணையத்தள வசதிகள் உள்ளன. அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் 15.2 வீதமானவர்கள் இணையத்தள நிலையங்களில் அவற்றை பயன்படுத்துகின்றனர்.

கம்பஹா மாவட்டத்தில் 16.7 வீதமான வீடுகள் இணையத்தள வசதிகளை கொண்டுள்ளன. அந்த மாவட்டத்தில் 18.9 வீதமானோர் இணையத்தள நிலையங்களில் அதனை பயன்படுத்துகின்றனர்.

இதனை தவிர வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இணையத்தள நிலையங்கள் ஊடாக அதிகளவானோர் இணையத்தளங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

வவுனியாவில் 32.1 வீதமானோரும், யாழ்ப்பாணத்தில் 22.3 வீதமானோரும், மன்னாரில் 20.2 வீதமானோரும், கிளிநொச்சியில் 18 வீதமானோரும் மட்டக்களப்பில் 14.5 வீதமானோரும், திருகோணமலையில் 12.7 வீதமானோரும் இணையத்தள நிலையங்கள் ஊடாக இணையத்தளங்களை பார்வையிடுவதாக புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது. (செ-11)

## ரயிலில் மோதி ஒருவர் பலி

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று திங்கட்கிழமை பிற்பகல் பயணித்த நகர்சேர் கடுகதி ரயிலில் மோதி ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்த சம்பவம் கண்டி, சுதுஹும் பொல எனுமிடத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சுமார் 42 வயதான ஒருவரே ரயில் விபத்தில் உயிரிழந்துள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் கண்டி பொது வைத்தியசாலையின் சவச்சாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-11)

## வல்வெட்டித்துறையில் கலை இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை கலை, கலாசார இலக்கிய மன்றின் ஏற்பாட்டில் 4ஆவது மாபெரும் கலை இலக்கியப் பெருவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வீதியில் இம்மன்றத் தலைவர் ர.மகிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வல்வை ஆவணக் காப்பாளர் பா.மீனாட்சி சுந்தரம், முன்னாள் கிராம சேவையாளர் சி.சிவபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது நெய்தல் மலா 4-வது இதழ் வெளியீட்டு நிகழ்வும் இடம் பெறும்.

இவ்விதழின் சிறப்புப் பிரதியினை நெடியகாடு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் தேவஸ்தானத் தலைவர் ச.தர்மலிங்கம் பெறுவார்.

இந்நிகழ்வில் கலைஞர் கௌரவிப்பு, நடனம், மாணவர்களின் இசை நிகழ்வு , நாடகங்கள் மற்றும் குறும்பட வெளியீடு என்பன இடம்பெறவுள்ளன. (அ-2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

### ஆன்மீகமே அஸ்திவாரம்



❖ நீங்கள் ஒவ்வொருவரும் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள்.

❖ உண்மை, நேர்மை, அன்பு இந்த மூன்றும் ஒருவரிடம் இருக்குமானால் அவரைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் உலகில் யாருக்கும் கிடையாது.

❖ கடினமான சொல் எதையும் சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக் கொண்டு இதயங்களைத் திறந்து வையுங்கள்.

❖ ஆன்மீகத்தைப் புறக்கணித்துவிட்டு, மேலைநாட்டு நாகரிகத்தின் பின்னால் சென்றால், நம் சமூகமே அழிந்து போகும். இது நூறு சத உண்மை.

❖ ஆன்மீகம் என்னும் அஸ்திவாரத்தின் மீது தான் நம் நாடு என்னும் கட்டடம் எழுப்பப்பட்டுள்ளது. ஆன்மீகமே நமது பண்புகளை மேல்நோக்கி கொண்டு செல்கிறது.

❖ கர்வம் தலை தூக்கி நின்றால் நம்மால் எந்தச் செயலையும் சாதிக்க முடியாது. முதலில் கீழ்ப்படியக் கற்றுக் கொள்ளுங்கள்.

❖ கடவுள் எல்லா உயிரிலும் குடிகொண்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிநேகபூர்வ காற்பந்து போட்டி;
# அம்பாறை அல்றைட்ஸை வீழ்த்தியது நாவாந்துறை சென்.மேரிஸ் அணி



சிநேகபூர்வ காற்பந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ்அணிஅம்பாறை அல்றைட்ஸ் அணியினை 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் சிறந்த அணிகளில் ஒன்றான அல்றைட்ஸ் அணிக்கும், யாழ்.மாவட்ட சம்பியன் அணியான நாவாந்துறை சென்.மேரிஸ் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ காற்பந்தாட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

போட்டி ஆரம்பித்த சில நிமிடங்களில் கோல் ஒன்றை அடித்த அல்றைட்ஸ் அணி போட்டியினை அசத்தலுடன் ஆரம்பித்தது. இருந்தும் அதற்கு பதில் கோலடிக்கும் விதத்தில் சென. மேரிஸ் அணியினர் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டனர்.

முதல் பாதியாட்டத்தில் சென்.மேரிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.



இரண்டாவது பாதியாட்டம் முழுமையாக சென்.மேரிஸ் அணியின் பக்கமிருக்க அவ்வணி அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டது.

அல்றைட்ஸ் அணிக்கும் கோல் அடிக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அவ்வணி அச்சந்தர்ப்பங்களை தவறவிட்டது.

இறுதியில் சென்.மேரிஸ் அணி 5:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

யாழ்.மாவட்ட காற்பந்தாட்ட அணிகள் வெளிமாவட்ட அணிகளுடன் காற்பந்தாட்ட போட்டிகளில் விளையாடுவதும், யாழ். மாவட்டத்தில் நடைபெறும் காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் வெளிமாவட்ட அணிகள் பங்குபற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. (க)

# கொம்மாந்தறை இளைஞர் வி.க. நடத்தும் கிரிக்கெட் இறுதிப் போட்டி



கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் மின்னொளியிலான கிரிக்கெட் இறுதியாட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு கம்பர்மலை வித்தியாலய மைதானத்தில் கழகத் தலைவர் எஸ்.செந்தூரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கம்பர்மலை வித்தியாலய அதிபர் அ.ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இப்போட்டியில் 8 ஓவர் கொண்ட இறுதி ஆட்டத்தில் கொக்குவில் காமாட்சி அணியை எதிர்த்து திருநெல்வேலி முத்துத்தம்பி அணி மோதவுள்ளது.

15 ஓவர்கள் கொண்ட இறுதி ஆட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் காமாட்சி அணி மோதவுள்ளது.

இறுதி ஆட்டத்தில் வெற்றிபெறும் அணிகளுக்கு பெறுமதிமிக்க வெற்றிக் கேடயமும் பணப்பரிசிலும் வழங்கப்படவுள்ளது. (க-9-24)

# காதலியுடன் ஜாக் கலிஸ்



தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் ஜாக் கலிஸ்தனது காதலியான மொடல்அழகி ஷமோன ஜார்டிமுடன் மீண்டும் இணைந்துள்ளார்.

கிரிக்கெட் வீரர் கலிஸ் டேர்பனில்தனது கடைசி டெஸ்ட் போட்டியை ஆடிக்கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் சமீப காலமாக பிரிந்திருந்த தனது முன்னாள் காதலி ஷமோனுடன் அவர் மீண்டும் இணைந்துள்ளார்.

6 வருடக் காதலை இடையில் ஜாக்கும். ஷமோனும் முறித்துக் கொண்டு தத்தமது வழியில் சென்று கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இருவருக்கும் இடையிலான பிரிவு இருவரது அன்பையும் உணரச் செய்துள்ளதாகவும், இதனால் இருவரும் மீண்டும் நெருக்கமாகியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

கலிஸ் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றதும், ஷமோனை அவர் திருமணம் செய்யப் போவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஷமோன் ஒரு மொடல் அழகி ஆவார். அதேசமயம் நடிகையாகவும் இருக்கிறார். கலிஸ் குறித்து ஷமோன் கூறுகையில், அருமையான ஜென்டில்மேன் கலிஸ். எந்தப் பெண்ணுக்கும் அவரைப் பிடிக்கும். இப்படிப்பட்டவர்களைத்தான் பெண்களுக்கு மிகவும் பிடிக்கும்.

அவர் எப்போதும் என்னை சிரிக்க வைப்பார். கடும் மன அழுத்தத்தில் இருந்தாலும் கூட அவரது பேச்சு என்னை வாய் விட்டு சிரிக்க வைத்து விடும். அதேசமயம், அவர் எப்போதும் கூலாக இருப்பார என்றும் இது போதாதா ஒரு பெண்ணுக்கு, அந்த ஆணைப் பிடித்துப் போக எனவும் கூறியுள்ளார். (க)

# ஐ.சி.சி. தரவரிசை; கோலி 2ஆம் இடம்

சர்வதேச கிரிக்கெட்டில் ஒரு நாள் போட்டி துடுப்பாட்ட புதிய தரவரிசையை ஐ.சி.சி. அண்மையில் வெளியிட்டது. இதில் இந்திய வீரர் விராட் கோலி 2ஆவது இடத்தை பிடித்துள்ளார். முதல் இடத்தில் தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் உள்ளார்.

மற்ற இந்திய வீரர்கள் டோனி 6ஆவது இடத்திலும் ஷிகர்தவான் 10ஆவது இடத்திலும் உள்ளனர். (க)



வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இறுதி அஷஸ் போட்டிக்கு ஆஸி. அணி அறிவிப்பு

அவுஸ்திரேலியக் குழாம்:

கிறிஸ் றொஜர்ஸ், டேவிட் வோணர், ஷேன் வொற்சன், மைக்கல் கிளார்க், ஸ்டீவன் ஸ்மித், ஜோர்ஜ் பெய்லி, அலெக்ஸ் டூலன், பிரட் ஹடின், ஜேம்ஸ் ஃபோக்னர், மிற்சல் ஜோன்சன், றயன் ஹரிஸ், பீற்றர் சிடில், நேதன் லையன், நேதன் கோர்ட்டர் நீல்

அவுஸ்திரேலியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட அஷஸ் டெஸ்ட் தொடரில் பங்குபற்றிவரும் இங்கிலாந்து அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமான தொடருக்கான 5 ஆவது போட்டிக்கான அவுஸ திரேலியக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிட்னியில் ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள போட்டிக்கான குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.

4ஆவது போட்டிக்காக அறிவிக்கப்பட்ட குழாமில் இடம்பெற்றிருந்த 12 பேருடன், இரண்டு வீரர்கள் மேலதிகமாக அறிவிக்கப்பட்டுள்ளனர். புதுமுக வீரர்களுக்கே இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.


4ஆவது போட்டியில் விளையாடிய பின்னர் சகலதுறை வீரர் ஷேன் வொற்சன், வேகப்பந்து வீச்சாளர் றயன் ஹரிஸ் இருவருக்கும் உபாதைக்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ள நிலையிலேயே அவர்களிருவருக்கும் பதிலாக துடுப்பாட்ட வீரர் அலெக்ஸ் டூலன், வேகப்பந்து வீச்சாளர் நேதன் கோர்ட்டர் நீல் ஆகியோர் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



உபாதைக்குள்ளாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள ஷேன் வொற்சன், றயன் ஹரிஸ் இருவருக்கும் இக்குழாமில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, 5ஆவது போட்டிக்கு முன்னதாக அவர்களிருவரும் குணமடையும் பட்சத்தில் அவர்கள் 5ஆவது போட்டியில் பங்குபற்றுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் அவுஸ்திரேலிய அணி 4ஆவது போட்டியின் நிறைவில் 4-0 என்ற கணக்கில் முன்னிலை வகிப்பதுடன், இந்த 4 போட்டிகளிலும் அவ்வணி ஒரே விளையாடும் பதினொருவரையே பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (க)

# கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி; முல்லை. யாங் அணி சம்பியன்



முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட மாபெரும் கூடைப் பந்தாட்ட போட்டியில் முல்லை. யாங் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது.

அணிக்கு மூன்று பேர் கொண்ட இக் கூடைப்பந்தாட்டத் தொடரில் ஐந்து அணிகள் பங்கு கொண்டன.

லீக் அடிப்படையில் நடைபெற்ற இப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு முல்லைத்தீவு யாங் அணி தகுதி பெற்றது.

அண்மையில் முல்லைத்தீவில் இடம்பெற்ற இவ் இறுதிப் போட்டியில் முல்லை. யாங் அணி 14:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டிக்கு முல்லைத்தீவு மாவட்ட கூடைப் பந்தாட்ட சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், ரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேர்பன் டெஸ்ட்

# ஸ்ரெய்ன், பீற்றர்சனிடம் அடங்கியது இந்தியா

வெற்றியுடன் விடைபெற்றார் கலிஸ்

## தொடரை வென்று தென்னாபிரிக்கா அபார வெற்றி



இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரி க்கா 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது.

ஒருநாள் தொடரை இழந்துள்ள நிலையில் டெஸ்ட் போட்டிகள் மீதான எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது.

ஜோகனர்ஸ்பர்க்கில் நடந்த முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இந்தியா-தென்னாபிரிக்கா அணிகள் இடையேயான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டேர்பனில் கடந்த 26-ம் தேதி தொடங்கியது. முதலில் ஆடிய இந்திய அணி, ஸ்ரெயினின் அபாயகரமான பந்து வீச்சில் விக்கெட்டுகளை விரைவில் இழந்தது. இதனால் முதல் இன்னிங்சில் இந்தியா 334 ரன்னுக்கு ஆல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக முரளி விஜய் 97 ரன்கள் சேர்த்தார். புஜாரா 70 ரன்கள் அடித்தார். ஸ்ரெயின 6 விக்கெட்டுகள் கைப் பற்றினார்.

அதன்பின்னர் முதல் இன்னிங்கை ஆடிய தென்னாபிரிக்க அணி 500 ரன்கள் குவித்தது. பீட்டர்சன் (62), கலிஸ் (115), டி வில்லியர்ஸ் (74), ரொபின் பீட்டர்சன் (61) ஆகியோர் சிறப்பாக் விளையாடி பலம் சேர்த்தனர்.

இதையடுத்து 166 ரன்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாம் இன்னிங்சைத் தொடங்கிய இந்தியா 4-ம் நாள் ஆட்ட நேர முடிவில், 2 விக்கெட்டுகளை இழந்து 68 ரன்கள் எடுத்திருந்தது. தொடக்க வீரர்கள் தவான் 19 ரன்களிலும், விஜய் (6) ரன்களிலும் ஆட்டமிழந்தனர். புஜாரா (32), கோலி (11) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

நேற்று கடைசி நாள் ஆட்டம் நடைபெற்றது. புஜாரா, கோலி இருவரும் மேற்கொண்டு ரன் எதுவும் எடுக்காமல் அடுத்தடுத்து அரங்கு திரும்பினர். இவர்களின் விக்கெட்டை ஸ்ரெயின் கைப்பற்றினார். ஒரு மணி நேரம் வரை நீடித்த ரோகித் சர்மா 25 ரன்களில் அவுட் ஆனார்.

நெருக்கடியான நேரத்தில் விக்கெட்டைக் காப்பாற்றும் முயற்சியில் நிதானமாக ஆடிய டோனி 15 ரன்களில் விக்கெட்டை இழந்தார். ரவீந்திர ஜடேஜா 8 ரன்களில் ஆட்டமிழந்தார். இதனால் உணவு இடைவேளையின் போது இந்தியா 7 விக்கெட் இழப்பிற்கு 173 ரன்கள் எடுத்திருந்தது. நெருக்கடியான சமயத்திலும் நிதானமாக ஆடிய அஜிங்கியா ரகானே அரை சதம் கடந்து தோல்வியைத் தவிர்க்க கடுமையாகப் போராடினார்.

ஆனால், மறுமுனையில் ஆடிய சகீர்கான்(3), இஷாந்த் சர்மா(1) ஆகியோர் விரைவில் விக்கெட்டு களை இழந்ததால் ரகானேவுக்கு நெருக்கடி ஏற்பட்டது. இருப்பினும் கடைசி வரை போராடிய ரகானே 2 சிக்சர், 11 பவுண்டரிகளுடன் 96 ரன்களில் அவுட் ஆனார். இதனால் இந்தியா 223 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

இதையடுத்து 58 ரன்கள் என்ற எளிய வெற்றி இலக்குடன் களமிறங்கியது தென்னாபிரிக்கா. தொடக்க வீரர்கள் ஸ்மித் (27), பீட்டர்சன் (31) ஆகிய இருவரும் இந்த இலக்கை விரைவில் எட்டினர். இதனால் 34 ஓவர்கள் மீதமிருந்த நிலையில் தென்னாபிரிக்க அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன் 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரையும் 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வை அறிவித்த தென்னாபிரிக்க சகலதுறை வீரர் கலிஸ் வெற்றியுடன் விடைபெற்றார்.



இப்போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்கா அணியின் ஸ்ரெயினும், தொடர் நாயகனாக தென்னாபிரிக்கா அணியின் டி வில்லியர்சும் தெரிவாகினர்.

## தமிழர்களுக்கு...

தோழர் சிம்ரஞ்ஜித் சிங் மாண் மே பதினேழு இயக்கத்துடன் நடத்திய உரையாடலின் போது இதனை தெரிவித்துள்ளார்.

உரையாடலின் போது அவர் தெரிவித்தவை வருமாறு.

நாங்கள் இலங்கையில் நடக்கும் போராட்டம் குறித்தும், தமிழ் மக்கள், பிரபாகரன் மற்றும் தனி நாடு கோரி நடக்கும் ஒருங்கிணைப்புக்களை மிகவும் கூர்ந்து கவனித்து வருகிறோம். எங்கள் இயக்கம் இந்நிகழ்வுகளை தொடர்ந்து கவனித்து வருகிறது. நீங்கள் எங்களின் இணையத்தளத்தை பார்த்தால், இலங்கை மற்றும் தமிழர்கள் குறித்து அவ்வப்போது நாங்கள் வெளியிடும் செய்திகளை காணலாம்.

நான் முன்னரே குறிப்பிட்டது போல இது காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசின் மூலமாகவே இலங்கை அரசு தமிழ் மக்களை இனப்படுகொலை செய்து தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கத்தை நசுக்கியது. அதற்கு காரணம் காங்கிரஸ் கட்சி. அது சரியோ தவறோ, தமிழ் மக்கள்தான், தமது தலைவர் ராஜீவ் காந்தியை கொன்றதாக நம்பியது.

அதற்காக பிரபாகரனையும் மற்ற தமிழ் மக்கள் சிலரையும் இலங்கையிலிருந்து கொண்டுவர பல வழிகளில் வேலை செய்தது. இதற்கு இலங்கை இந்தியாவுக்கு உதவ முன்வந்தாலும் பிரபாகரனும் அவரது இயக்கமும் வலிமையோடு இருந்ததால் அவரை உயிரோடு பிடித்து இந்தியாவிடம் ஒப்படைக்க முடியவில்லை.

ஆகையால் இலங்கை சதித்திட்டம் ஒன்றை தீட்டி அதன் முதல் கட்டமாக கருணாநிதி, சிதம்பரம் போன்ற தமிழ் அரசியல் தலைவர்களை விலைக்கு வாங்கியது. இந்த தலைவர்களே தமிழக மக்கள் இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு உதவாமல் பார்த்துக் கொண்டனர்.

உதாரணமாக கருணாநிதி தன் மகளுக்கு மத்திய அரசில் ஒரு முக்கிய பதவியை பெற்றார். பின்னர் ராஜாவுக்கு முக்கிய பதவி கொடுக்கப்பட்டு அதனால் அவர்கள் பெரும் பணத்தை பெற்றனர். சிதம்பரமும் பெரும் பணத்தை பெற்றார். இதனாலேயே அவர்கள் போராட்டத்தை ஒடுக்கினார்கள்.

நான் நினைக்கிறேன் தமிழக மக்கள் இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு ஆதரவாக போராட இருந்தாலும் விலைக்கு வாங்கப்பட்ட இந்த தலைவர்களால் அது முடியாமல் போனது.

தமிழர்கள் ஒரு தனி தேசியம். அவர்கள் ஒரு தனி இனம். அவர்களுக்கென்று தனி மொழி, அவர்களுக்கென்று தனி எழுத்து வடிவம், அவர்களுக் கென்று தனி வரலாறு, அவர்களுக்கென்று தனி நாடக, இசை, கலை பள்ளிகள். வரலாற்று ரீதியாக தமது நிலத்தை தாமே ஆண்டுவந்தனர், தென் கிழக்கு ஆசியாவில் பெருமிதத்தோடு கோலோச்சி வந்தனர். தமிழ் மக்களும் சீக்கியர்களாகிய நாங்கள் போராடுவதைப் போன்றே - ஒரு சுயநிர்ணயமுள்ள தனி நாடாக பிரிந்து வரவேண்டும் என்று நம்புகிறோம்.

நாங்கள் தமிழ் இயக்கங்களை கூர்ந்து படித்து வருகிறோம். தமிழகத்திற்கு பலமுறை சென்று அங்கே கூட்டங்களில் இந்திய அரசை பற்றி வெளிப்படையாக பேசி இருக்கிறோம். இந்திய அரசு தமிழக தமிழர்களையும் பஞ்சாபிய சீக்கியர்களையும் சில இடைத்தரகர்கள் மூலமாகவே ஆட்சி செய்து வருகிறது. அந்த இடைத்தரகர்கள் இந்திய அரசோடு ஒருங்கிணைத்து தமிழர்கள் மற்றும் சீக்கியர்களின் தேசிய இன உணர்வு தேர்தல் வாக்குகளாக மாறாமல் பார்த்துக் கொள்கின்றனர்.

பாராளுமன்றத்தில் கூட அழுத்தமாக தமிழர்கள் மற்றும் சீக்கியர்களின் உணர்வுகளை பேசுபவர்களை காண முடியாது. நான் 1999 முதல் 2004 வரை பாராளுமன்றத்தில் இருந்தபோது வைகோவை சந்தித்திருக்கிறேன். ஆனால் அதற்கு பிறகு தமிழர்களின் உணர்வுகளை பாராளுமன்றத்துக்கு கொண்டு சென்றவர்கள் வேறு யாரும் இல்லை.

ஒரு இனப்படுகொலை குற்றம் நடந்தேறிய பின்னர் தமிழர்கள் இலங்கைக்குள் ஒருங்கிணைந்து வாழ்வது இயலாத ஒன்று. வரலாற்று ரீதியாக தமிழர்கள் பட்ட காயங்கள் மிகவும் ஆழமானவை என்பதால் நல்லிணக்கம் என்பது என்றும் முடியாது. தமிழர்களுக்கான தனிநாடு உருவாக வேண்டும்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்கள் வாழ்வது என்பது நடைமுறைக்கு ஒவ்வாத தீர்வாக இருக்கும். ஏனென்றால் தமிழர்கள் மீது கொடூரமான இனப்படுகொலை குற்றம் நடந்தேறியுள்ளது. இதற்கு பின்னால் நல்லிணக்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

எப்படி இரண்டாம் உலகப் போரில் இனப்படுகொலை செய்யப்பட்ட பின்னர் யூதர்களால் ஜேர்மனியோடு இணைந்து வாழ்வது என்பது இயலாத ஒன்றோ அதுபோலத் தான் தமிழர்களுக்கும். இவ்வளவு பெரிய குற்றம் நடந்தேறிய பின்னர் தமிழர்கள் தனி நாடாக உருவாவதே சரியானது. தமிழ்நாட்டில் உள்ள தமிழர்கள் இதற்கு துணை நிற்க வேண்டும். இதற்கு இந்தியாவும் உதவ வேண்டும் எனத் தெரிவித்தார். (செ-11)

## இந்தியர்களுக்கு...

தாக உறுதியளித்துள்ள நிலையில் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள செய்தி வந்திருப்பது மிகவும் கொடுமையானது.

இது மீனவர்களின் பிரச்சினை என்றால், இலங்கையில் உள்ள கிளிநொச்சி பகுதியில் படம் பிடித்துக் கொண்டிருந்த தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர், தமிழ் பிரபாகரன் என்பவரையும் சிங்கள அரசு கைது செய்தது.

அந்தச் செய்தி ஏடுகளில் வெளிவந்ததும், நானும் வேறு சில அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கண்டனம் தெரிவித்தவுடன், அந்தப் பத்திரிகையாளர் தமிழ் பிரபாகரன், இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டார்.

சென்னை திரும்பிய அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, தான் வட கிழக்கு மாகாணங்களுக்குச் சென்று சுற்றிப்பார்த்ததாகவும், அத்துமீறிச் செயல்படவில்லை என்றும், புகைப்படங்களை எடுத்துக் கொண்டிருந்த போது இலங்கை இராணுவ வீரர்களால் துப்பாக்கி முனையில் வளைக்கப்பட்டதாகவும், இந்தியாவைச் சேர்ந்த பத்திரிகையாளன் என்று சொன்னதாகவும், உடனே அவர்கள் கை விலங்கிட்டு கைது செய்து சிறையில் அடைத்ததாகவும், அங்கே இந்தியர் என்றாலே மரியாதை கிடையாது என்றும் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையிலே இந்தியர் என்றால் எந்த அளவிற்கு மரியாதை கிடைக்கிறது என்பதை பத்திரிகையாளரின் இந்தப் பேட்டியிலிருந்தே இந்திய அரசு புரிந்து கொள்ளலாம். இதையும் தொடர்ந்து நேற்றுமுன் தினம் தமிழ் நாட்டைச் சேர்ந்த கணவன், மனைவி ஆகிய இருவரை இலங்கைப் பொலிஸார் கைது செய்திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் சுற்றுலா விசாவில், புடைவை வியாபாரம் செய்வதற்காக அங்கே சென்றிருக்கிறார்கள். அவர்கள் மட்டக்களப்பு பகுதியில் கைது செய்யப்பட்டதாகச் செய்தி வந்துள்ளது.

இதையெல்லாம் மத்திய அரசு உடனடியாக ஆழ்ந்த கவனத்திலே எடுத்துக் கொண்டு முறைப்படி இலங்கை அரசுக்குக் கடும் எச்சரிக்கை செய்து எதிர்வினையில் ஈடுபட்டாலொழிய பிரச்சினைகள் தீரப்போவதில்லை என அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## நாட்டை...

தற்காக நேற்று முற்பகல் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி இந்த விடயத்தினைக் தெரிவித்தார்.

மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கம் என யாராக இருந்தாலும், அனைவரும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டே செயற்பட வேண்டும்.

அரச கொள்கைகளுக்கு மதிப்பளித்து அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்படுவது முக்கியத்துவம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, மக்கள் சேவையை உரியமுறையில் முன்னெடுக்காத எவரும் முன்நோக்கிப் பயணிக்க முடியாதென குறிப்பிட்டார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந். மீனவர்கள்...

தாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் யாழ். மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் பாலசுப் பிரமணியம் ரமேஷ்கண்ணா தெரிவித்தார்.

இந்த நிலையில், மேற்படி மீனவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இரவு 06 படகுகளில் வந்த இந்திய மீனவர்கள் 22 பேர் நெடுந்தீவில் கைதுசெய்யப் பட்டிருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 22 பேருக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதிவரை விளக்கமறியல் வழங்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## எரிபொரு...

சர்வதேச சந்தை விலை நிர்ணயமே தீர்மானிக்கும்.

எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இடம்பெறும் மோசடிகளை தடுக்க விற்பனை செய்யப்படும் எரிபொருளுக்கான பற்றுச்சீட்டு வழங்கும் நோக்கில் ஆய்வுகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

ஈரான் நாட்டுக்கு எதிராக பொருளாதார தடைகள் விதிக்கப் பட்டுள்ளதால், ஓமான் மற்றும் அபுதாபி ஆகிய நாடுகளில் இருந்து எரிபொருள் இறக்குமதி செய்யப் படுகிறது என்றார் அமைச்சர். (செ-11)

## த.தே.கூட்டமை...

மாகும். அரசில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தேசத் துரோகத்திற்கு துணை போகக்கூடாது.

அது மட்டுமல்லாது அமைச்சர் திஸ்ஸ விதாரணவும் சர்வதேச பொருளாதார தடை வரும் என்கிறார். இந்த முக்கூட்டும் இணைந்து இலங்கையில் பிரிவினை வாதத்தை ஏற்படுத்தும் முயற்சிக்கு துணை போகின்றனர். இது தோற்கடிக்கப்பட வேண்டும்.

அதேவேளை ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு மாநாட்டில் எமக்கெதிரான பிரேரணை நிறைவேற்றப்படுவதும் சர்வதேச விசாரணையும் நிச்சயமாகும். ஆனால், அதற்கு முகம் கொடுப்பதற்கு அரச தயாராகுவது தெரியவில்லை. இதுவரையில் எதுவிதமான நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை என்றும் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்தார். (செ-11)

2014-ம் ஆண்டிற்கான
பதவி வெற்றிடங்கள்
U.S.A. நிறுவனம் தனது புதிய கிளை நிறுவனங்களை புதிய ஆண்டில் வட மாகாணத்தில் ஆரம்பிக்க உள்ளது.
அடிப்படைத் தகைமையான O/L உடன் எம்முடன் இணைந்து கொள்ள ஓர் அரியவாய்ப்பு
◆ அடிப்படைச் சம்பளம் ◆ தங்குமிட வசதி
◆ வெளிநாட்டில் பணிபுரியும் வாய்ப்புகள்.
(5197)
தொடர்பு : 0776219536, 0770771377

FLC FRENCH LANGUAGE CENTRE
யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.
FRENCH CLASSES
French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 750 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF Exam இல் வடக்கில் எம் மாணவர்கள் மட்டுமே சித்தி..... குறுகிய காலத்தில் DELF பரீட்சைக்கு தோற்றலாம் நேரத்தை வீணடிக்காது.. எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறார்கள்.......
ஆரம்பம்: 18.01.14 at 8am. No. 40, Palaly Road, ஆரியகுளம்.
ஆரம்பம்: 20.01.14 at 3pm. No.181, 1st Floor, Main Street, Nelliady.
Deutsch & Sinhala வகுப்புகளும் நடை பெறுகிறது... 0779 789 456

Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் எதிர்வரும் 2014 ஜனவரி 02,03, 04 ஆம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.
✶ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
✶ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
✶ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
✶ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
Vivekananda Academy
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393
(C-6019)

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2016 கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
05.01.2014 (8 மணி)
Acc M. அசோக்குமார்
Eco G. ஞானச்சந்திரன்
B. Stu S. கிருஷ்ணா
Tam குழந்தை.குகன் | H/C பத்மராஜா
Log வாக்ஷன் | Geo சர்மா
Hist தாஸ் | P/sci ஸ்ரீரங்கநாத்
Chir சுயந்தன் | Dra கஜீதரன்
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்
(C-6022)

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி யாழ்நகர்.
A/L 2016
கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகள்
ஆரம்பம் Jan 05 9.00Am
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
ஜனவரி 5 காலை 9 மணிக்கு
A/L 2016
கலை, வர்த்தக தொழில்நுட்ப பிரிவுகள்
BECON யாழ். நகர்
(சி/6015)

மானிப்பாய் Commercial Bank முன்பாக...
MSDC Micro System Development Centre
புதுவருடத்தை முன்னிட்டு கணனி, கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் போன் வகைகள் போன்றவற்றை நம்ப முடியாத விலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்....



Huawei Dongle 2999/-



Pen Drive 4Gb 899/- 8Gb 999/-
Dual Core 2.4Ghz
RAM DDR II -1Gb
Hard Disk -80Gb
DVD Combo
Dell 17" Moniter
Keyboard
Mouse
UPS 650w
Full Set 27000/=
3 நாட்கள் மட்டுமே



Phone 2500/- upto
Contact 077 2487082
Jaffna Road, Manipay.
(C-6035)

புத்தாண்டுப் பரிசு
எம்மால் மட்டுமே இது சாத்தியம்
5 மாதங்களில் வெற்றி பெறலாம் (நிபந்தனைகளுடன்)
மீண்டும் புதிய வடிவத்தில், புதிய சட்ட ஆளணியினரோடு
ஆஸ்திரேலியா குடும்ப விசா
(விசா வகை 888)
55 வயதிற்குட்பட்ட குடும்பத் தலைவன் / தலைவி, விண்ணப்பிக்கலாம். 2 வருட விசா பெற்று PR பெறும் வாய்ப்பு. குடும்பத்தோடு குடிபெயர முத்தான வாய்ப்பு.
✦ முன்னர் வேறுவகை விசாக்களிற்கு ஆலோசனை பெற்றவர்கள். இலவசமாக இவ் ஆலோசனை பெறும் சந்தர்ப்பம். (நிபந்தனைகளுடன்)
கனடா, இத்தாலி, போலந்து விசா ஆலோசனைகளிற்கு புத்தாண்டு தினத்தன்று 20% கட்டணக்கழிவு
(C-6016)
திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com

G.C.E(O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!
விசேட கட்டணக் கழிவுகள்
பல்கலைக்கழக கல்வி, வேலைவாய்ப்பு, வெளிநாட்டில் உயர்கல்வி, ஏனைய கற்கை நெறிகளை மேற்கொள்ள காத்திருக்கிறீர்களா?



ஆங்கில அறிவு இல்லாமல் இவை எதுவுமே சாத்தியப்படாது.
சர்வதேச தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் உங்களுக்காக எமது நிறுவனம் வழங்கும்
SPOKEN ENGLISH WITH GRAMMAR (Quick Learning Course) (1½ Months)
DIPLOMA IN ENGLISH (2 Months)
✖ இப்பாடநெறிகளை பூர்த்தி செய்பவர்கள் City & Guilds இன் English examக்கு தோற்ற முடியும்.
✖ Birtish Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சைகளுக்கும் தோற்ற முடியும்.
✖ Excellent Teachers' Panel & Individual attention
✖ எமது நிறுவனம் City & Guilds, British Council அங்கீகாரம் பெற்ற முகவர்கள்
Batch1: 06-01-2014
Batch2: 11-01-2014
Batch3: 15-01-2014
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எமமைத் தொடர்பு கொள்ளவும்.
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15, Sirambiyady Lane, (Off Stanley Road), Jaffna. Tel: 021-2224550
No.3, 6th Lane, Vairavar Kovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel: 024-324526
HotLines: 0777222422, 0714299935, 0777730074
(C-6013)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org